நிர்மலாவின்

பைந்தமிழ்க் கோவை

முதற் புத்தகம்

நான்காம் படிவம் - பொது

தொகுத்தோர்:

வித்துவான். K. T. நீலகண்டன், M.A.

வித்துவான். A. சங்கரநாராயணன், M. A., B. T.

நிர்மலா பப்ளிஷிங் ஹவுஸ்,

சேலம்.

பதிப்புரிமை] 1954 [விலை 1—4—0

முதற் பதிப்பு 1954.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
133658
சென்னை-600 008.

ராஜன் எலக்ட்ரிக் பிரஸ் சென்னை - 1.

முன்னுரை

நிர்மலாவின் 'பைந்தமிழ்க் கோவை' என்னும் பெயருடன் வெளிவரும் இச்செய்யுள் உரைநடைக் கோவை, **நான்காம் படிவம் பொதுப் பகுதிக்கு** உரியது. அரசியலார் *4-7-1952*-ல் வெளியிட்ட பாட திட்டத்தை யொட்டிக் கோக்கப்பட்டது.

செய்யுள் பகுதிக்கு ஆசிரியர் குறிப்பு, நூலின் விளக்கம் அருஞ் சொற்பொருள் முதலியன சேர்க்கப்பட்டுள்ளன.

தங்கள் கட்டுரைகளையும் பாடல்களையும் இந்நூலில் சேர்த்துக் கொள்ளத் தம் இசைவு தந்தருளிய சான்றோர்க்கு யாம் கடப்பாடுடையோம். இந்நூலைச் சிறந்த முறையில் வெளியிட்ட **நிர்மலா பதிப்பகத்தாருக்கு** எம் உளமார்ந்த நன்றி.

இந்நூலைத் தமிழாசிரியத் தோழர்களும் தலைமையாசிரியர்களும் அன்புடன் ஏற்றுப் பள்ளிகளில் பாட நூலாக வைத்து எமக்கு ஊக்கம் அளிக்குமாறு வேண்டுகிறோம்.

K. T. நீலகண்டன்
A. சங்கர நாராயணன்

உள்ளுறை

செய்யுட் கோவை

எண்	பொருள்		பக்கம்
I.	வாழ்த்து:		
	1. கடவுள் வாழ்த்து	...	1
	2. தமிழ்த்தாய் வாழ்த்து	...	1
II.	அறவுரை:		
	1. திருக்குறள்	...	2
	2. நாலடியார்	...	3
	3. அறநெறிச்சாரம்	...	4
III.	கதை:		
	1. நளவெண்பா	...	5
	2. குசேலோபாக்கியானம்	....	8
	3. ஆசிய ஜோதி	...	11
	4. பாஞ்சாலி சபதம்	...	14
IV.	சிறு நூல்கள்:		
	1. திருவேங்கடத் தந்தாதி	...	15
	2. நால்வர் நான் மணிமாலை	...	16
	3. மீனாட்சியம்மை குறம்	...	17
	4. முக்கூடற்பள்ளு	...	17
	5. திருவருணைக்கலம்பகம்	...	18
V.	பல்வகைப் பாடல்கள்:		
	1. அறிவே தெய்வம்	...	18
	2. இளந்தமிழருக்கு	...	19
	3. தமிழின் இனிமை	...	19
	4. விண்ணப்பம்	...	20
	செய்யுட் பகுதி — குறிப்புரை	...	21

உள்ளுறை

உரை நடைக் கோவை

எண்	பொருள்	பக்கம்
1.	இளங்கோவடிகளும் இயற்கைப் புனேவும் நாவலர். பண்டித. ந. மு. வேங்கடசாமி நாட்டார், அவர்கள். ...	33
2.	சென்னைக் கடற்கரை பேராசிரியர். டாக்டர். A. C. சிதம்பரநாதஞ் செட்டியார், அவர்கள். M. A. Ph., D. ...	37
3.	இளங்கோ பேராசிரியர். டாக்டர். மு. வரதராசனுர், அவர்கள். M. A., M. O. L., Ph. D. ...	43
4.	அரிக்கமேடு பேராசிரியர். டாக்டர். மா. இராசமாணிக்கம் பிள்ளை, அவர்கள். M. A., M. O. L., L. T. Ph. D	48
5.	தமிழன் கண்ட மலேயா வித்துவான். அ. மு. பரமசிவானந்தம், அவர்கள். B. O. L. M. Litt., ...	55
6.	பணமும் பஞ்சமும் டாக்டர். சர். R. K. சண்முகம் செட்டியார், அவர்கள். B. A., B. L., ...	59
7.	கம்பர் காட்டும் பெண்கள் பேராசிரியர். வித்துவான். கா. பொ. இரத்தினம் அவர்கள். B. A. (Hons) London., M. A. B. O. L., (Madras) ...	64
8.	இந்திய சிற்பங்கள் திருமதி. R. S. உருக்குமணி, அவர்கள். M. A.,	70
9.	எது நாகரிகம் ? வித்துவான். கோ. இளைய பெருமாள் அவர்கள்.	76
10.	நான் கண்ட ரஷியா சுவாமி சுத்தானந்த பாரதி அவர்கள். ...	80
11.	மின்சாரம் பேராசிரியர். S. D. சற்குணர், அவர்கள். B.A.	
12.	தென்றலும் தென் தமிழும் வித்துவான். K. T. நீலகண்டன், அவர்கள். M. A.	91

செய்யுட் கோவை

I. வாழ்த்து.

1. திருத்தாண்டகம்.

விண்ணாகி நிலனாகி விசும்புமாகி வேலைசூழ்ஞாலத்தார்
[விரும்புகின்ற
எண்ணாகி எழுத்தாகி இயல்புமாகி ஏழுலகுந்
[தொழுதேத்திக் காணநின்ற
கண்ணாகி மணியாகி காட்சியாகி காதலித்தங்கடியார்கள்
[பரவ நின்ற
பண்ணாகி இன்னமுதாம் பாசூர்மேய பரஞ்சுடரைக்
[கண்டடியேன் உய்ந்தவாறே.

—திருநாவுக்கரசர்.

2. திருவருட்பா.

" உன்னைமறந் திடுவேனோ மறப்பறியேன் மறந்தால்
உயிர்விடுவேன் கணந்தறியே, னுன்னாணை யிதுநீ
என்னைமறந் திடுவாயோ மறந்திடுவா யெனில்யான்
என்னசெய்வேன் எங்குறுவேன் எவர்க்குரைப்பே
[னெந்தாய்
அன்னையினுந் தயவுடையாய் நீமறந்தா யெனினும்
அகிலமெலா மளித்திடுநின் னருள்மறவா தென்றே
இன்னுமிகக் களித்திங்கே யிருக்கின்றேன் மறவேல்
இதுதருணம் அருட்ஜோதி யெனக்குவிரைந் தருளே"

—இராமலிங்க அடிகள்.

1. தமிழ்த்தாய் வாழ்த்து.

"தமிழினிய தெய்வதமே! மொழிகள்குலத்
தனிவிளக்கே தகவெழில் மெய்சீர்த்த சொல்லின்
அமிழ்து விழைந்தடுத்த பல புலவரெலாம்
அசையலையைக் கடைந்தபொழு தழகினோங்கும்

துமியினிடை யெழுந்தோளிருஞ் செல்வி! அறிவெனுமலவன்.
துணைவியருண் முதல்வி தூய்மை
கமழ்கவிதை உலகுபடை கவிஞருளங் கனிவிளக்கும்
காதல்வளர் கன்னி வாழி"

—நாவலர். சு. சோமசுந்தர பாரதியார்

II. அறவுரை

1. திருக்குறள்.

1. ஊக்கமுடைமை.

1. உடைய ரெனப்படுவ தூக்கமஃ தில்லா
ருடைய துடையரோ மற்று.

2. உள்ள முடைமை யுடைமை பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும்.

3. ஆக்க மிழந்தேமென் றல்லாவா ரூக்க
மொருவந்தங் கைத்துடை யார்.

4. ஆக்க மதர்வினய்ச் செல்லு மசைவிலா
வூக்க முடையா னுழை.

5. வெள்ளத் தனைய மலர்நீட்ட மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு.

6. உள்ளுவ தெல்லா முயர்வுள்ளன் மற்றது
தள்ளினுந் தள்ளாமை நீர்த்து.

7. சிதை விடத் தொல்கா குரவோர் புதையம்பிற்
பட்டுப்பா டூன்றுங் களிறு.

8. உள்ள மிலாதவ ரெய்தா ருலகத்து
வள்ளிய மென்னுஞ் செருக்கு.

9. பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின்.

10. உரமொருவற் குள்ள வெறுக்கையஃ தில்லார்
மரமக் களாதலே வேறு.

2. சொல்வன்மை.

1. நாநல மென்னு நலனுடைமை யந்நலம்
யாநலத் துள்ள தூஉ மன்று.

2. ஆக்கமுங் கேடு மதனுல் வருதலாற்
காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு.

3. கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல்.

4. திறனறிந்து சொல்லுக சொல்லை யறனும்
பொருளு மதனினூஉங் கில்.

5. சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொ லச்சொல்லை
வெல்லுஞ்சொ லின்மை யறிந்து.

6. வேட்பத்தாஞ் சொல்லிப் பிறர்சொற் பயன்கோடன்
மாட்சியின் மாசற்ருர் கோள்.

7. சொலல்வல்லன் சோர்வில னஞ்சா னவனை
யிகல்வெல்லல் யார்க்கு மரிது.

8. விரைந்து தொழில்கேட்கு ஞால நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்.

9. பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்ல றேற்ரு தவர்.

10. இணருழ்த்து நாரு மலரனையர் கற்ற
துணர விரித்துரையா தார்.

2. நாலடியார்

சினமின்மை.

1. நெடுங்கால மோடினு நீசர் வெகுளி
கெடுங்கால மின்றிப் பரக்கு — மடுங்காலை
நீர்கொண்ட வெப்பம் போற்ருனே தணியுமே
சீர்கொண்ட சான்ருேர் சினம்.

பொறையுடைமை.

2. அறிவதறிந் தடங்கி யஞ்சு வதஞ்சி
யுறுவது லகுவப்பச் செய்து — பெறுவதனுல்
இன்புற்று வாழுமியல் புடையார் எஞ்ஞான்றுந்
துன்புற்று வாழ்த லரிது.

மெய்ம்மை.

3. ஆவேறு உருவின வாயினுமா பயந்த
பால்வேறு உருவின வல்லவாம் — பால்போல்
ஒருதன்மைத் தாகு மறநெறி யாபோல்
உருவு பலகொள லீங்கு.

மானம்.

4. கடமா தொலேச்சிய கானுறை வேங்கை
இடம்வீழ்ந்த துண்ணு திறக்கும் — இடமுடைய
வானகங் கையுறினுங் வேண்டார் விழுமியோர்
மான மழுங்க வரின்.

கீழ்மை.

5. பொற்கலத் தூட்டிப் புறந்தரினு நாய்பிற
ரெச்சிற் கிமையாது பார்த்திருக்கு — மச்சீர்
பெருமை யுடைத்தாக் கொளினுங்கீழ் செய்யுங்
கருமங்கள் வேறு படும்.

3. அறநெறிச்சாரம்

எண்வகைச் செருக்கு.

1. அறிவுடைமை மீக்கூற்றம் ஆன குலனே
உறுவலி நற்றவம் ஓங்கிய செல்வம்
பொறிவனப்பின் எம்போல்வா ரில்லென்னும் எட்டும்
இறுதிக்கண் ஏமாப் பில.

தன்னலமற்ற பெரியோர்.

2. காலொடு கையமுக்கிப் பிள்ளையை வாய்நெரித்துப்
பாலொடு நெய்பெய்யும் தாயனையர் — சால
அடக்கத்தை வேண்டி அறன்வலிது நாளும்
கொடுத்துமேற் கொண்டொழுகு வார்.

மனத்தையடக்கியவன் மாபெருந்தெய்வம்.

3. தன்னெக்குந் தெய்வம் பிறிதில்லை தான் றன்னைப்
பின்னை மனமறப் பெற்றுனேல் — என்னை
எழுத்தெண்ணே நோக்கி இருமையும் கண்டாங்
கருட்கண்ணே நிற்ப தறிவு.

சினம் கடிதல்.

4. உயிரும் உடம்பும் பிரிவுண்மை உள்ளிச்
செயிரும் சினமும் கடிந்து — பயரிடைப்
புற்களைந்து நெற்பயன் கொள்ளும் ஒருவன்போல்
நற்பயன் கொண்டிருக்கற் பாற்று.

நடுநிலை காணும் முறை.

5. காய்தல் உவத்தல் அகற்றி ஒருபொருட்கண்
ஆய்தல் அறிவுடையார் கண்ணதே — காய்வதன்கண்
உற்றகுணந் தோன்றுத தாகும் உவப்பதன்கண்
குற்றமுந் தோன்றுக் கெடும்.

III. கதை

1. நளவெண்பா.

[கலி நீங்கு காண்டம்]

புரோகிதன் நளனைத் தேடல்.

1. மின்னுடு மால்வரையும் வேலையும் வேலைசூழ்
நன்னுடுங் கானகமும் நாடினுன்—மன்னு
கடந்தாழ் நளியானைக் காவலனைத் தேடி
யடைந்தா னயோத்தி நகர்.

இருதுபன்னன் அவையில் புரோகிதன் வினுதல்.

2. கானகத்துக் காதலியைக் காரிருளிற் கைவிட்டுப்
போனதூஉம் வேந்தற்குப் போதுமோ—தானென்று
சாற்றினு னந்தவுரை தார்வேந்தன் தன்செவியில்
ஏற்றினுன் வந்தா னெதிர்.

நளன் விடை.

3. ஒண்டொடி தன்னை யுறக்கத்தே நீத்ததூஉம்
பண்டை விதியின் பயனேகாண்—தண்டரளப்
பூத்தாம வெண்குடையான் பொன்மகளைத் தன்மனத்தே
நீத்தானென் றையுறேல் நீ.

**அயோத்தி யரசனுக்குத் தமயந்தியின்
இரண்டாஞ் சுயம்வரம் தெரிவித்தல்.**

4. மீண்டோர் சுயம்வரத்தை வீமன்றிரு மடந்தை
பூண்டாளென் றந்தணநீ, போயுரைத்தால்—நீண்ட
கொடைவேந்தற் கித்தூரந் தேர்க்கோலங் கொள்வான்
படைவேந்தன் என்றாள் பரிந்து.

நளன் இருதுபன்னனுக்குச் சாரத்தியஞ் செய்தல்.

5. மேலாடை வீழ்ந்த தெடுவென்றான் அவ்வளவில்
நாலாறு காதம் நடந்ததே—தோலாமை
மேல்கொண்டா னேறிவர வெம்மைக் கலிச்சூதின்
மால்கொண்டான் கோல்கொண்ட மா.

கலி நளனைவிட்டு நீங்குதல்.

6. வண்டார் வளவயல்சூழ் மள்ளுவநாட் டெங்கோமான்
தண்டார் புனைசந் திரன்சுவர்க்கி—கொண்டாடும்
பாவலன்பால் நின்ற பசிபோல நீங்கிற்றே
காவலன்பால் நின்ற கலி.

இருதுபன்னன் வீமன் நகரம் அடைதல்.

7. ஆமை முதுகில் அலவன் துயில்கொள்ளும்
காமர் நெடுநாடு கைவிட்டு—வீமன்றன்
பொன்னகரி சென்றடைந்தான் போர்வேட் டெழுங்
—கூற்றம்
அன்னகரி யொன்றுடையான் ஆங்கு.

நளன் மடப்பள்ளி செல்லல்.

8. ஆதி நெடுந்தேர்ப் பரிவிட் டவையாற்றிக்
கோதி லடிசிற் குறைமுடிப்பான்—மேதிக்
கடைவாயிற் கார்நீலங் கண்விழிக்கு நாடன்
மடைவாயிற் புக்கான் மதித்து.

தமயந்தி தம் மக்களைத் தேர்ப்பாகனாகிய நளனிடத்தில் விடல்.

9. இடைச்சுரத்தில் தன்னை யிடையிருளில் நீத்த
கொடைத்தொழிலான் என்றயிர்த்த கோமான்—
மடைத்தொழில்கள்
செய்கின்ற வெல்லாந் தெரிந்துணர்ந்து வாவென்றாள்
நைகின்ற நெஞ்சாள் நயந்து.

10. கோதை நெடுவேற் குமரனையுந் தங்கையையும்
ஆதி யரச னருகாகப்—போத
விளையாட விட்டவன்றன் மேற்செயல் நாடென்றாள்
வளையாடுங் கையாள் மதித்து.

நளன் மக்களைத் தழுவி வினாதல்.

11. மக்களைமுன் காணா மனநடுங்கா வெய்துயிராப்
புக்கெடுத்து வீரப் புயத்தணையா—மக்காள்நீர்
எம்மக்கள் போல்கின்றீர் யார்மக்கள் என்றுரைத்தான்
வனமக் களியானை மன்.

மக்கள் மறுமொழி கூறல்.

12. மன்ன னிடதத்தார் வாழ்வேந்தன் மக்கள்யாம்
அன்னைதனைக் கான்விட் டவனேக—இந்நகர்க்கே
வாழ்கின்றோ மெங்கள் வளநாடு மற்றொருவன்
ஆள்கின்றா னென்றா ரழுது.

நளன் வினாதல்.

13. உங்கள் அரசொருவன் ஆளநீ ரோடிப்போந்
திங்கண் உறைதல் இழுக்கன்றோ—செங்கை
வளவரசே யென்றுரைத்தான் மாதவத்தாற் பெற்ற
இளவரசை நோக்கி யெடுத்து.

மக்கள் சீற்றவுரை.

14. நெஞ்சாலிம் மாற்றம் நினைந்துரைக்க நீயல்லா
தஞ்சாரோ மன்னர் அடுமடையா—எஞ்சாது
தீமையே கொண்ட சிறுதொழிலாய் எங்கோமான்
வாய்மையே கண்டாய் வலி.

நளன் சொல்லல்.

15. மன்னர் பெருமை மடைய ரறிவரோ
உன்னை யறியா துரைசெய்த—என்னை
முனிந்தருள லென்று முடிசாய்த்து நின்றான்
கனிந்துருகி நீர்வாரக் கண்.

தமயந்தி வீமனிடம் தன் கணவனைப் பற்றிக் கூறல்.

16. மற்றித் திருநகர்க்கே வந்தடைந்த மன்னவற்குக்
கொற்றத் தனித்தேருங் கொண்டணைந்து—மற்றும்
மடைத்தொழிலே செய்கின்ற மன்னவன்கா ணெங்கள்
கொடைத்தொழிலான் என்றாள் குறித்து.

வீமன் நளனை நோக்கிச் சொல்லல்.

17. பைந்தலைய நாக பணமென்று பூகத்தின்
ஐந்தலையின் பாளைதனை யையுற்று—மந்தி
தெளியா திருக்குந் திருநாடா உன்னை
ஒளியாது காட்டுன் னுரு.

நளன் மாறு வேடம் நீங்கல்.

18. மிக்கோ னுலகளந்த மெய்யடியே சார்வாகப்
புக்கோ ரருவினைபோற் போயிற்றே—அக்காலம்
கானகத்தே காதலியை நீத்துக் கரந்துறையும்
மானகத்தேர்ப் பாகன் வடிவு.

—**புகழேந்தி.**

---

2. குசேலோபாக்கியானம்

குசேலர் கண்ணனைக் காணுதல்.

1. எண்ணனைக் கிலங்குமார்பம் ஈத்தருள் பிரானை நீல
வண்ணனைத் திகிரிசங்கம் வலமிட முறக்கொண் டானை
மண்ணனைத் தும்புரக்கும் வாசுதே வனைம ணக்குங்
கண்ணனைத் துளவத்தாமக் கண்ணனைக் கண்ணிற்
கண்டான்.

கண்ணன் குசேலனை வணங்கல்.

2. காண்டலும் உவகை பூத்துக் கால்விசை கொடுநடந்தான்
ஆண்டகை யவனுங் கண்ணுற் றணையுடைத்
தெழுநீத்தம் போல்

நீண்டபூம் பள்ளிநீத்து நிலவுபே ரன்புபொங்கப்
பூண்டமா தவன்முன்சென்று பொன்னடிவணங்கினுனல்.

3. திலக மண்டோய வையன் திருவடி வணங்கிப் பின்னர்
நிலவுமெய்ப் புளகம் போர்த்து நிரம்புறத் தழுவிக்
கொண்டான்
குலமறைத் தலைவ னென்னுங் கூர்ந்தமெய் நண்ப
னென்றும்
மலர்தலை யுலகம் கூறும் வாய்மை காத்தருளினுனே.

கண்ணன் குசேலனுக்கு வழிபாடியற்றல்.

4. அங்கொரு மாடத் துள்ளால் அரதந பீடத் தும்பர்
மங்கல மறைவலாளன் மகிழ்ந்தெழுந் தருளப் பண்ணி
பொங்கு பொற்குடம் பூரித்த புதியமஞ்சனநீ ராட்டித்
திங்களங் கதிரே யென்னத் திகழ்ந்த வொற்றுடை சாத்தி.

5. கதிரெனக் கதிர்க்குஞ் செம்பொற் கவின் செய்
பட்டாடை சாத்திப்
பிதிர்கருப் பூரநானம் பெய்விரை சாந்தஞ் சாத்தி
முதிரொளி விரிக்குந் தண்ணென் முத்துவக் கதையும்
சாத்தி
அதிர்தர வண்டுந் தேனும் அலங்குபூந் தொடையல்
சாத்தி.

6. விரைதரு தூமங் காட்டி மேவுநெய் விளக்கங்காட்டி
உரைபெறு பளித நீரா சனக்கல மொளிரச் சுற்றித்
திரைசெய்நல் லமுத மன்ன தீஞ்சுவை யுணவு நல்கிக்
கரையறு தவத்தோன் வாயுங் கையுமொள் ளறலிற்பூசி.

7. வழிநடந் திளைத்த வேயிம் மலரடி யிரண்டு மென்று
கழிமகிழ் சிறப்ப மெல்ல வருடினுன் கமலக் கண்ணன்
பழியில்பல் லுபசாரங்கள் பண்ணவுந் தெரியாஞகி
ஒழிவறு தவக்குசேல னென்றும்பே சாதிருந்தான்.

8. இன்னண மிவனிருப்ப இவன்வர வனைத்துஞ் சொல்லா
முன்னரே யுணர்ந்து கொண்ட முழுமுதற் கண்ண
னென்பான்
மன்னிய வுவகை பூத்து வழிதரு மனத்தனுகி
அன்னவன் வதன நோக்கி யமையவின் னனசொல்வானுல்.

9. பொன்னுள்ளான் பூமியுள்ளான் புந்தியுள்ளா னயிடினும்
என்னுள்ளா னவனவ னிருந்தவர்தம் நட்பிலனேற்
பொன்னில்லான் பூமியில்லான் புந்தியில்ல னயிடினும்
என்னில்லா னவனவ னிருந்தவர்தம் நட்புளனேல்.

10. பேயோடு பழகுறினும் பிரிவதரி தரிதென்று
தூயோர்கண் மொழிவராற் றூயோரும் புகழ்தூயோர்
ஆயோர்கள் பெருநட்பை யருந்தவத்தாற் பெறலன்றி
ஏயோவெண் மையிற்கிடைப்பி னிகழ்வரோ
விகழ்வில்லார்.

11. கூடுதற்குக் கூடாத கூட்டத்துப் படுநட்பு
வீடுதற்குத் தக்கதாய் நாடோறு மெலிந் தொழியும்
நீடுதற்குத் தக்கது நன்னெறி நின்ருேர் நட்பொன்றே
தேடுதற்குக் கிடையாத திரவியமு மஃதாமால்.

12. முத்திக்கு வித்தாகு முழுதுணர்ந்தோர் பெருநட்பே
தித்திக்கு நாடோறுந் தேவர் பெறற் கருந்திருவும்
சித்திக்கும் படியருளுஞ் செப்பரிதா லதுநிற்க
எத்திக்கும் புகழுநினக் கியன்மணநன் காயிற்றே.

13. நின்னுடைய மனைக்கிழத்தி நிரம்பு பெரு நீர்மையளே
மன்னுடைய சொற்காத்துச் சோர்விலா மாண்பினளே
தன்னுடைய வுயிரா நின்றனைப் பேணுந் தன்மையளே
உன்னுடைய வருவாய்க்குத் தக்க செலவு ஞற்றுவளே.

கண்ணன் குசேலனிடம் சிற்றுரைக் கேட்டல்.

14. பந்தனை யகன்ற மேலோய் பற்பல நாட்குப் பின்பு
வந்தனை யெனக்கென் கொண்டு வந்தனை யதனையின்னே
தந்தனை யாயினன்று தருசுவைப் பக்கணத் தென்
சிந்தனை நின்ற தென்ருன் றெரிவரும் வஞ்சக் கள்வன்.

கண்ணன் குசேலனது கந்தையில் அவல் முடிச்சைக் காணல்.

15. நடலைதீர்ந் தவன்மெய்ப் போர்த்த நாள்பல கண்ட
கந்தைப்
படர்தலைச் சுருக்கி வாங்கிப் பாங்குவைத் தினிதி னய்ந்து
விடலருங் கற்பு வாய்த்த மின்னனுர் வணங்குந் தெய்வந்
திடமுற முடிந்து வைத்த சிறுபொதி கண்டு கொண்டான்.

கண்ணன் அவல் அயிலுதல்.

16. மலிதரு மன்பின் வந்த வண்பொதி யவிழ்த்து நோக்கி
வலிதரு மவற்று ணன்று வாய்த்தது நமக்கி தென்னா
ஒலிதரு கழற்கா லைய னொருபிடி யவலைக் காதல்
பொலிதர வெடுத்து வாயிற் போகட்டுக் கொண்டான்
மாதோ.

—**வல்லூர் தேவராஜ பிள்ளை.**

3. ஆசிய ஜோதி

[புத்தரும் ஏழைச் சிறுவனும்]

[அரண்மனையிலிருந்து வெளிப்பட்டுச் சென்ற புத்தர் வழி நடந்த களைப்பால் சோர்ந்து கிடந்தார். அவரைக் கண்ட ஓர் இடைச் சிறுவன், தான் தாழ்ந்த குலத்தினனாதல் பற்றித் தன் கலத்தில் பால் கறந்து அவருக்குக் கொடுக்கத் தயங்கினான். பிறப்பினால் உயர்வு தாழ்வுகள் பாராட்டலாகாது என்று புத்தர் அவனுக்குப் போதித்த வரலாறு இதனுள் கூறப்படுகிறது.]

புத்தர் மயங்கி வீழ்தல்.

புண்ணிய மூர்த்தி புத்தமா முனிவன்
உண்மையை உணர்ந்திவ் வுலகினி லென்றும்
அழியா இன்பம் அடையும் அவாவினால்
மன்னர் வாழ்வையும் மறுத்தவ னாகித்
தந்தையை மறந்து தனயனைத் துறந்து
மங்கை அசோதை மதிமுகம் நீத்து
நள்ளிர வதனில் நன்னகர் நீங்கி
உண்ணும் உணவும் உறக்கமும் இன்றி
இரவும் பகலும் இடைவிடா தெங்கும்
நடந்து மெலிந்து நலிவுற் றொருநாள்
வேனில் வெயிலில் வெந்தெரி கானலில்
கைகால் தளர்ந்து கண்களும் மூடி
மூச்சும் அடங்கி முகமும் வெளிறி
உயிரும் உடம்பில் ஊசலாட
விஞ்சிய மயக்கால் வீழ்ந்து கிடந்தனன்.

சிறுவன் காணுதல்.

(வேறு)

ஆடுகள் மேய்த்துவரும்—ஒருவன்
ஆயர் குலச் சிறுவன்
வாடிக் கிடந்தவனை—செல்லும்
வழியின் மீது கண்டான்.

அவன் செயல்.

வையகம் வாழ்ந்திடவே—பிறந்த
மாதவச் செல்வன் முகம்
வெய்யிலில் வெந்திடாமல்—தழைகள்
வெட்டி யருகில் நட்டான். 3

தெய்வ குலத்திவனை—எளியேன்
தீண்டலும் ஆகாதினிச்
செய்வதும் யாதெனவே—சிறிது
சிந்தை தயங்கி நின்றான். 4

உள்ளந் தெளிந்துடனே—வெள்ளாடு
ஒன்றை யழைத்து வந்து
வள்ளல் மயக்கொழிய—மடுவை
வாயில் கறந்து விட்டான். 5

நட்ட தழைகளெல்லாம்—வளர்ந்து
நாற்புற மும்கவிய
கட்டிய மாளிகை போல்—வனத்தில்
காட்சி யளித்த அம்மா. 6

பூவொடு காய்கனியும்—தளிரும்
பொலிந்து நிரப்பியங்கே
மேவு பல மணிகள்—இழைத்த
விதானமும் ஆன அம்மா. 7

ஐயனை இவ்வுலகம்—காணுதற்கு
அரியவோர் தெய்வ மெனக்
கைகள் தொழுது நின்றான்—சிறுவன்
களங்க மிலா வுளத்தான். 8

புத்தர் எழுந்து பால் கேட்டல்.

நிலத்திற் கிடந்த ஐயன் — மெல்ல
நிமிர்ந்து தலை தூக்கிக்
“கலத்தினிலே கொஞ்சம் — பாலைக்
கறந்து தருவாய்” என்றான். 9

“ஐயையோ! ஆகா” தென்றான் — சிறுவன்
“அண்ணலே! யானும் உனைக்
கையினால் தீண்டவொண்ணா — இடையன் ஓர்
காட்டு மனிதன்” என்றான். 10

புத்தர் அறிவுறுத்தல்.

உலகம் புகழ் பெரியோன் — இந்த
உரையினைக் கேட்டந் நாள்
அலகில் கருணையினால் — சொன்ன
அமுத மொழி யிதுவாம். 11

இடர் வரும்போதும் — உள்ளம்
இரங்கிடும் போதும்
உடன் பிறந்தவர் போல் — மாந்தர்
உறவு கொள்வரப்பா. 12

ஓடும் உதிரத்தில் — வடிந்து
ஒழுகும் கண்ணீரில்
தேடிப் பார்த்தாலும் — சாதி
தெரிவ துண்டோ அப்பா. 13

எவர் உடம்பினிலும் — சிவப்பே
இரத்த நிறமப்பா
எவர் விழி நீர்க்கும் — உவர்ப்பே
இயற்கை குண மப்பா. 14

நெற்றியில் நீறும் — மார்பில்
நீண்ட பூணூலும்
பெற்றிவ் வுலகுதனில் — எவரும்
பிறந்த துண்டோ அப்பா. 15

பிறப்பினுல் எவர்க்கும் — உலகில்
பெருமை வாரா தப்பா
சிறப்பு வேண்டுமெனில் — நல்ல
செய்கை வேண்டுமப்பா. 16

நன்மை செய்பவரே — உலகம்
நாடும் மேற்குலத்தார்
தின்மை செய்பவரே — அண்டித்
தீண்ட ஒண்ணுதார். 17

சிறுவன் பால் தருதல்.

நிலத்துயர் ஞானி — இவை
நிகழ்த்தி "என் தம்பி!
கலத்தினிலே கொஞ்சம் — பாலைக்
கறந்து தா" என்ருன். 18

ஆயர் சிறுவனும் — கலத்தில்
அளிக்க வாங்கி யுண்டு
தாயினும் இனியன் — கொண்ட
தளர்ச்சி நீங்கினனே. 19

—கவிமணி. தேசிகவிநாயகம் பிள்ளை.

4. பாஞ்சாலி சபதம்

சூது மீட்டுந் தொடங்குதல்.

காயுருட்ட லானுர் — சூதுக்
களி தொடங்க லானுர்
மாயமுள்ள சகுனி — பின்னும்
வார்த்தை சொல்லுகின்ருன்:—
நீ யழித்த தெல்லாம் — பின்னும்
நின்னிடத்து மீளும்
ஒய்வடைந்திடாதே — தருமா
ஊக்க மெய்து கென்ருன்.

கோயிற் பூசை செய்வோர் — சிலையைக்
கொண்டு விற்றல் போலும்
வாயில் காத்து நிற்போன் — வீட்டை
வைத்திழத்தல் போலும்

ஆயிரங்களான — நீதி
யவையுணர்ந்த தருமன்
தேயம் வைத்திழந்தான் — சீச்சீ
சிறியர் செய்கை செய்தான்.

நாட்டு மாந்தரெல்லாம் — தம்போல்
நரர்களென்று கருதார்
ஆட்டு மந்தை யாமென்—றுலகை
அரச ரெண்ணி விட்டார்
காட்டு முண்மை நூல்கள் — பலதாங்
காட்டினார்களேனும்
நாட்டு ராஜ நீதி — மனிதர்
நன்கு செய்ய வில்லை.

ஓரஞ் செய்திடாமே—தருமத்
துறுதி கொன்றிடாமே
சோரஞ் செய்திடாமே—பிறரைத்
துயரில் வீழ்த்திடாமே
ஊரையாளு முறைமை—உலகில்
ஓர்புறத்து மில்லை
சாரமற்ற வார்த்தை—மேலே
சரிதை சொல்லுகின்றோம்.

—தேசீயகவி. சுப்பிரமணிய பாரதியார்.

IV. சிறு நூல்கள்

திருவேங்கடத் தந்தாதி.

1. திருவேங் கடத்து நிலைபெற்று நின்றன சிற்றன்னையால்
திருவேங் கடத்துத் தரைமேல் நடந்தன தாழ் பிறப்பின்
உருவேங் கடத்துக் குளத்தே யிருந்தன வுற்றழைக்க
வருவேங் கடத்தும் பியஞ்சலென் றோடின மால்கழலே.

2. மாலை மதிக்குஞ்சி யீசனும் போதனும் வாசவனும்
நூலை மதிக்கும் முனிவரும் தேவரும் நோக்கியந்தி
காலை மதிக்குள் வைத் தேத்துந்திருமலை கைம் மலையால்
வேலை மதிக்கும் பெருமா னுறைதிரு வேங்கடமே.

3. வேங்கட மாலே யவியா மதிவிளக் கேற்றியங்க
மாங்கட மாலேயமாக்கி வைத்தோமவன் சேவடிக்கே
தீங்கட மாலேக் கவிபுனைந் தோமிதிற் சீரியதே
யாங்கட மாலேயி ராவத மேறி யிருக்குமதே.

4. இருக்கா ரணஞ் சொல்லும் எப்பொருள் இன்பமும் எப்பொருட்கும்
கருக்கா ரணமு நற் றுயுநற்றந்தையும் கஞ்சச் செல்வப்
பெருக்கா ரணங்கின் தலேவனும் ஆதிப் பெருந் தெய்வமும்
மருக்கா ரணவும் பொழில் வட வேங்கட மாயவனே.

5. மாயவன் கண்ணன் மணிவண்ணன் கேசவன் மண்ணும் விண்ணும்
தாயவன் கண்ணன் கமல மொப்பான் சரத்தா லிலங்கைத்
தீயவன் கண்ணன் சிரமறுத் தான் திருவேங்கடத்துத்
தூயவன் கண்ணன் புடையார்க்கு வைகுந்தந் தூரமன்றே.

—அழகிய மணவாள தாசர்.

2. நால்வர் நான்மணி மாலே

சம்பந்தர்.

1. பயனுகும் நல்லாண் பனேக்குவிடத் திற்கு
மயிலாகும் நோய்க்கு மருந்தாம்—உயிராகுஞ்
சிந்தும் எலும்பிற்குச் சிரபுரத்து நாவலன்
சம்பந்தன் இயம்புதிருப் பாட்டு.

சொல்லரசர்.

2. பாட்டான் மறைபுகழும் பிறை சூடியைப் பாடிமகிழ்
ஊட்டா மகிழ் சொல் லிறைவனேப்பாடி உவப்புறுக்க
வேட்டான் மலிபெருங் கல்லவன்போல மிதப்பனெனப்
பூட்டா மறிதிரை வார்கடற்கேவிழப் போதுவனே.

ஆரூரர்.

3. போதமுண்ட பிள்ளேஎன்பு பொருகண்மா துசெய்ததோ
காதல் கொண்டு சொல்லின் மன்னர் கன்மிதப்ப உய்த்ததோ
வாய்திறந்து முதலே கக்க மகனே நீயழைத்ததோ
யாது நம்பி அரிது நன்று எனக்கியம்ப வேண்டுமே.

மாணிக்கவாசகர்

4\. வேண்டும் நின் அடியார் மெய்யன் பெனக்கு
அருள்செய் ! சிவனே அலங்தேன் அந்தோ
முறையோ ! முறையோ ! இறையோனே என்று
அழுது செம்பொன் அம்பலக் கூத்தன்
அருளாற் பெற்ற அன்பினில் ஒருசிறிது
அடிய னேற்கும் அருளல் வேண்டும்
நீயே கோடல் நின்னருட் பெருக்கிற்கு
ஏற்ற தன்றிள ஏறுகந் தேறியைப்
பரிமா மிசைவரப் பண்ணிய வித்தக !
திருந்திய வேத சிரப்பொருள் முழுதும்
பெருந்துறை இடத்துப் பெருஞ்சீர்க்
குறுந்துறு நிழலிற் கொள்ளை கொள்வோயே.

— **துறைமங்கலம். சிவப்பிரகாச சுவாமிகள்.**

3. மீனுட்சியம்மை குறம்

குங்குமஞ்சந் தனக்குழம்பிற் குழைத்துத்தரை மெழுகிக்
கோலமிட்டுக் குங்கிலியக் கொழும்புகையுங் காட்டிக்
செங்கனக நவமணிகள் திசைநான்கும் பரப்பித்
தென்மேலை மூலைதனிற் பிள்ளையார் வைத்துத்
பொங்குநறு மலரறுகோ டைங்கரர்க்குச் சாத்திப்
புழுகுநெய்வார்த் திடுவிளக்கு நிறைநாழி வைத்து
மங்கையருக் கரசியெங்க ளங்கயற்கண் ணமுதை
மனத்துள்வைத்து நினைத்தகுறி யினிச்சொலக்கே ளம்மே.

— குமர குருபரர்.

4. முக்கூடற் பள்ளு

மழைக் குறி.

மேகமெல்லாம் ஒன்ருய்க்கூடித் தான்கறுக்குதே—மெத்த
மின்னல் மின்ன வாசவன்கை வில்லெடுக்குதே
நாகரிகப் பொதியமலைக் காற்றடிக்குதே—கொண்டல்
நாலு திக்கும் கோடையிடி தானிடிக்குதே

ஏகபோக மாமரத்தில் குயில்கள் கூவுதே—மழைக்
கேற்றமாம் சொறித்தவளை கூப்பிடுகுதே
ஆகையினுல் எங்கள்திரு முக்கூடல்—நகரில்
அந்திநேர மெல்லா மழைவந்து பெய்யுதே.

5. திருவருணைக் கலம்பகம்

அம்மானை.

நாராயண னறியா நாதரருணேசருக்கு
வாரார் சிலைகலை மெய் மாதங்க மம்மானை
வாரார் சிலைகலை மெய் மாதங்க மாமாயின்
ஆராயுங் காலெடுப்பதைய மன்ருே அம்மானை
யன்னமறியா ரெடுப்பதையமோ அம்மானை

—எல்லப்ப நாவலர்.

V. பலவகைப் பாடல்கள்

1. அறிவே தெய்வம்.

கண்ணிகள்

(1) ஆயிரந் தெய்வங்க ளுண்டென்று தேடி
அலையு மறிவிலிகாள் — பல்
லாயிரம் வேதம் அறிவொன்றே தெய்வமுண்
டாமெனல் கேளீரோ ?

(2) மாடனைக் காடனை வேடனைப் போற்றி
மயங்கு மதியிலிகாள் — எத
னூடு நின்ருேங்கும் அறிவொன்றே தெய்வமென்
ருேதி யறியீரோ ?

(3) சுத்த அறிவே சிவமென்று கூறுஞ்
சுருதிகள் கேளீரோ — பல
பித்த மதங்களிலே தடு மாறிப்
பெருமை யழி வீரோ.

(4) நாமம்பல்கோடி யோருண்மைக் குளவென்று
நான்மறை கூறிடுமே — ஆங்கோர்
நாமத்தை நீருண்மை யென்று கொள்வீரென்றந்
நான்மறை கண்டிலதே.

(5) கவலை துறந்திங்கு வாழ்வது வீடென்று
காட்டு மறைகளெலாம் — நீவிர்
அவலை நினைந்துமி மெல்லுதல் போலிங்
கவங்கள் புரிவீரோ ?

—பாரதியார்.

2. இளந்தமிழருக்கு

"பணமிருந்தார் என்பதற் காய்ப்
பணிந்திடாத மேன்மையும்
பயமுறுத்தல் என்பதற்கே
பயந்திடாத பான்மையும்
குணமிருந்தார் யாவரேனும்
போற்றுகின்ற கொள்கையும்
குற்றமுள்ளார் யாரென்றாலும்
இடித்துக் கூறும் தீரமும்
இனமிருந்தார் ஏழையென்று
கைவிடாத ஏற்றமும்
இழி குலத்தார் என்று சொல்லி
இகழ்ந்திடாமல் எவரையும்
மணமிருந்தே இனிமை மண்டும்
தமிழ் மொழியால் ஓதி நீ
மாநிலத்தில் எவருங் கண்டு
மகிழுமாறு சேவை செய்.

—நாமக்கல். இராமலிங்கம் பிள்ளை அவர்கள்.

3. தமிழின் இனிமை

"கனியிடை ஏறிய சுளையும்—முற்றல்
கழையிடை ஏறிய சாறும்
பனிமலர் ஏறிய தேனும்—காய்ச்சுப்
பாகிடை ஏறிய சுவையும்,

நனிபசு பொழியும் பாலும்—தென்னை
        நல்கிய குளிரிள நீரும்
இனியன என்பேன் எனினும்—தமிழை
        என்னுயிர் என்பேன் கண்டீர்.

— கவிஞர். பாரதிதாசன்.

4. விண்ணப்பம்

பாலைவனம் சோலைவனம் ஆகவேண்டும்
        பசுங்கிளிகள் அங்கிருந்து பாடவேண்டும்
சாலைகளிற் பல்தொழிலும் பெருக வேண்டும்
        சபைகளிலே தமிழெழுந்து முழங்கவேண்டும்
சீலை உடை கதருடையாய்த் திகழவேண்டும்
        தேசபக்தி செழித்தோங்கி வளரவேண்டும்
வேலையில்லாத் திண்டாட்டம் ஒழியவேண்டும்
        வெற்றியின்மேல் வெற்றியெமக் கெய்தவேண்டும்''

— தேசிக விநாயகம் பிள்ளை.

செய்யுட்பகுதி - குறிப்புரை

1. வாழ்த்து

1. திருத்தாண்டகம்

இப்பாடலை இயற்றியவர் தேவார ஆசிரியருள் காலத்தால் முற்பட்ட திருநாவுக்கரசர் ஆவர். திருமுனைப்பாடி நாட்டில் திருவாமூரில் வேளாளர் மரபில் புகழனூர் என்பவர்க்கும் மாதினியார் என்பவர்க்கும் பிறந்தார். இவரது பிள்ளைத் திருநாமம் மருள் நீக்கியார் என்பது. சைவ சமயத்தைத் துறந்து சமண சமயம் தழுவிய இவரை, இவர் தமக்கையார் திலகவதியார் மீண்டும் சைவ சமயத்தைத் தழுவச் செய்தார். இவர் காலம் கி. பி. 7-ஆம் நூற்றாண்டு. இவரியற்றிய தேவாரப் பாடல்கள் அனைத்தும் சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் 4, 5, 6 திருமுறைகளாகத் திகழ்கின்றன.

அருஞ்சொற்பொருள்: வேலை சூழ் ஞாலம்=கடல் சூழ்ந்த உலகம்; காதலித்து=விரும்பி; பரவ=துதிக்க; பண்=இசை; பாசூர்=திருப்பாசூர்; மேவிய என்பது மேய என இடைக் குறைந்து வந்துள்ளது; சுடர்=ஒளி வடிவாக இலங்கும் இறைவன், உய்ந்த=உலக துன்பங்களினின்றும் தப்பிப் பிழைத்த.

2. திருவருட்பா

இந்நூலாசிரியர் இராமலிங்க அடிகள் கி. பி. 1823ல் சிதம்பரத்துக்கு வடமேற்கிலுள்ள மருதூரில் தோன்றி கி. பி. 1873ல் வடலூருக்கு அருகிலுள்ள மேட்டுக் குப்பத்தில் சித்திவளாகம் என்னும் மாளிகையில் திருக்காப்பிட்டுக் கொண்டார். இவர் பாடல்கள் இறைவன் திருவருளால் பாடப்பெற்றவை. ஆதலால் இந்நூல் திருவருட்பா எனப் பெயர்பெற்றது. இவர் தந்தையார் இராமைய பிள்ளை; தாயார் சின்னம்மையார்; மரபு கருணீகர்; இவர் இயற்றிய உரை நடை நூல்கள்: சீவகாருணிய ஒழுக்கம், மனுமுறை கண்ட வாசகம் என்பன. இவர் பாடல்கள் எத்தகையவர் உள்ளத்தையும் உருகச்செய்து அவரை அருள் நெறியில் செலுத்தும்.

அருஞ்சொற்பொருள்: எங்குறுவேன் = எங்குச் செல்வேன்; எம் + தந்தை = எந்தை. அன்னையினும் = தாயைக் காட்டிலும்; தயவு = இரக்கம்; அகிலம் = உலகம்; அளித்திடும் = காத்திடும்.

1. தமிழ்த்தாய் வாழ்த்து

இப்பாடல் மாரிவாயில் என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது. இந்நூலின் ஆசிரியர் நாவலர். ச. சோமசுந்தர பாரதியார் எம். ஏ. பி. எல். இவர் சிறந்த நாவன்மையும் பாவன்மையும் ஒருங்கே வாய்க்கப்பெற்றவர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராக இருந்து தமிழ் மொழிக்கும் தமிழ் மாணவர்க்கும் அரிய பல தொண்டுகள் செய்த பெரியார். இவர் பேச்சும் எழுத்தும் எழுச்சியூட்டவல்லவை. இவர் ஓய்வு பெற்றுள்ள தற்போதும் தமிழுக்குத் தொண்டாற்றுவதில் ஈடுபட்டுள்ளனர்.

தெய்வதம்=தெய்வம்; தனி விளக்கே=ஒப்பற்ற விளக்கம் போன்றவளே; தகவு=தகுதி; சீர்த்த=சிறந்த; அழகினோங்கும்=அழகுடன் தோன்றும்; துமி=துளி; அலவன்=சந்திரன்; துணைவியருள் முதல்வி=மனைவியர் பலருள்ளும் முதன்மையானவளே; மனைவி பெற்றெடுத்தவளே (அறிவினின்றும் தோன்றிய மொழியே) கனிவிக்கும்=இன்புறுத்தும்; காதல்=அன்பு; கன்னி=அழியாத் தன்மையுடையவள்.

II. அறவுரை

1. திருக்குறள்

இந்நூல் அழகிய குறள் வெண்பாக்களால் ஆகியது. சங்க காலத்தியற்றப்பட்ட நூல்கள் பலவற்றுள்ளும் தலை சிறந்தது. இது வாழ்க்கைக்கு வழிகாட்டும் சிறப்புடையது. இந்நூலின் ஆசிரியர் திருவள்ளுவர் தம் வாழ்க்கையில் கண்டறிந்த உண்மைகளை நன்கு ஆராய்ந்து உலக மக்களின் நன்மைக்காகவே இயற்றியருளினார் எனலாம். உலகில் வழங்கும் எந்நூலும் இந்நூலைப் போன்று உலக மொழிகள் பலவற்றுள்ளும் மொழிபெயர்க்கப்படாமையே இதன் சிறப்பினை விளக்கும். இவர் வரலாற்றைப் பற்றி வழங்கும் கதைகள் அனைத்தும் தக்க ஆதாரங்களுடன் கூடியனவல்ல. இவர் கருத்துக்களையும் பாக்களையும் எடுத்து ஆளாத தமிழ் நூல்களே இல்லை. இவருக்கு எம்மதமும் சம்மதமே. இவர் காலம் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன். பொதுமறை என வழங்கப்படும் இந்நூல் இரண்டடிச் சிறுமை பற்றிப் பதினெண்கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்றாகக் எண்ணப்படுகின்றதேயன்றி இதன் பெருமை கருதின் இதற்கு ஒப்பானதோர் நூல் இல்லை என்க. 1330 குறட்பாக்களைக் கொண்ட இந்நூல்

அறத்துப் பால், பொருட் பால், காமத்துப் பால் என்னும் மூன்று பிரிவுகளைக் கொண்டது. இங்குத் தரப்பட்டுள்ள அதிகாரங்களிரண்டும் பொருட்பாலில் உள்ளன.

ஊக்கமுடைமை

அருஞ்சொற்பொருள்: (1) உடையது உடையாரோ=பிற பொருள்களை உடையவராயினும் அவற்றை என்றும் பெற்றிருப்பரோ? (2) உள்ளம்=ஊக்கம் (ஆகு பெயர்); (3) ஆக்கம்= செல்வம் (காரணப் பெயர்–ஆக்கப்படுவது); அல்லாவார்=வருந்தார்; ஒருவந்தம்=உறுதியாக; கைத்து=(கையகத்து) கையின் கண்; (4) அசைவிலா=தளராத (ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்) உழை=இடம் (உழை - 7 வேற். உருபு) (5) மலர் நீட்டம்=தண்டின் நீட்டம்; (6) உள்ளுவது=எண்ணுவது; தள்ளினும்=ஆகாவிடினும் உம்மை பெரும்பான்மை முடியும் என்னும் பொருள் தந்து நிற்கிறது; நீர்த்து=தன்மையது; (7) சிதைவு=அழிவு; ஒல்கார்=தளரார்; பாடு=பெருமை; ஊன்றும்=நிலைநிறுத்தும்; (8) வள்ளியம்=கொடை செய்வோம்; (9) பரியது=பெரிய உடம்பை உடையது; கோட்டது=கொம்புடையது (தந்தங்களையுடையது); வெருவும்=அஞ்சும்; இச் செய்யுளில் "பிறிது மொழிதல்" என்னும் அணி வந்துள்ளது. (10) உரம்=திண்ணிய அறிவு; உள்ள வெறுக்கை=ஊக்கமிகுதி.

சொல்வன்மை

(1) நலனுடைமை=நலத்தினையுடையராதல்; யா நலம்= பிறநலங்கள்; (2) ஓம்புதல்=பாதுகாக்க; (தங்களிடம் நிகழாமற்) தகை அவாய்=தகுதியை அவாவி; வேட்ப=விரும்பும்படி; (4) ஊங்கில்=மேற்பட்டது இல்லை; (5) சொல் என்னும் சொல் இக்குறளில் பன்முறை பொருளில் மாறுபாடின்றி ஆளப்பட்டமையின் சொற்பொருள் பின்வருநிலையணி; (6) வேட்ப=விரும்புமாறு; கோள்=குறிக்கோள்; (7) அஞ்சான்=அவைக்கு அஞ்சானயின்; இகல்=மாறுபாடு; (8) நிரந்து=ஒழுங்குபடக் கோத்து; (9) காமுறுவர்=விரும்புவார்; தேற்றாதவர்=அறியாதவர்; (10) இணர்=பூங்கொத்து; ஊழ்த்து=தாமாக மலர்த்தும்; நாறா=மணங்கமழாத.

2. நாலடியார்

இந்நூல் நான்கு அடிகளையுடைய வெண்பாக்களால் ஆகியது. இது பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. "நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி" என்னும் முதுமொழி இதன் பெரு

மையை நன்குணர்த்தும். இஃது அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் மூன்று பிரிவுகளுடையது. நானூறு வெண்பாக்களைக் கொண்டது. சமண முனிவர்கள் பலர் இயற்றிய பாடல்களைப் பதுமனார் என்பவர் தொகுத்தார் என்பர். சமண முனிவர் காலம்: கடைச் சங்க காலம்.

அருஞ்சொற்பொருள்: (1) நீசர் = கீழ்மக்கள்; பறக்கும் = வளர்ந்து நிற்கும்; அடும்காலை = காய்ச்சும் காலத்தில்; (2) பொறையுடைமை = பொறுமையுடையராயிருத்தல். உறுவது = செய்யத் தகுவது; உலகு = உலகத்தார்; பெறுவது = பெறுகின்ற பயன். (3) ஆபோல உருவம் பல கொளல்; சங்கு = அப்பசுக்களைப் போல இவ்வுலகில் நிகழும் அறங்களும் பல வேறு வடிவங்களையுடையனவாம். (5) கட மா = காட்டுப் பசு; தொலைச்சிய = கொன்ற; வேங்கை = புலி; இடமுடையவானகம் = இடத்தையுடைய தெய்வலோகம்; கையுறினும் = கைவசம் வரினும்; அழுங்க = கெட; வேண்டார் = விரும்பார்; (5) ஊட்டி = உண்பித்து; புறந்தரினும் = காப்பாற்றினாலும்; கருமங்கள் = காரியங்கள்.

3. அறநெறிச்சாரம்

இத்தொடரை அறம் + நெறி + சாரம் எனப் பிரிக்கலாம். அறவழிகளுள் சிறந்தவற்றைப்பற்றிக்கூறும் நூல் எனப் பொருள் படும். ஆசிரியர்: முனைப்பாடியார். முனைப்பாடி என்பது தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ளது. அவ்வூரில் பிறந்ததால் அப்பெயர் பெற்றார். மதம்: சைனம்; காலம்: அறிஞர்கள் 12-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்பர். இந்நூல் காட்சி, ஒழுக்கம், ஞானம் என்ற மூன்று பகுதிகளையுடையது.

அருஞ்சொற்பொருள்: (1) மீக்கூற்றம் = புகழ்மொழி; குலம்—குலன் (போலி), உறுவலி = மிக்க வலி; பொறி வனப்பு = உடலுறுப்புக்களின் அழகு; ஏமாப்பு = பாதுகாப்பு. (2) நெறித்து = திறந்து; நெய் = ஆமணக்கு நெய்; சால = மிக்க; அறன்வலிது = அறம் அழியாத வலிமையுடையது; நாளும் = ஒவ்வொரு நாளும். (3) மனமறப்பெற்றானேல் = மனம் முழுவதையும் தனக்கு அடங்கி நடக்கச் செய்வானேல், எழுத்தெண்ணே நோக்கி = எழுத்தையும் எண்ணையும் ஆராய்ந்து; இருமையும் = இம்மை, மறுமை. (4) பிரிவுண்மை = பிரிதல்; உள்ளி = எண்ணி; செயிர் = பகை; கடிந்து = நீக்கி. (5) காய்தல் = வெறுத்தல்; உவத்தல் = விரும்புதல்; ஆய்தல் = ஆராய்தல்; காய்வதன்கண் = வெறுக்கப்படும் பொருளிடத்து; குணம் = நன்மை.

III. கதை

1. நள வெண்பா

இந்நூல் நளன் வரலாற்றைக் கூறும். இதன் ஆசிரியர் "வெண்பாவிற் புகழேந்தி" எனப் புகழப்படும் புகழேந்திப் புலவர். இவர் ஊர் பொன் விளைந்த களத்தூர். வேளாண் மரபினர். மதம்: வைணவம். சந்திரன் சுவர்க்கி என்னும் சிற்றரசனால் ஆதரிக்கப்பட்டவர். இவர் காலம் இற்றைக்கு எண்ணூறு ஆண்டுகளுக்கு முன் என்ப. இந்நூல் சுயம்வர காண்டம்; கலித்தொடர் காண்டம்; கலிநீங்கு காண்டம் என்னும் மூன்று பிரிவுகளைக் கொண்டது. இது கலியினால் தமயந்தியை விட்டுப் பிரிந்த நளன் மீண்டும் அவளை யடைந்து பண்டு போல் அரசெய்தி வாழும் பகுதியாகிய கலி நீங்கு காண்டத்தைச் சார்ந்தது.

அருஞ்சொற்பொருள் : (1) மின்னாடு மால்வரை = மின்னலுடன்கூடிய மேகங்கள் படியும் பெரியமலை; வேலை = கடல்; கடம் = மதநீர்; நளி = அச்சம். (2) போதுமோ தான் = தகுமோ? தார்வேந்தன் = மாலையணிந்த மன்னன்; (3) ஒண்டொடி = ஒளி பொருந்திய தொடி என்னும் அணியை அணிந்த தமயந்தி. நீத்தது = பிரிந்தது; நீத்ததூஉம் — இன்னிசையளபெடை; தாமம் = மாலை; பொன் மகளை = அழகிய தமயந்தியை. (4) மடந்தை = பெண்; பூண்டாள் = மேற்கொண்டாள்; பரிந்து = அன்புகொண்டு. (5) காதம் = பத்து மைல், அளவு, தோலாமை = தோல்வியுறாமை (வெற்றி); வெம்மைக் கலி = கொடிய சனி; மால் கொண்டான் = மயக்கங்கொண்டான் (நளன்); கோல் கொண்டமா = கோல்கொண்டு துரத்திய விலங்குகள் (குதிரைகள்) தண் + தார் = தண்டார் (புகழேந்திப் புலவரின் நன்றி சந்திரன் சுவர்க்கி என்பவரைப் புகழ்வதால் புலப்படுகிறது). (7) அலவன் = நண்டு, காமர் = அழகிய; கரி = யானை. (8) ஆற்றி = களைப்பாற்றி; அடிசில் = உண்டி; மேதி = எருமை. (9) இடைச்சுரம் = நடுக்காடு; அயிர்த்த = ஐயங்கொண்ட; நைகின்ற = வருந்துகின்ற. (10) அவன் மேற்செயல் = அவன் செய்யும் செயல்கள். வளையாடுங் கையாள் = தமயந்தி. (11) காணா, நடுங்கா, உயிரா, அணையா = இவை செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சங்கள். கண்டு, நடுங்கி, உயிர்த்து, அணைத்து என்னும் பொருளில் வந்துள்ளன. (11) வன்மக்களியானை = வலிமை மிக்க மதங்கொண்ட யானை. (12) நிடதத்தார் = நிடத நாட்டினர்; இந்நகர்க்கே - ஏகாரம்

சற்றசை. (13) போந்து + இங்கண் = போந்திங்கண்; இழுக்கு = குறைவு. (14) அடுமடையா = சமைக்குந் தொழில் செய்வோய்! சிறுதொழில் = எளிய தொழில்; (15) மடையர் = அறிவிலி, சமையல்காரர்; முடிசாய்த்து = தலைவணங்கி. (கனிந்துருகிக் கண்ணீர்வார நின்றான் என மாற்றுக.) (16) எங்கள் கொடைத் தொழிலான் = நளன். (17) பசுமை + தலை = பைந்தலை; பணம் = படம்; பூகம் = கமுகம், பாக்கு. (18) மிக்கோன் = மேலான இறைவன்; அருவினை = தாங்கற்கரிய வினை; கரந்துறையும் = மறைந்துவாழும்; மானகத்தேர் = குதிரை பூட்டப்பெற்ற தேர்.

2. குசேலோபாக்கியானம்

குசேலோபாக்கியானம் என்னும் இத்தொடரைக் குசேல + உபாக்கியானம் எனப் பிரிக்கலாம். குசேலரைப் பற்றிய கதை என்று பொருள்படும். இந்நூலாசிரியர், வல்லூர் தேவராசப் பிள்ளை என்பவர். இவர் திரிசிரபுரம், மகாவித்துவான், மீனாட்சி சுந்தரம் பிள்ளை என்னும் பேராசிரியரிடம் கல்வி பயின்றவர். இந்நூலைக் கி. பி. 1850-ல் அரங்கேற்றம் செய்தார்கள் என்பர்.

கண்ணபிரானும் குசேலரும் சாந்தீப முனிவரிடம் கல்வி பயின்றவர்கள். குசேலர் தம் மனைவியின் விருப்பப்படி வறுமையைப் போக்கிக்கொள்ள கண்ணபிரானிடம் செல்வம் பெற்றுவர ஏகினார். அங்குக் கண்ணபிரானால் வரவேற்கப்பட்டு உபசரிக்கும் பகுதியைப்பற்றிக் கூறுவது இப்பகுதி.

அருஞ்சொற்பொருள்: (1) (எண் + அன்னை) = எண்ணனை, உயிர்களால் நெஞ்சில் எப்போதும் எண்ணப்படும் அன்னையாகிய திருமகளுக்கு. (அன்னை என்பது அனை ஆயிற்று) மார்பம் = வலது மார்பு. திகிரி = சக்கரம், உறக்கொண்டானை = பொருந்தக் கொண்டானை, புரக்கும் = காக்கும், கண்ணனைத் துளவம் = (கண் + நனை + துளவம்) தேனைச் சொரிகின்ற துளவம்; துளவம் = துளசி. (2) ஆண்டகை (ஆண் + தகை) ஆண்களில் சிறந்தவன். பூண்டமாதவன் = மாதவம் பூண்ட குசேலன்; பொன்னடி = அழகிய அடி. (3) திலகம் ஆகுபெயராக நெற்றியைக் குறிக்கிறது. ஐயன் = கண்ணன். புளகம் போர்த்து = மயிர்க்கூச் செறிந்து. நிரம்புற = நன்றாக குலமறைத் தலைவன் என்பதை மறைக்குலத் தலைவன் என மாற்றிக் குசேலன் எனக் கொள்க. (4) அரதனம் = இரத்தினம்; உம்பர் = மேல்; மஞ்சன நீர் = குளிக்கும் நீர். (5) கதிர் = ஞாயிறு; நானம் = கஸ்தூரி; விரை = மணம்; அக்

கதை = அட்சதை; அதிர்தர = ஒலிக்கும்; தொடையல் = மாலை. (6) தூமம் = புகை; பலித நீரோசனக்கலம் = கற்பூர ஆரத்தி; திரை = கடல்; கரை = குற்றம்; பூசி = கழுவி. (8) அழிதரு = இளகிய; வதனம் = முகம்; புத்தி = அறிவு. (10) எண்மையில் = எளிதில். (11) படுநட்பு = உண்டாம் நட்பு; வீடுதல் = அழிதல். (13) மனைக்கிழத்தி = மனைக்குரிய மனையாள்; மன் = கணவன், இலாத என்பது இலா என ஈறு கெட்டது. உஞற்று = செலவு. (14) பந்தனை = இல்லறக்கட்டு, பக்கணம் = பட்சணம். (15) நடலை = துன்பம், தெய்வம் = சுசீலை. (16) பொதி = கட்டு; என்னு = என்று, (செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம்); ஐயன் = பெரியோன்; பொலிதர = விளங்க.

3. ஆசிய ஜோதி

ஆசிய ஜோதி - ஆசியாக்கண்டத்தின் ஒளியாகவும் உலகின் வழிகாட்டியாகவும் விளங்கிய புத்தர் பெருமானின் வரலாற்றைக் கவிதை வடிவில் கூறும் நூல். இதன் ஆசிரியர்: கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை. தந்தையார்: சிவதாணுப் பிள்ளை; தாய்: ஆதிலட்சுமி அம்மையார். பிறப்பிடம்: திருவாங்கூர்ப் பகுதியில் உள்ள தேரூர். வரலாற்றுச் சுருக்கம்: 1876-ஆம் ஆண்டில் பிறந்தார். திருவாவடுதுறை ஆதீனம் சாந்தலிங்கத் தம்பிரான் என்னும் நல்லாசிரியரிடம் பயின்றார். பல ஆண்டுகள் ஆசிரியத் தொழிலாற்றி ஓய்வு பெற்றுள்ளார். எளிய இனிய கவிதைகள் பலவியற்றிக் 'கவிமணி' என்னும் சிறப்புப் பெற்றவர். இவர் இயற்றிய வேறு நூல்கள்: காந்தளூர்ச்சாலை, நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மான்மியம், 'மலரும் மாலையும்' என்னும் நூல் இவர் பல்சுவைக் கவிதைகளின் தொகுப்பு நூலாகும்.

அருஞ்சொற்பொருள்: (3) அழியா இன்பம் = பேரின்பம். (5) தனயன் = மகன். (13) வெளிறி = வெண்மை நிறமுடையதாய். (5) மயக்கு = மயக்கம். (7) விதானம் = மேற் கட்டும் சீலை. (11) அலகில் = எல்லையில்லாத. (14) விழிநீர் = கண்ணீர். (17) தின்மை = தீமை. (நன்மை = தின்மை) தீமை என்பது தின்மை என வந்தது.

4. பாஞ்சாலி சபதம்

இந்நூல் தேசிய கவி. சுப்பிரமணிய பாரதியாரால் இயற்றப் பெற்றது. இவர் திருநெல்வேலி ஜில்லாவில் எட்டைய புரத்தில் பிறந்தவர். அந்தண குலத்தினர் தந்தையார்; சின்னச்

சாமி ஐயர். தாயார்; இலக்குமியம்மாள்-இவர் இளமையிலேயே கவிபாடும் ஆற்றல் பெற்றிருந்தார். ஆதலால் அவரைப் பராட்டிய புலவர்கள் அவருக்குப் "பாரதி" என்னும் பட்டப் பெயரை வழங்கினர். இவர் மக்களுக்கு நாட்டுப் பற்றூட்டும் எழுச்சி மிக்க பாடல்களை யியற்றியதுடன் தாய் மொழிப் பற்றையூட்டும் பாடல்களையும் இயற்றியுள்ளார். இவர் பாடல்களனைத்தையும் பாரதியார் கவிதைகள் எனவும், உரை நடையில் வரைந்த அனைத்தையும் கட்டுரைகள், கதைகள் எனத் தனித் தனியாகவும் வெளியிட்டுள்ளனர். தேசீய கவிகள், கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம், பாரதி அறுபத்தாறு, வேதாந்தப் பாடல்கள் என்பன எளிமையும், இனிமையும், கற்பனை நயமும் நிறைந்தவை. 1882-ல் பிறந்த இவர் 1921-ல் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

பாரதத்தில் வரும், 'திரௌபதியை அரசவையில் மானபங்கப் படுத்தும்' பகுதியைக் காலத்திற்கேற்ற வண்ணம் மாற்றிப் புதுமைக் கருத்துக்கள் திகழ, துரியோதனன் செய்த கொடுமைகளை எதிர்த்துப் பாஞ்சாலி செய்த சபதத்தை விவரித்துக் கூறுவது இப்பகுதி.

அருஞ்சொற்பொருள்: (3) காட்டும் உண்மை நூல்கள் = உண்மைப் பொருளையுணர்த்தும் நூல்கள். (4) ஓரம் = வஞ்சகம்; சோரம் = கள்ளத்தனம். சாரமற்ற வார்த்தை = பயனில் சொல்.

IV சிறு நூல்கள்

1. திருவேங்கடத் தந்தாதி

தமிழ் நாட்டின் வட எல்லையாகிய திருவேங்கடத்தில் எழுந்தருளியுள்ள திருமாலைப்பற்றிய 100 விருத்தப் பாக்களாலாகியது இந்நூல். இதில் உள்ள செய்யுட்கள் அந்தாதித் தொடையாலமைந்தவை. இந்நூலாசிரியர்: திவ்விய கவி. பிள்ளைப் பெருமாள் ஐயங்கார். இவர் காலம்—17-ஆம் நூற்றாண்டு. இவர் இயற்றிய வேறு நூல்கள் :—1. திருவரங்கக்கலம்பகம், 2. திருவரங்கத்து அந்தாதி; 3. அழகர் அந்தாதி 4. திருவேங்கடத்து மாலை 5. திருவரங்கத்து மாலை 6. திருவரங்கத்து ஊசல் 7. நூற்றெட்டுத் திருப்பதி என்பன. இவருடைய பாக்கள் இவர்தம் பக்திப் பெருக்கையும் புலமைத்திறனையும் விளக்க வல்லன.

அருஞ்சொற்பொருள்: 1. சிற்றன்னை = கைகேயி; திருவேங்கடம் = மரங்கள் வேகின்ற காடு; தாழ் பிறப்பின் உருவேம்கள் +

தத்து = தாழ்பிறப்பின்; உருவேங்கடத்து = தாழ் குலத்துட்பிறந்துள்ள எங்கள் துணி மணிகளைப் (போக்க);கடம் = மதநீர்; தும்பி = யானை (கஜேந்திரன்) 2. மாலை மதிக்குஞ்சி = மாலைக்காலத்துத் தோன்றும் மதியை அணிந்த முடியையுடைய; போதன் = பிரமன்; வாசவன் = இந்திரன்; நாலைமதிக்கும் = நால்களை ஆராயும்; அந்திகாலை = அந்தியிலும், காலையிலும் (உம்மைத்தொகை). மதிக்குள் = அறிவில், கைம்மலை = சிறியமலை (மந்புரம் என்னும் மலை) வேலை = கடல் (திருப்பாற்கடல்); 3. இருக்காரணம் = இருக்கு என்னும் வேதம்; கருக்காரணம் = முதற்காரணம்; கஞ்சம் = தாமரை; செல்வப் பெருங் காரணங்கின் = செல்வத்தின் தலைவியாகிய இலக்குமி; மருக்காரணவும் பொழில் (காரணவும் மருப் பொழில் என மாறுக.) மேகத்தைத் தடவும் மணம் கமழும் சோலை 4. தாயவன் = தாவியவன், அளந்தவன்; கண்ணன் கமலம் ஒப்பான் = கண் + நல் + கமலம் + ஒப்பான். சரத்தால் = அம்பால்; தீயவன் கண்ணன் = கொடிய இரக்கமில்லா அரக்கன் (இராவணன்). தூயவன்கண் + அன்புடையார் = தூயவன் கண்ணன்புடையார், தூயவனிடம் கனிவு செய்யும் அடியவர்க்கு.

2. நால்வர் நான்மணிமாலை.

இந்நூலை இயற்றியவர் துறைமங்கலம். சிவப்பிரகாச சுவாமிகள். வீர சைவ மரபினர். இவர் காலம் கி. பி. 17-ஆம் நூற்றாண்டு. இவர் இயற்றிய வேறு நூல்கள்: நன்னெறி முதலிய நீதி நூல்களும், பிரபுலிங்க லீலை என்னும் தத்துவ நூலும் ஆம்.

இது சைவ சமய குரவர்களாகிய நால்வர்மீதும் வெண்பா, கட்டளைக் கலித்துறை, ஆசிரிய விருத்தம், ஆசிரியப்பா என்னும் நான்கு வகைப் பாக்களிலும் பாடப் பெற்ற நூல்.

அருஞ்சொற்பொருள்: (1) நல்லாண்பனைக்குப் பயனுகும் = குலை ஈனுத ஆண் பனையைத் தம் பாடலால் திருஞான சம்பந்தர் பெண் பனையாக மாற்றிப் பயனையளிக்கும்படி செய்தார். திருஞான சம்பந்தர் அருட்செயல்கள்: 1. விடந்தீர்ந்தது = என்பினைப் பெண்ணுருவாக்கியது, சிரபுரம் = சீர்காழி. (2) ஊட்டா = ஊட்டி (செய்யா என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சம்); வேட்டான் = விரும்பினன் (திருநாவுக்கரசர்); மலிபெருங்கல் = மிகப் பெரிய கல்; பூட்டா = பூட்டி; (செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம்); மறிதிரைவார் கடல் = மடிந்து விழ்கின்ற பெரிய கடல்; கடற்கே = கடலில். (3) போதம்

உண்ட பிள்ளை = திருஞானசம்பந்தர்; போதம் = அறிவு (இறைவியாகிய பார்வதி ஞான சம்பந்தருக்கு ஞானப்பாலூட்டியது) என்பு = எலும்பு; பொருகண் = பிறழ்ச்சியுடைய கண். மாது செய்ததோ = பெண்ணாகச் செய்ததோ. திருஞான சம்பந்தர் என்பினைப் பெண்ணுருவாக்கிய வரலாறு. சொல்லின் மன்னர் = திருநாவுக்கரசர்; கண் மிதப்ப உய்த்ததோ = சமணர் தூண்டுதலால் திருநாவுக்கரசர் கல்லுடன் சேர்த்துப் பிணிக்கப்பட்டு கடலில் தள்ளப்பட்டதும் அவர் அரனருள் துணையால் கல்லையே தெப்பமாகக் கொண்டு மிதந்ததும்; முதலையுண்ட பிள்ளை சுந்தரமூர்த்திநாயனர் உயிருடன் அதன் வயிற்றிலிருந்து அழைத்தது. (4) அலந்தேன் = வருந்தினேன்; கோடல் = கொள்ளுதல்; அருட்பெருக்கு = அருள் வெள்ளம்; இள ஏறுகந்தேறியை = காளையை ஊர்தியாக உவந்து ஏறிச் சென்ற சிவபெருமான்; பரிமா = குதிரை; வித்தக = அறிவுடையோய்; சிரப்பொருள் = மேலான பொருள்; குறுந்து = குறுந்தமரம்.

3. மீனாட்சியம்மை குறம்

இது மதுரை மீனாட்சியம்மையின்மீது பாடப் பெற்றது. இந்நூலின் ஆசிரியர் குமரகுருபர சுவாமிகள். ஸ்ரீவைகுண்டம் என்னும் ஊரில் பிறந்தவர். முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ், கந்தர் கலிவெண்பா, சகலகலாவல்லிமாலை, மீனாட்சியம்மைப் பிள்ளைத் தமிழ், சிதம்பரச் செய்யுட் கோவை, பண்டார மும்மணிக்கோவை முதலிய பல நூல்கள் இயற்றியுள்ளார். காலம் கி. பி. 17-ஆம் நூற்றாண்டு (தலைவி ஒருத்தி குறத்தியைக் குறி கேட்க, அக்குறத்தி குறிசொல்வதாகச் செய்யுள் இயற்றுவது குறம்.)

செங்கனகம் = சிவந்த பொன்; பொங்கு நறுமலர் = மணங்கமழ் மலர்; அறுகு = அறுகம்புல்; ஐங்கரன் = விநாயகன்; புழுகு = புனுகு; அங்கயற்கணம்மை = மீனாட்சி.

4. முக்கூடற்பள்ளு

முக்கூடல் என்னும் ஊர் திருநெல்வேலிக் கருகில் உள்ளது. தாமிரவருணியாற்றுடன் சித்ரா நதியும், கோதண்டராமன் என்னும் நதியும் கூடுமிடத்தில் இருப்பதால் இவ்வூருக்கு அப்பெயர் வந்தது. பள்ளு என்பது ஒருவகை நாடகப் பிரபந்தம். இதன் ஆசிரியர் பெயர் புலப்படவில்லை.

வாசவன் = இந்திரன் ; நாகரிகப் பொதியமலை = நாகரிகத்தை உலகிற்குணர்த்திய தமிழ்மொழி வளர்ந்த பொதியமலை; கொண்டல் = மேகம் ; ஏகபோக மாமரம் = தனக்கேயுரிய இன்பந்தரும் மாமரம்.

5. திருவருணைக் கலம்பகம்

தமிழ்மொழியில் வழங்கும் 96 வகைப் பிரபந்தங்களுள் ஒன்று; புயவகுப்பு, மதங்கு, அம்மானை, கார், குறம், தவம், மறம், முதலிய 18 உறுப்புக்களைக் கொண்டது. அந்தாதித் தொகையால் அமைந்தது. கடவுள்மீதும் மக்கள்மீதும் பாடப் படும் பிரபந்த வகைகளுள் ஒன்று. ஆசிரியர் எல்லப்ப நாவலர், திருவெண்காட்டில் பிறந்தார்: வேளாளர்; 18-ஆம் நூற்றாண்டினர். மகளிர் பந்துகளை மேலெறிந்து பிடிக்கும் விளையாட்டு. அம்மானை என்னும் விளையாட்டு. ஆடும்போது பிரபந்தத் தலைவன் தன்மையைப் பாடிக்கொண்டே ஆடுவது பழக்கம். அப்பாடல் அம்மானை எனப்படும்.

வாரார் சிலைகலைமெய் = அழகு பொருந்திய வில், ஆடை, உடல் ; மாதங்கம்=சிறந்த பொன் (மேருமலை) ; யானை (தோல்) பெண்கூறு மாதங்கம் = பொன் ; அன்னம்=உணவு (அன்னப் பறவை வடிவு பிரமன். ஐயம் = பிச்சை.

V. பலவகைப் பாடல்கள்

1. அறிவே தெய்வம்

ஆசிரியர்: தேசீய கவிஞர் சுப்பிரமணிய பாரதியார். வரலாறு பாஞ்சாலி சபதத்தின் முன்னுரையில் காண்க.

அருஞ்சொற்பொருள் : எதனூடும்=எல்லாப் பொருள்களின் நடுவேயும்; சுருதிகள்=சாத்திரங்கள்; நாமம்=பெயர்; அவங்கள் =பயனற்ற செயல்கள்.

2. இளந் தமிழருக்கு

இக்காலப் புலவர் வரிசையில் இடம் பெற்றவர் நாமக்கல் கவிஞர்: இராமலிங்கம் பிள்ளையாவார். இவருடைய பாடல்கள் தேசப்பற்று நிறைந்து, எல்லோரையும் களிப்பூட்டுவன.

அருஞ்சொற்பொருள் : பான்மை=இயல்பு; குணமிருந்தார்= நற்பண்புடையவர் ; இடித்துக் கூறும் = வற்புறுத்திக்கூறும் ; தீரம் = வலிமை ; ஏற்றம் = பெருமை.

3. தமிழின் இனிமை

இக்காலப் புலவர் வரிசையில் புரட்சிக் கவிஞர். பாரதி தாசனும் ஒருவர். இவரது இயற்பெயர் சுப்புரத்தினம் என்பது. மறு மலர்ச்சிப் பாடல்களில் இவருக்குத் தனியிடம் உண்டு.

அருஞ்சொற்பொருள் : முற்றல் கழை = முற்றிய கரும்பு, நனி = மிகுதி.

4. விண்ணப்பம்

ஆசிரியர் : கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை. இவர் நாஞ்சில் நாட்டில் நாகர்கோவில் மாவட்டத்தில் தேரூர் என்னும் சிற்றூரில் கி. பி. 1876-ஆம் ஆண்டில் பிறந்தார். இவர் ஆசிரியராகத் தொண்டாற்றி இருந்து 1931-ஆம் ஆண்டு முதல் ஒய்வு பெற்றிருந்தார். 1954 - ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் இயற்கை எய்தினர். இவர் கவிதைகள் எளிமையும் இனிய சுவையும் அமைந்தவை.

பசுங்கிளிகள் = அழகிய கிளிகள்.

உரை நடைக் கோவை

1. இளங்கோவடிகளும் இயற்கைப் புனைவும்

(நாவலர், பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள்)

தமிழிலுள்ள பெருங் காப்பியங்களில் காலத்தாற் முற்பட்டதும், தமிழ் மொழியின் இயல்பையும் தமிழ் நாட்டின் பெருமையையும் அறிதற்குக் கருவியாயிருப்பதும் முத்தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரம் ஆகும். அதனை இயற்றியவர் செங்குட்டுவன் என்னும் சேர வேந்தர்க்குத் தம்பியாரும், துறவு பூண்டிருந்தவருமாகிய இளங்கோவடிகள் ஆவர். முத்தமிழ்த் துறையின் முறைபோகிய உத்தமக் கவியாகும் இளங்கோவின் காப்பியத்தில் எத்தனையோ பல வித்தக சித்திரங்கள் வியப்பும் உவப்பும் விளைவிக்க வல்லன். அவற்றுள் இயற்கைப் பொருளின் புனைவாகவுள்ள சிலவற்றை ஈண்டு நோக்குதும்.

சிலப்பதிகாரத்தின் முப்பது காதைகளில் நாடு காண் காதையென்பது ஒன்று. கோவலனும், கண்ணகியும் காவிரிப் பூம்பட்டினத்திலிருந்து புறப்பட்டுக் காவிரியின் வடகரை வழியாகக் குடதிசை நோக்கி வந்து திருவரங்கத்திற்கு எதிரே ஓடித் தென்கரையெய்தி உறையூரை அடைந்தனர் என்னும் இந்நிகழ்ச்சியைத் தெரிவிக்கும் பகுதிக்கு நாடு காண் காதை என்று பெயரிட்டுள்ள நுட்பம் அறிந்து மகிழ்தற்குரியது.

"நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு"

என்பது தெய்வப் புலவரின் மெய்யுரையன்றோ? வளம் மிக்க நிலப்பகுதியை ஆளுதலினாலேயே வளவர் எனப்பெயர் பெற்ற சோழரது நாட்டின்கண் அவ்வளத்திற்குக் காரணமாகிய காவிரியின் மருங்குள்ள நிலம் எத்துணை வளமிக்கதாகல் வேண்டும்? அவ்வள மெல்லாம் அவர்கட்குக் காட்சிப் பொருளாகி இன்பம் விளைவித்தன, என்னுங் கருத்துத் தோன்றவே அடிகள் "நாடு கடந்த காதை" என்னாது "நாடுகாண் காதை"

எனப் பெயரிட்டார் என்க. கோவலன் கண்ணகி இருவரும சமணசமயத் தவமுதியோளாகிய கவுந்தி இருக்குமிடம் அடைந் தனர். கவுந்தியடிகளும் அவர்களுடன் மதுரைக்கு வர ஒருப் பட்டு காவிரிமருங்குள்ள என்னெறியில் எவ்வாறு தாம் செல்ல வேண்டுமென்பதை அவர்கட்குக் கூறுகின்றவர், "வெயிலின் வெம்மையைப் பொறுக்க பொன்ருத மென்மையையுடைய கண்ணகியைப் பூக்கள் நிறைந்த சோலைகளின் வழியே அழைத் துச் செல்வோமாயின், கிழங்குகள் தோண்டி யெடுத்த குழி களில் சண்பகத்தின் பூந்துகளும், பழம் பூக்களும் விழுந்து மூடிப்பொய்க்குழிப் படுத்தலால் அவற்றை அறிந்து விலகிச் செல்லாதவர்கட்கு அவை மிக்க துன்பத்தினைத்தரா நிற்கும். அவ்வாறு விலகிச் செல்லும் பொழுது மேலே தொங் கும் பலாப்பழம் முட்டினும் முட்டும். மஞ்சளும் இஞ்சியும் ஒன்ருேடொன்று பின்னிக் கிடக்கும். பாத் திகளிலுள்ள பலாவின் வித்துக்கள் பரல் போலத் துன் புறுத்துதலுங்கூடும். தண்டலை வழியிற் செல்லாது வயல் வழியே போவோம் என்ருல் ஆங்கண் பொய்கையிலுள்ள கயல்மீன்களை ஓட்டி நீர்நாய் கவ்விய வாளைகள் மலங்குகள் பிறழும் செறுவிலே குறுக்காகப் பாயின் இவள் கலங்கலும் கூடும். வயலும் சோலையுமல்லது வேருகிய வழியுமில்லை; ஆகலின் அவ்வழிகளில் கண்ணகிக்கு இன்னல் உண்டாகாது காத்து வருக" என்று கூறி அவரும் உடன் சென்றனர். மூவரும் செவ்வுழி, காவிரியின் நீர்வாய்த்தலைக்கிட்ட கதவின் மீதெழுந்து குதிக்கும் ஒலி யன்றி, ஆம்பி, கிழார், ஏத்தம் முத லிய நீர் இறைக்கும் பொறிகள் ஒலித்தல் இல்லாத கழனி களிலே செந்நெல்லும் கரும்பும் சூழ்ந்த பழனங்களிலுள்ள தாமரைப் பூக்களாகிய காட்டில்,

> **"கம்புட் கோழியும் கனைகுரல் நாரையும்**
> **செங்கால் அன்னமும் பைங்காற் கொக்கும்**
> **கானக் கோழியும், நீர்நிறக் காக்கையும்**
> **உள்ளும் ஊரலும் புள்ளும் புதாவும்".**

என்னும் பறவைகள் வேந்தரிருவர் போர் செய்யுமிடத்தில் அணிவகுத்து நிற்கும் படைகள் போல் நிரை நிரையாயிருந்து எழுப்பும் பல்வேறு வகையான ஒலிகளும் எழுகின்றன. மற்றும், சேற்றினிற் புரண்டு கழுவப் படாத உடம்பினை

யுடைய எருமைகள் தினவுடைய முதுகினைத் தேய்த்தலால் புரி நெகிழ்ந்து நெற்கதிர்களின்மீதே சொரியா நிற்க அதனைக் கண்ட வினைஞரும், களமரும், ஒருங்கு கூடி ஆர்க்கும் ஒலி ஒரு புறமும், கடைசியர் தாமரை, ஆம்பல் முதலிய களைகளைப் பறித்தெறிந்து நாற்றில் நட்டுத் தோளும் மார்பும் சேருடிய கோலத்துடன் வீறுபெறத் தோன்றி மதுவுண்டு பாடும் பாட்டுக்களின் ஒலி ஒருபுறமும், அறுகையும் குவளை மலரையும் கதிருடன் கலந்து தொடுத்த மாலையை, மேழியிலே சூட்டி நிலத்தினைப் பிளப்பவர் போல் பொன்னேர் பூட்டி நின்றோர் பாடும் ஏர் மங்கலப் பாட்டின் ஓசை ஒரு புறமும் எழா நின்றன. காவிரியின் அடைகரையிற் செல்லும் கோவலனும், கண்ணகியும் இப்பலவகை யொலிகளையும் முறையிற் கேட்டு மனங் களித்தலால் வழி நடத்தலினுண்டாம் வருத்தத்தை நெஞ்சிற் கொள்ளாது செல்வாராயினர். சோணாட்டின் இயற்கை வளத்தினை இளங்கோவடிகள் இவ்வாறு நிரல்படக் கூறியிருக்குந்திறன் கற்பார்க்குக் கழிபேருவகை பயப்பதாகும்.

இனி, இவர்கள் வையை யாற்றைக் கடந்து மதுரைக்குச் செல்லுதல் கூறும் பொழுது இளங்கோவடிகள் வையையை ஓர் நங்கையாக உருவகப் படுத்தி "புலவர் நாவிற் பொருந்திய பூங்கொடி" எனவும், "வையையென்ற பொய்யாக் குலக் கொடி" எனவும் அருமை பாராட்டுகின்றவர், அதற்கேற்ப, அதனைச் சார்ந்துள்ள இயற்கைப் பொருள்களை அந்நங்கையின் அங்கங்களாகப் புனைந்துரைக்கின்றனர். வையையின் கரை மருங்குலாக, அதன் புறவாயில் அடர்ந்த குரவம், வகுளம், கோங்கம், வேங்கை, மரவம், நாகம், திலகம், மருதம், சேடல், செருந்தி, செண்பகம், பாதிரியாகிய மரங்கள் மலர் விரிந்து விளங்குவன பூந்துகிலாகவும், அதன் அகவாயிலுள்ள குருகு, தளவம், முசுண்டை, அதிரல், கூதாளம், குடசம், வெதிரம், பகன்றை, பிடவம், மயிலை என்னும் தூறுகளும் கொடிகளும் மலர்ந்து பின்னிக்கிடப்பன மேகலையாகவும் அழகு செய்கின்றனவாம்! வையை யாறு முழுவதும் நீர் புறந்தோன்றாமல் மலர்களால் மூடப்பட்டிருப்பது அவள் கண்ணகிக்கு மேல் வருந்துன்பத்தை அறிந்து "புண்ணிய நறுமலர் ஆடை போர்த்துக், கண்ணிறை நெடுநீர் கரந்தடக்கியது" போல்கின்றதாம்! இவற்றிலிருந்து இயற்கைப் பொருள்

களின் காட்சியில் இளங்கோவின் உள்ளம் எவ்வாறு ஈடுபட்டிருந்த தென்பதும் தாம் கண்டு நுகர்ந்த அப்பொருள்களைக் கதையில் எங்ஙனம் ஏற்ற பெற்றியமைத்துச் சுவையூட்டுகின்றன ரென்பதும் புலனாகின்றன.

இனி சிலப்பதிகாரத்தில் காட்சிக் காதை என்பதொன்றுண்டு. சேரன் செங்குட்டுவன் மஞ்சுசூழ் சோலை மலைவளங்காண்டற் பொருட்டாகத் தன் தேவியாகிய வேண்மாளுடனும், விளையாட்டிற்குரிய பலவகைப் பொருளுங்கொண்டு காளைகள் சூழ வஞ்சி நகரினின்றும் புறப்பட்டுச் சென்று பேராற்றின் கரையை அடைகின்றான். அவ் வியாறானது "கோங்கம், வேங்கை, தூங்கிணர்க் கொன்றை, நாகம், திலகம், நறுங்காழாரம்" ஆகிய பலவற்றினின்றும் உதிர்ந்த பரப்பினால் புனல் தோன்றாது மறைய, நெடியோன் மார்பில் ஆரம் போன்று பெரிய மலையைக் குறுக்கிட்டுச் செல்லா நின்றது. அதன் அடை கரையிலுள்ள மணல் எக்கரில் அரசன் முதலானோர் சென்று ஒருங்கிருக்கின்றனர். அங்கே குன்றக் குரவர்களின் குரவையிற் கொடிச்சியர் பாடும் பாட்டினோசையும், செவ்வேளைப் பூசிக்கும் வேலனது பாட்டின் ஒலியும், தினை குற்றுவோரது வள்ளைப் பாட்டோசையும், புனத்திலே கிளியோட்டுதல் முதலியவற்றாலெழும் ஓசையும், இறாலினின்றும் தேனெடுக்கும் குறவரோசையும், முழவென ஒலிக்கும் அருவியின் ஓசையும், புலியொடு போர்செய்யும் யானையின் ஓசையும், பரணின் மேலுள்ளவன் விலங்கினைக் கடிந்தோட்டும் ஓசையும், குழியில் விழுகின்ற யானையின் பாகர் செய்யும் ஓசையும், இயங்குகின்ற படைகளின் ஓசையோடு ஒருங்கெழுவனவாயின. அவ்வோசையின்பத்தை நுகர்ந்திருக்கும் பொழுது வேங்கை மரத்தின் நிழலில் கண்ணகி கோவலனோடு தேவ விமானத்தில் ஏறிச் சென்ற அதிசயத்தைக் கண்ட குன்றக் குறவர்கள் அதனைத் தங்கள் மலைநாட்டுக்கு வேந்தனாகிய செங்குட்டுவற்கு அறிவிக்கக் கருதிப் பல காணிக்கைப் பொருள்களோடும் வந்து அரசனைக் கண்டு தெரிவிக்கின்றனர். அவர்கள் கொணர்ந்த பொருள்கள் இவையெனக் கூறும் வாயிலாக இளங்கோவடிகள் மலைவள மனைத்தையும் ஒருங்கு தொகுத்துக் காட்டுவது இயற்கையோடு அவர் எவ்வளவு பயின்றுள்ளார் என்பதனைப் புலப்படுத்தும்.

"யானை வெண்கோடும், அகிலின் குப்பையும், மான்மயிர்க் கவரியும், மதுவின் குடங்களும், சந்தனக் குறையும், சிந்துரக் கட்டியும், அஞ்சனத் திரளும், அணியரி தாரமும், ஏல வல்லி யும், இருங்கறிவல்லியும், தெங்கின் பழமும், தேமாங்கனியும், பைங்கொடிப் படலையும், பலவின் பழங்களும், காயமும் கரும் பும், பூமலிகொடியும், கொழுந்தாட் கமுகின் செழுங்குலைத் தாறும், ஆளியின் அணங்கும், அரியின் குருளையும், வாள்வரிப் பறழும், மதகரிக் களபமும், குரங்கின் குட்டியும், குடாவடி யுளியமும், வரையாடு வருடையும், மடமான்மறியும், காசறைக் கருவும் மாசறு நகுலமும், பீலி மஞ்ஞையும், நாவியின் பிள்ளை யும், கானக் கோழியும் தேமொழிக் கிள்ளையும்" ஆகிய இவற்றை மலைவாணர் தலையிற் சுமந்துவந்து வைத்து ஏழ்பிறப் படியேம், வாழ்க நின்கொற்றமென வாழ்த்திப் பின்பு கண்ணகி வானுற்ற செய்தியைக் கூறுகின்றனர்.

ஐம்புலன்களுக்கும் இன்பம் விளைப்பனவாகிய மலைபடு பொருள் அனைத்தையும், ஓர்காட்சி மன்றத்தில் தொகுத்து வைப்பது போல் இங்கெடுத்தியம்பியுள்ள இது மலைநாட்டு மன்னர் மைந்தராகிய அவர் மலையின் இயற்கை வளத்தினை எவ்வளவு நன்கறிந்துள்ளார் என்பதனைப் புலப்படுத்தும்.

2. சென்னைக் கடற்கரை

[பேராசிரியர். டாக்டர். A. சிதம்பரநாதன் செட்டியார், அவர்கள். M. A., Ph.D.]

உலக மீக்கூறும் கடற்கரைகளுள் சென்னைக் கடற்கரை இரண்டாவதாகும். முதலாவதி யாதெனின் அமெரிக்கா தேசத்தில் பிரேசில் என்னும் நாட்டின்கண் உள்ள இரையோடி ஜெனீரோ எனக் கூறுப. அஃதொன்றன்றி, நமது சென்னைக் கடற்கரையை அழகிலும் நீளத்திலும் ஒப்பதும் மிக்கதுமில்லை யென்று சொல்லலாம். இக்கடற்கரையோரமாக வாழக் கொடுத்து வைத்தவர் பலருண்டு. அல்லும் பகலும் அறுபது நாழிகையும் அங்ஙனே வாழ்ந்து வருவோர் பரதவர் ஆவர். இவரேயன்றிப் பகலில் மட்டும் அதனினும் பத்து நாழிகை முதல் இருபத்தைந்து நாழிகை வரையே, கடற்கரையோர மாகக் கட்டப்பட்டுள்ள கண்ணைக் கவரும் மாளிகைகளில்

தங்கியிருப்போர் சிலருண்டு. அவர்தாம், வடபால் கப்பற் பகுதி அலுவலாளர் முதலாகவும் அரசாங்கக் காரியாலய அதிகாரிகள் இடையாகவும், தென்பால் மாகாண ஊர்க் காவலரின் அதிகாரிகள் கடையாகவும் உள்ளோராவர். அவரைப் பற்றிக் கூறுவது இக்கட்டுரையின் நோக்கமன்று. இளமைப் பருவத்தில் உடற்பயிற்சி இன்னதென்றறியாதிருந்து மனப் பயிற்சி யொன்றையே கைக்கொண்டு துன்பத்துக் காளாகி இஞ்ஞான்று அத்துன்பந் துடைப்பான் வேண்டிப் பேரார்வத்துடன் கடற்கரையோரமாக வைகறைப் பொழுதில் ஓடுபவரைக் குறித்து எழுத இஃது எழுந்ததுமன்று. சில மனிதர் தள்ள, சில மனிதர் முட்ட, சில மனிதர் இழுக்கப் பார்ப்போரை,

"அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை"

என்ற பொய்யா மொழியை நினைக்கச்செய்து போகும் கட்டை வண்டிகளையும், அவற்றை ஊர்ந்து செல்லும் ஆட்களையும் பற்றிக் கூற எழுந்ததோ இஃதெனின், அஃதுமன்று.

மற்று மாலைப்பொழுதில் அங்குக் காணப்படும் அவற்றுட் சிலவே இங்குக் கூறப்படுகின்றன. கடற்கரைப் பக்கம் மாலை நேரத்திற் போவோர் எவரும் முதலிற் காண்பன — சீறிக் கொண்டும், உறுமிக்கொண்டும், புகைந்துகொண்டுஞ் செல்லும் மோட்டார் வண்டிகளே. அவ்வண்டிகள் பற்பல வகை யானவை, பற்பல பெயருடன் கடற்கரையோரமாக கீழ்பால் ஒரு பெருந் தொடர் போல நிறுத்தப்பட்டிருக்கும். தொலையி லிருந்து பார்ப்போர் சிலவிடங்களில், "இவை என்ன; இணைக்கப்படா மோட்டார் சங்கிலியோ!" என நினைக்கக் கூடும். அவ்வண்டியினுள்ளே உட்கார்ந்திருப்பவருட் சிலரைக் காணின், "இவர் காலென்ன, நிலத்தில் தோயாதோ! இவர் முகமென்ன, ஞாயிறு ஒளி படின் கூம்பிவிடுமோ!" என்பன போன்ற ஐயங்கள் நிகழும். அவ்வண்டிகளுட் சில பெண்டிரார் செலுத்தப்பட்டுச் செல்லுவதைக் காணும் உள் நாட்டு வாசிகளிற் சிலர் மூக்கின் மேல் கை வைத்து, "இவரென்ன! ஆடவரினும் கடிது செலுத்திப் போகின்றனரே! நன்று நன்று!! ஆடவரை வெல்லப் பார்க்கின்றனர் இவர்.

உலகக் கேட்டின் அறிகுறியே இது!'' எனக் கூறிச் செல்லுவர். "சம்பரா சூரப் போரில் கைகேசி தேரைச் செலுத்தித் தசரதனைக் காத்ததுபோல, துன்பம் நேர்ந்துழி இவரும் காரைச் செலுத்திப் போய்த் தம் கணவர்க்கிளைஞரையுங் காக்கக்கூடும். ஆனால் கைகேசி இரண்டு வரம் பெற்று மண்ணைத் தன் மகனுக்குக் கொண்டு, தன் கணவன் உண்ணோராவியைப் போக்க ஏதுவாகி, வள்ளலை வனம் புகச் செய்து சீதையைச் சிறைப் படச் செய்தது போல, காரூர்ந்து செல்லும், இச் கேகயங்கள் செய்வதாயின் கேடே, கேடே! என்று நினைத்துப் போவாரும் உண்டு. இவ்வண்டிகளுட் போவோரை அறியாத சிலரும், அவரால் அறிந்துகொள்ளப்படாத சிலரும், அறிமுகஞ் செய்து வைக்கப்படாத சிலரும், 'கும்பிடு போட்டுக் கும்பிடு வாங்கலாம், என நினைத்தும், 'காரிற் போகுமவரும் கும்பிடு போட்டாரல்லவா!' என்ற வீண் பிதற்றலால் மகிழக் கருதியும், கும்பிடு போட்டுக் கும்பிடு வாங்குவதையும் சிற்சில வேளைகளில் மறு கும்பிடின்றித் தலைகுனிந்து செல்வாரையும் காணலாம்.

மோட்டாரில் போவார்க்கேயன்றிக் கடற்கரையோரமாக அமைக்கப்பட்டுள்ள கற்றரையின்மீது கடவுள் கொடுத்துள்ள இருகால் மோட்டாராற் செல்லுஞ் சிலருக்கு வேறு சிலர் கைம்மாறு கருதாது கும்பிடு போடுவதையும், கரக்கம்பஞ் செய்து சிரக்கம்பம் பெறுவதையும், அஞ்சலி செய்து அரை கும்பிடு வாங்குவதையும் கைக்கும்பிடு கொடுத்து கண் கும்பிடு வாங்குவதையும், கரக்கும்பிடுகொண்டு மூரற்கும்பிடு வாங்குவதையுங் கண்டு, "எத்தனை விதமான கும்பிடு ஐயா!'' என்று சொல்லா விட்டாலும், நினைப்பார் பலர். இவரேயன்றிக் கும்பிடு போட்டுக் கும்பிடு பெறுவழி, 'என்ன செருக்கு இவனுக்கு!' என்று குறை கூறுவோர் சிலர். 'செய்த அஞ்சலியைத் திருப்பிக்கொடுக்க மதியா, அறியா, முடியா இவன், வேறெதனைக் கொடுப்பினும் திருப்பிக் கொடுப்பானோ! கொடான், கொடான்!' எனக் கூறிப் போவார் சிலர். 'முன்னொரு நாள் கும்பிடு மறந்து சென்ற ஒருவன் பின்னொரு நாள் தன் நண்பனைக் கண்டு அஞ்சலி செய்யுங்கால், அந்நண்பன் இப்பொழுதென்ன? ஏதேனும் என்னிடம் ஆகவேண்டுவதுண்டோ? அன்று நான் செய்த அஞ்சலிக்கு மாற்றஞ்சலியின்றி வெட்கிப்

போகும்படி செய்தாயே!' அஃதென்ன? எனக்கேட்டு நிற்பதை யும், அதற்குச் சமாதானம் பெறுவதையுங் காணலாம். அவ் வாறு கூறப்படுஞ் சமாதானங்களுள், 'நீ கும்பிடு போட்டதை நான் பார்க்கவே இல்லை; உன்னை யான் பார்க்கவேயில்லை, என்பவை பெரும்பாலும் கேட்கப்படும். பின்னும் விடாது, 'ஆனல் மெய்ம்மறந்து சென்றனையோ? கண்ணொரு பக்கம் மனமொரு பக்கமோ?' என்று சிலர் கேட்கும் வினைக்களுங் காதில் விழும்.

கடற்கரை யோரமாக அமைக்கப்பட்டுள்ள கற்றரை மீது நடந்து செல்வோருட் சிலர் உயர்ந்த ஆட்சியாளர். எதிரிற் கண்டு அஞ்சலி செய்வோர்க்குத் தங் கையிற் பிடித்த கோலி ஞல் அவர்கள் கும்பிடிட்டுச் செல்வதைக் காணின், 'வந்தனந் தந்ததற்குத் தண்டனையோ இது!' எனத் தோன்றும். அவ ருக்குக் கும்பிடு மறுநாளும் போட்டு, அவர் கோலசைவு காண விழைகின்றவர், 'குட்டுப் பட்டாலும் மோதிரக் கையினுற் குட்டுப் படவேண்டும்' என்று நினைப்பார்க்கு ஒப்பாவர். பெரிய உத்தியோகஸ்தர் பலர்க்குக் கடற்கரையில் வந்துலாவ ஒய்விராது; இருந்தாலும், அவருட் பலர் தமக்குத் தெரிந் தோறும், தமக்குக் கீழே வேலையிலமர்ந்திருப்போரும் உலாவ வராத ஓரிடத்தைக் கண்டறிந்து அவ்விடமே செல்வர். அன்றேல், தமது தோற்றத்தை மறைக்க உதவி புரியும். இருள் வந்து மூடிய பின்னர்ச் சென்று உலவுவர்.

பருத்த வயிறு விரியப் பட்டாடைதரித்துப் பலங்கொள்ள நடப்பார் சிலர்; பாதகோசம் பதிந்த அடிகளிலே அடி புதையரணம் பூட்டிப் படிமிசை உள்ள தூளி தம் மடி மீது கொள்வார் போல் நீண்ட கால் சட்டை, சிறு கைச்சட்டை அதன் மீதொரு சட்டை, கையிலே ஒரு குட்டை, கழுத்திலே காலருடன் டை இவற்ருேடு நடப்பார் சிலர். 'மேனுடு வேறு; கீழ் நாடு வேறு ஆனல் இரண்டுஞ் சேரின் பேறு,' என்பதை விளக்குவார் போன்று, மேனாட்டாடையும், நம் நாட்டாடையும் கலந்துடுத்துப் போவார் சிலர்; கடற்கரை யுலாவுக்கென்றே வைத்திருக்குஞ் சீனப் பட்டினலாய கோட் டையும், பாப்ளின் பட்டினலாய சர்ட்டையும், பாலாடை யன்ன மேலாடையாக விளங்கும் மல்லையும், கல்கத்தா சிலிப்

பறையுஞ் தரித்துப் போவார் சிலர். அன்றன்று தேய்த்த அழகான மூவாடை தரித்துப் போவார் சிலர், 'உடுப்பவை இரண்டே' என்ற நக்கீரனுர் மொழியைப் பொய்க்கச் செய்ய மனமில்லாதவரைப் போன்று ஈராடையே உடுத்திப் போவார் மிக மிகச் சிலர்; 'ஆடையில்லா மனிதர் அரை மனிதர்' ஆதலால், ஆடையின்றிப் போவார் ஆங்கருமையே.

கற்றரை மீது நடந்து போகுங்கால் காணப்படுவோருள் பிச்சைக்காரர் இருவரைக் குறிப்பிடாமல் இருத்தலாகாது. 'அங்கமெலாங் குறைந்தழுகு தொழு' நோயினனுய், பார்ப்போர் மனத்தில் இரக்கத்தையும், அச்சத்தையும் உண்டாக்குவோனுயுள்ளான் ஒருவன். எலும்பெலாம் மெய்ந்நிறைந்து, நரம்பெழுந்துலரிய நிரம்பா மென்மேருளுடன் நரைத்த ஓதியளாய் குழறும் வாயினளாய், 'உங்கள் வாய்க்குத் தாம்பூலம் என் வயிற்றுக்குச் சோறு, ஒரு பைசா போட்டு விட்டுப் போங்கள்,' என்று நாவற்றக் கதறு பவளாயுள்ளாள் ஒருத்தி. இருவரையும் மேரி மகாராணி கல்லூரியின் எதிரேயுள்ள கற்றறைக் கண் காணக் கூடும். அவர் படும் துயரையும், அவருடைய நிலையையும் உரைத்தல் ஆகுமோ! அந்தோ! கிழிந்த கந்தையைக் கட்டிக் கொண்டு இழிந்த வாழ்க்கையை நடத்திக் கொண்டு ஒரு பிடி சோற்றுக்குப் படாதபாடு பட்டுக்கொண்டு ஒரு குடம் தண்ணீருக்குக் கண்டோரிடத்துக் கெஞ்சிக் கொண்டு வாழ்ந்து வரும் அவருக்கு நாழிகை என்பதொருள் நாள், நாள் என்பது ஒரு திங்கள், திங்கள் என்பது ஓராண்டு என்று சொல்லுதல் மிகையாது. அவர் தம் நிலைமையை நோக்கி உன்னுந்தோறும், உன்னுந்தோறும் நெஞ்சு உருகுகின்றது.

இனி, கடலோரமாக மணல்மீது எவர், எவர் என்னென்ன செய்கின்றனர் என்பதைக் கவனிப்போம். ஒவ்வொரு நாளுந் தோன்றும் கதிரவனை அளவு காட்டுங் கருவியாகக் கொண்டு கூற்றம் தம் வாழ் நாளை உண்டு வருவதை அறியாராய், தாளாற்றி வினை செய்யாராய் சீட்டைக் கையிலே பிடித்துக் கொண்டு பாட்டை வாயிலே பாடிக் கொண்டு விளையாடுகின்ற இளைஞர், முதியோர் ஆகியோரைக் காணுங்கால் 'இவர் மதி என்னே! காலத்தைக் கொல்லுகின்றனரோ! இவரைக் காலங் கொல்லுமே!' என வருந்திப் போவார் சிலர்

சான்றோர். மண்ணைத் தோண்டி காலை முழந்தாள் வரையிற் பதித்து, நன்றாகக் கெடித்துக் காலிலுள்ள நோயைப் போக்கிக் கொள்வார் சிலர். பரதவர் கரையிற் கொண்டுவந்து சேர்த்துள்ள மீன்களின் புன்புலால் உடம்பிலிருந்து வெளிவரும் நாற்றத்தைப் பொறுக்கமாட்டாராய்க் கையிற் குட்டையைக் கொண்டு மூக்கை அடைத்துக் கொண்டு புறம் போகாமல் அங்கேயே இருப்போர் சிலர். நண்பர்களுடனும், மனைவி மக்களுடனும் பேசிக் களித்திருப்போர் சிலர். குழந்தைகளோடு விளையாடுமுகத்தான், தாமும் இளைஞராவோர் சிலர். ஐம்பது, அறுபது ஆண்டினரும் சிறு குழவிகளோடு சேர்ந்து அவர்களுக்கேற்றார் போன்று விளையாடுவதையும், அவர்கள் கொடுக்கும் அடிகளை இன்பத்தோடு வாங்கிக் கொள்ளுவதையும், அவர்கள் மண்ணை அள்ளி மேலே போடும் பொழுது மகிழ்வதையும் அவர்களுடைய சொற்கள் குழல், யாழ் ஆகிய இசைக் கருவிகளைவிட நல்லிசைப் பயப்பனவாக நினைத்து அகமகிழ்வதையும் காணலாம். இரேடியோ என்று சொல்லப்படும் வானொலி வழியாகக் கடற்கரைக்கு அளிக்கப்படும் இசையமுதை அருந்தி இருப்போர் சிலர். அவ்விசையான் மயங்கி உறங்குவோர் சிலர். இசையைக் கேட்டுத் தலையை ஆட்டிக் கையைத் தட்டிக் கொண்டிருப்போர் சிலர். வறுத்த பட்டாணி, முந்திரி, வேற்கடலைகளை வாங்கித் தின்போர் சிலர். சூடான தேனீர் வாங்கி அருந்துவோர் சிலர்.

'அருளாளா, அன்பாளா' எனக்கூறி அந்திக் கால வழிபாட்டைச் செய்வோர் சிலர்.

கடலோரக் காட்சி கண்ணைக் கவர வல்லதென்பதில் ஐயமுண்டோ? கதிரவன் ஒளியால் கடலிற் தோன்றும் வெள்ளி என்ன வெண்ணிறத்தைப் பார்த்து மகிழாதார் யாவர்? களித்துக் கூத்தாடும் அலைகள் ஒன்றோடொன்று போட்டியிட்டுக் கொண்டு கரையை நோக்கி வருவதைக் கண்டு மகிழாதார் யாவர்?

3. இளங்கோ.

[பேராசிரியர். டாக்டர். மு. வரதராசனுர் அவர்கள், M.A., M.O.L., Ph.D.]

[மதுரைமா நகர், பாண்டியன் அவை; பாண்டியன் வெற்றி வேற்செழியன் வீற்றிருக்கின்ருன். அமைச்சரும், புலவரும், தானைத் தலைவரும் பிறரும் குழுமியுள்ளனர். வீரர் மூவர் இளங்கோவடிகளை விலங்கிட்டவாறு அழைத்து வந்து பாண்டியன் முன் நிறுத்துகின்றனர். அங்குள்ள புலவர்கள் மட்டும் எழுந்து வணக்கம் கூறுகின்றனர்].

பாண்டியன் :— அடிகளே! வருக. வீரர்காள்! தளைகளையுங்கள் (வீரர்கள் அடிகளின் கையில் இட்ட விலங்கை அகற்றுகின்றனர்) அடிகளே! அமர்க. (இளங்கோவடிகள் சினமின்றி அமைதியாக அமர்கின்ருர். அமைச்சரும், புலவரும் அச்சத்தோடு அவரையே உற்று நோக்குகின்றனர்)

பாண்டியன் :—காவிரிப்பூம் பட்டினத்திலிருந்து நம் ஒற்றன் உம்மைத் தொடர்ந்து வந்தான். செய்திகள் அனைத்தும் அறிவோம். மூன்று நாட்களாக மதுரை நகரில் சுற்றிப் பார்த்து வருகின்றீர். அரண்மனைப்பக்கம் வந்து எம்மைக்காண உமக்கு மனமில்லை. (தலை அசைக்கின்ருன்) அதிலிருந்தே மனப்பான்மை நன்கு விளங்குகின்றது. பாண்டியர் மரபின் மேல் உமக்கு உள்ள வெறுப்பு நன்கு விளங்குகின்றது. அதனுல்தான் எம் தந்தை செய்த சிறு தவறு உலகெல்லாம் அறியுமாறு ஒரு காவியம் எழுதித் தூற்ற மனம் கொண்டீர். இன்னும் என்ன செய்யப் போகின்றீர்?

இளங்கோ :—(அமர்ந்தவாறே அமைதியாக படபடப்பு இன்றி) சேரன் தம்பி என்ற முறையில் யான் மதுரைமா நகர்க்கு வரவில்லை. சிலம்பு இசைத்த பாவலன் என்ற முறையிலும் இங்கு வரவில்லை. துறவி என்ற முறையில் வந்தேன். சுற்றிப் பார்த்தேன். அதனுல்தான் அரண்மனைக்கு வந்து உம்மைக் காணவில்லை.

பாண்டியன் :— அடுத்த குற்றச் சாட்டு?

இளங்கோ:—பாண்டியர் மரபைப் பழித்துத் தூற்றுவதற்காக யான் சிலப்பதிகாரம் எழுதியதாகக் கூறினீர். என் நோக்கம் அது அல்ல. கற்பின் பெருமையை, கற்புடைய நங்கையின் தவத்தின் சிறப்பை, அறத்தின் ஆற்றலை விளக்குவதே என் நோக்கம்.

உன் தந்தை செய்த தவறு என்ன என்பதைப் பலர் வாயிலாகக் கேட்டறிந்தே அதைக் குறித்துள்ளேன். அதையும் நன்கு ஆராய்ந்து நடுநிலையில் நின்று என் தந்தை செய்தது போலவே கருதி உணர்ந்து எழுதியுள்ளேன். உம் தந்தையின் பெருமையும், பாண்டியர் மரபின் பெருமையும் விளங்கும் வகையிலேயே எழுதியுள்ளேன். வளையாச்செங்கோலை வல்வினை வளைத்தது என்று குறிப்பிட்டுள்ளேன். பாண்டியர் மரபை மதுரைக் காண்டத்தில் பல இடங்களில் போற்றியுள்ளேன். வஞ்சிக் காண்டத்தில் கந்துக வரியிலும் வள்ளைப் பாட்டிலும் பாண்டியர் மரபுக்கு உயர்வு அமைத்துள்ளேன். மூவேந்தர் மூன்று கொடியென எங்கெங்கும்விடாமல் குறிப்பிட்டுள்ளேன் பாண்டியர் மரபுக்குப்பழி நேராமல் எழுத வேண்டும் என்பதே என் நெஞ்சில் எந்நாளும் இருந்து வந்தது. இயன்ற வரையில் நடுநிலையில் நின்று எழுதியுள்ளேன். ஒன்று கூறுகிறேன்; கண்ணகியின் வாழ்வை யான் காவியம் ஆக்காமல் விட்டிருக்கலாம். ஆனால் மக்களின் மனத்தைக் கவர்ந்த வாழ்வு அது. எங்கேனும், என்றேனும் பிறக்கும் புலவர் ஒருவரின் உள்ளத்தை அது தொட்டே தீரும். அக்காலத்தில் அவர் காவியமாக்கப் புகுந்தால் உண்மை பல மறைந்து திரிபு பல புகுந்துவிடும். அப்போது காவியச் சுவைகருதிப் பாண்டியர் மரபை முற்றிலும் பழித்துத் தூற்றி எழுதினும் எழுதக் கூடும் என்ற அச்சம் என் உள்ளத்தே தோன்றுகின்றது. மீண்டும் கூறுகின்றேன், யான் நடுநிலை பிறழாமல் எழுதியுள்ளேன். பிறப்பால், யான் சேரன் தம்பி, சேர நாட்டான் ஆயினும் என் உள்ளத்தே சேர நாட்டின் மேல் தனிப்பற்று இல்லை. மற்ற நாட்டின் மேல் வெறுப்புமில்லை. என் உள்ளத்தே என் அன்புக்குரியதாய் விளங்கும் நாடு, மூன்று பகுதியும் சேர்ந்த தமிழ் நாடு தமிழகம் ஒன்றுதான்.

பாண்டியன் :— எம்மரபைப் பழிக்கு இடமாக்கினீர் என்று யாம் அஞ்சவில்லை. அதனால் உம்மைத் தளையிடவில்லை. ஆனால், எம் தந்தையைப் பழித்து எழுதிய ஒருவர் எம் தலை நகரிலேயே மூன்று நாள் திரிந்தும் வாளா விட்டோம் என்ற பழிக்கு அஞ்சினோம். எம்மரபைப் பழித்தவரைத் தடுத்துக் கேட்கும் ஆண்மை உண்டு என்று உலகிற்குக் காட்டினோம். இது போதும் இனி நீர் போகலாம். போவதற்கு முன் சில சொல்கின்றோம். எங்கள் மரபு சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மரபு; ஆதலின் தமிழ்மொழி வாழும் வரையில் பாண்டியர் பெருமை வாழும் என்பதை உணர்வீராக. உம்முடைய ஒரு நூல் எம் மரபை மாசு படுத்த முடியாது.

இளங்கோ :— பட்ட மாசைத் துடைத்துத் துலக்குவதே என் நூல்.

பாண்டியன் :— பாண்டியர் இருநிலம் பொது எனப் பொறுத மானம் உடையவர் என்பதை அறிவீர். அறிந்திருந்தும் எம் தந்தைக்கோ பாண்டியர் மரபுக்கோ உங்கள் நூலில் தனிச் சிறப்பும் உயர்வும் தரவில்லையே!

இளங்கோ :— மூவேந்தருள் எவர்க்கும் யான் தனிச் சிறப்பும் உயர்வும் தரவில்லை. செங்குட்டுவனுக்கும் தரவில்லை; சேரர் மரபுக்கும் தரவில்லை.

பாண்டியன் :— பாண்டியர் மரபுக்குத் தனிச் சிறப்புத் தந்து போற்றுதவர் பாண்டிய நாட்டின் எல்லைக்குள் கால் வைப்பதே குற்றம் (அழுத்தமாக) அத்தகையவர் பாண்டிய நாட்டிற்கே பகைவர். உணர்வீர்.

இளங்கோ :— அரசே! மூவேந்தரும் தனித் தனிச் சிறப்பும் உயர்வும் நாடினால் பொதுவான தமிழகம் என்ன ஆவது.

பாண்டியன் :— அது பற்றி உமக்குக் கவலை ஏன்?

இளங்கோ :— அது பற்றித்தான் எனக்குக் கவலை.

பாண்டியன் :— ஏன்?

இளங்கோ :— மூவேந்தர் மரபுகள் விளங்குவதற்காகத் தமிழும் தமிழ் நாடும் தோன்றவில்லை. தமிழும், தமிழ் நாடும் விளங்க வேண்டும் என்பதற்காகவே மூவேந்தர் மரபுகள்

தோன்றின. ஆகவே, இந்த வேந்தர் மரபுகளைவிடத் தமிழும், தமிழ் நாடும் நீடு வாழ வேண்டும் என்பதே என் கவலை.

பாண்டியன் :— (எள்ளும் குறிப்போடு) தமிழ் நாடு! தமிழகம்! எங்கிருந்து கற்றீர் இந்தத் தொடர்களை? பாண்டிய நாடு, சோழ நாடு, சேர நாடு என்று பிரித்துத் தனித்தனியே சொல்லுக; இல்லாத ஒன்றைச் சொல்லி மயக்காதீர்.

இளங்கோ :— மயக்கவில்லை அரசே!

பாண்டியன் :— ஓ ஓ! நீரே மயங்குகின்றீரோ?

இளங்கோ :— மயங்கவும் இல்லை அரசே!

பாண்டியன் :— ஓ! கனவு காண்கின்றீரோ?

இளங்கோ :— ஆம் அரசே கனவு காண்கின்றேன். ஒரு காலத்தில் என் கனவு நனவு ஆகும் என்றும் நம்புகின்றேன்.

பாண்டியன் :— என்ன சொன்னீர்?

இளங்கோ :— தமிழகம் ஒரு காலத்தில் ஒன்றுபடும் என்று—

பாண்டியன் :— அங்கிலேயில் பாண்டியன் தலைமை மறைய சேரனே வட வேங்கடம் முதல் தென் குமரி வரையில் ஆள்வான் என்ற கனவா?

இளங்கோ :— இல்லை அரசே! சிறிது பொறுமை வேண்டும் அரசே!

பாண்டியன் :— பொறுக்கத் தகாதது கூறினீர். மூவேந்தர் மரபுகளுள் இரண்டு மரபுகள் அழியாமல் தமிழகம் ஒன்று படுமோ? வேறு எப்படி முடியும்? முன்பின் முரண்படப் பேசி மயக்குகின்றீரோ?

இளங்கோ :— தமிழகம் எப்படியேனும் ஒன்றுபடா விட்டால் மூன்று மரபும் அழிய நேரும் அரசே!

பாண்டியன் :— (சீற்றத்துடன் எழுந்து) என்ன கூறினீர்? மூவேந்தர் மரபும் அழியும் என, பாண்டியர் மரபும் அழியும் எனக் கூறினீர்? என்ன துணிவு! என்ன கொடிய குற்றம்! தென்னவன் காவல் அழிவதா? அழிவா! அந்தக் காவியம் எழுதியது பெருங்குற்றமல்ல; இதுவே பெருங்

குற்றம். இந்த ஒரு சொல் சொன்னதற்காக உம் நாவை எம் வாளால் துணித்திருக்க வேண்டும். உம் துறவுக்கோலம் கண்டு தயங்கினேன்.

(அமைச்சரும், புலவரும் அஞ்சி நடுங்குகின்றனர். அரசன் சிறிது சீற்றம் தணிந்து அமர்கின்றான்)

இளங்கோ :— (அஞ்சாமல் அமைதியுடன்) அரசே! என் நோக்கத்தை உணர்ந்தருள்வீர் என்று விரிவாக எடுத்துரைத்தேன். இல்லையேல் முதலிலிருந்தே வாளா வாய்மூடிக் கிடந்திருப்பேன். யான் கூறுவது எல்லாம் தமிழகம் இனியும் பிளந்தும் பிரிந்தும் சிதைதல் ஆகாது என்பது. மூன்று பிரிவுகளுக்கு இடம் கொடுத்தால் முப்பது பிரிவுகள் வாழும். முந்நூறு பிளவுகள் வளரும். தமிழகம் மேன்மேலும் குறுகும். எல்லை குறுகிக் குறுகிச் சிறுநாடு ஆகும். பிறர் ஆட்சிக்கு உட்பட்டு அல்லலுறும். தமிழ் என்ற மொழியும் தமிழர் என்ற இனமும் மறையும் நிலைமைக்கு இடமாகுமே என அஞ்சினேன். இதைத்தான் கூற முனைந்தேன்.

பாண்டியன் :— போதும் உம் பேச்சு. இனி வாய் திறவாதீர். இன்னும் அறுபது நாழிகைக்குள் பாண்டி நாட்டு எல்லையைவிட்டு நீங்கிட வேண்டும். இல்லையேல் எங்கிருந்தும் எம் நாட்டு மக்கள் உம்மை வாளாவிடார். எம் மரபைப் பழித்த உம் நூல் இனி இந்நாட்டில் வாழாதவாறு யாம் செய்யமுடியும், செய்வோம். உம் பெயரும் இந்நாட்டார் அறியாதவாறு செய்யமுடியும், செய்வோம். உம் நூலும் மறையும்; உம் பெயரும் மறையும். காண்பீர் இனி ஒரு நொடியும் இங்கு நிற்றல் ஆகாது அகல்வீர்.

இளங்கோ :— (எழுந்து நின்று பொறுமையோடும் உருக்கத்துடனும்) தமிழக வேந்தே! தமிழகத் தலைவரே! யான் இப்போதே உடனே அகல்வேன். அறுபது நாழிகைக்குள் பாண்டி நாட்டு எல்லையைக் கடந்து செல்வேன்; அச்சத்தால் அல்ல. அன்பால் அருளால் என் நூல் மறையட்டும், என் பெயரும் மறையட்டும், அவை பற்றிக் கவலையில்லை. யானும் போகிறேன்; மறைகிறேன். யாக்கை நிலை இல்லாதது. போய் மறைவதே இதன் வெற்றி. ஆனால், அருமைத் தமிழ் மறையா

மல் விளங்க மனம் கொள்வீர். சிலப்பதிகாரம் என்று ஒன்று இருந்ததாக நினைவும் இல்லாமல் மறக்கப்படும் காலம் வரட்டும். ஆயின் தமிழகம் என்ற ஒன்று மறக்கப்படாதிருந்தால் போதும். அதற்காக வேண்டுகிறேன். தமிழரே! தமிழகத் தலைவரே! தனிச் சிறப்பு, தனிப்புகழ், தனி மானம் இவற்றை நாடாதீர்; தேடாதீர். தமிழை, தமிழகத்தை நாடுவீர், தேடுவீர். பொறுமை வேண்டா; அவை அனைத்தும் தமிழுக்கும், தமிழகத்திற்கும் இடையூறுகள்; நலிவு செய்யும் நோய்கள். ஆதலின் தமிழகத் தலைவரே! தமிழரே! ஒன்றுபடுவீர்; தமிழ் வாழ தமிழகம் விளங்க, ஒன்றுபடுவீர். யான் போகிறேன்; மறைகிறேன். தமிழ் போகாதிருக்க; தமிழகம் மறையாதிருக்க; தமிழரே! வேண்டுவது ஒன்றுதான்; அதுதான், ஒற்றுமை ஒற்றுமை—!

(போய்க்கொண்டே இருக்கின்றார். ஒற்றுமை, ஒற்றுமை என்ற குரல் மட்டும் கேட்கின்றது)

4. அரிக்கமேடு அல்லது மண்ணில் புதையுண்ட மாநகரம்

[பேராசிரியர். டாக்டர். மா. இராசமாணிக்கனார் அவர்கள், M. A., M. O. L., L. T., Ph. D.]

முன்னுரை:

அரிக்கமேடு என்பது புதுச்சேரியை அடுத்துள்ள அரியாங்குப்பத்திற்கு ஒரு கல் தொலைவில் செஞ்சியாற்றங் (அரியாங்குப்பத்து ஆற்றங்) கரையில் இருக்கின்றது. அதன் கிழக்குப் பகுதி ஆற்று வெள்ளத்திற்கு இலக்காகி அழிந்துகொண்டே வந்திருக்கிறது. ஆற்றோரமுள்ள மேடு பல இடங்களில் அறுக்கப்பட்டுப் புதை பொருள்கள் ஆற்று வெள்ளத்திற்கு இரையாகி வந்தன. இன்னும் வருகின்றன. ஏனைய பகுதிகள் செவ்விய நிலையிலேயே இருக்கின்றன. அம்மேட்டின் மேல் பெரிய மாந்தோப்பு இருக்கின்றது. மேட்டின் ஒரு பகுதியில் தென்னம்பிள்ளைகள் வைத்துப் பயிராக்கப்படுகின்றன. எங்குக் குழி வெட்டினாலும் அங்குச் செங்கற்கள் கிடைக்கின்றன.

அரிக்கமேடு மிகப் பரந்தது. அம்மேட்டின் உயரம் ஆற்று நீர் மட்டத்திலிருந்து 20 முதல் 30 அடி இருக்கலாம். ஆற்றோரமாக உள்ள மேட்டைப் பார்க்கும்பொழுதே அங்காங்குச் செங்கற் சுவற்களின் பகுதிகள் இருத்தலைக் காணலாம். கடு மழை பெய்தவுடன் மண் கரைந்த பின்னர்ப் புதைப் பொருள்களான மணிகள், சங்குகள், எலும்புத் துண்டங்கள், பலவகைக் கற்கள் முதலியன வெளிப்படுகின்றன. அவற்றை அம்மேட்டுக்கு அரை மைல் தூரத்தில் உள்ள காக்கையன் தோப்பில் உள்ள சிறுவர்கள் எடுத்துச் சேர்த்து வைக்கின்றனர்.

பிரெஞ்சு ஆராய்ச்சியாளர்:

புதைபொருள் ஆராய்ச்சியிற் பெயர் பெற்ற துப்ரேயல் என்னும் துரைமகனும் அவரது நண்பருமே சில ஆண்டுகட்கு முன் அரிக்கமேட்டைக் கண்டுபிடித்தனர். அப்பொழுது அங்கே கிடைத்த அரிய பொருளை ஹநாய் (Hanoi) பொருட்காட்சி சாலைக்கு அனுப்பிவைத்தனர். அப்பொருள்களுள் பாராட்டத்தக்கது உரோம சக்கரவர்த்தியான அகஸ்டஸ் உருவம் பொறிக்கப் பெற்ற கார்னீலியன் மணியே ஆகும். துப்ரேயல் துரைமகனர் ஆராய்ச்சியை அறிந்த சென்னைப் பொருட்காட்சி நிலையத் தலைவர், டாக்டர் ஐயப்பன் அவர்கள் தமது காட்சிச் சாலைக்கும் சில பொருள்களை அனுப்புமாறு வேண்ட அப்பெரியார் பல பொருள்களை உதவினர்.

டாக்டர் ஐயப்பன் ஆராய்ச்சி:

துப்ரேயல் துரைமகனர் தமக்கு அனுப்பிய பொருள்களை டாக்டர் ஐயப்பன் அவர்கள் ஆராய்ச்சி செய்தனர். மணிகளும், பானை ஓடுகளும் ஆந்திர நாட்டில் உள்ள அமராவதியிற் கிடைத்தன போலவே காணப்பட்டன. கருநிறத்தனவாக இருந்த ஏந்தல் தட்டுகள், சித்திர வேலைப்பாடு கொண்ட ஓடுகள் முதலியன அமராவதியிற் காணப்பட்டன போலவே காட்சியளித்தன. டெர்ரகோட்டாவினல் (ஒருவகை உயர்தர களிமண்) செய்யப்பெற்ற பதுமைகள் அரிக்கமேட்டில் பண்டைக்காலத்தில் இருந்த ஓவியத் திறனை வெளிக்காட்டின. அவ்வேலைப்பாடு (இன்றுள்ள ஆராய்ச்சிப்படி) தென் இந்தியாவிற்கே புதியது என்னலாம். ஒரு பதுமையின் இடக்கைப் பக்கம் தலைக்குப் பின் பெருங்கொண்டை இடப்பட்டுள்ளது.

அப்பதுமை சிறிதளவு முயற்சியில் பெறிதளவு வேலைப்பாடு கொண்டதாகக் காணப்படுகிறது. மற்றொன்று மஹா புருஷர் முகத்தை ஒத்துக் காணப்படுகிறது. அரிய வேலைப்பாடு கொண்ட இவை இரண்டும் — இந்தியாவில் ஓவியமும் சிற்பமும் செழித்திருந்த கி. பி. முதல் மூன்று நூற்றாண்டுகளைச் சேர்ந்தனவாக இருக்கலாம் என்று அறிஞர் கருதுகின்றனர்.

அரிக்கமேட்டிற்குரிய செட்டியார் தென்னம் பிள்ளையை வைத்துப் பயிராக்கக் குழிகள் தோண்டியபொழுது சித்திர வேலைப்பாடுகொண்ட பலவகைப் பானை ஓடுகள் எடுக்கப்பட்டன. ஒற்றைக் கைப்பிடி, இரட்டைக் கைப்பிடிகளைக் கொண்ட மண் சாடிகளின் சிதைவுகள் காணப்பட்டன. இரட்டைக் கைப்பிடி கொண்ட சாடிகள் தென் இந்தியாவில் இதுகாறும் வேறெங்கும் கிடைத்தில.

அரிக்கமேட்டிற் கிடைத்த கணக்கற்ற கண்ணாடி மணிகளையும் பலவகைக் கற்களாலான மணிகளையும் நோக்க அரிக்கமேடு பழைய காலத்தில் மணிகள் செய்யும் வாணிக நகரமாக இருந்திருத்தல் வேண்டும் என்று கருத இடமுண்டாகிறது. சில வகை மணிகளைச் சோதித்த M. கார்ட்டனௌ (M. Cortenaw) என்னும் பிரெஞ்சு அறிஞர் அவற்றின் காலம் கி. மு. 5-ஆம் நூற்றாண்டாக இருக்கலாம் என்று கருதுகின்றார். அவற்றுள் சில அமராவதியிற் கிடைத்தவற்றைப் பெரிதும் ஒத்துள்ளன. உண்மையான, உயர்தரக் கற்களாலான மணிகள் இவை, போலி இவை என்று எளிதிற் கூற முடியாதபடி, அரிக்கமேட்டுத் தொழில் வல்லுநர் அப்பண்டைக் காலத்தில் போலி மணிகளை உண்மை மணிகள் போலச் செய்துள்ளமை வியத்தற்குரியது. இம்மணிகளையும் நாணயங்களையும் நோக்குகையில் —இவற்றுக்கும் அமராவதிற் கிடைத்த பொருள்களுக்கும் உள்ள ஒருமைப் பாட்டை உணர்கையில் அரிக்கமேட்டின் செழித்த காலம் கி. பி. முதல் மூன்று நூற்றாண்டுகளாக இருக்கலாம் என்பது தோன்றுகிறது. துப்ரேயல் துரைமகனார் அரிக்கமேட்டைத் தென் இந்திய தக்ஷசீலம் என்று கூறுதல் பொருத்தமே ஆகும். என்னை? தென் இந்திய சரித்திரத்தின் விடுபட்ட பகுதியாகிய கி. பி. முதல் ஆறு நூற்றாண்டுகள் பற்றிய செய்திகளைக் கூற இவ்வரிக்கமேடு பெருந்துணை புரியு

132658

மாதலின் என்க. டாக்டர் ஐயப்பன் அவர்கள் துப்ரேயல் துரைமகனுருடன் அரிக்கமேட்டில் ஆறு இடங்களைத் தோண்டிப்பார்த்தனர். ஓரிடத்தில் பெரிய தடித்த சுவரின் பகுதி காணப்பட்டது. அதில் உள்ள செங்கற்கள் மிகப் பெரிய அளவின நீளம் $14\frac{3}{4}$ அங்குலம். அகலம் $10\frac{1}{4}$ அங்குலம். கனம் $2\frac{1}{8}$ அங்குலம். அந்த இடம் ஒரு கோவிலாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. பிறிதோர் இடம் சாதாரண இல்லம் என்று கூறப்படுகிறது. ஓரிடத்தில் செங்கல் கட்டடக் கிணறு ஒன்று கண்டறியப்பட்டது. அதனுள் வெண்கல முக்காலி ஒன்று ம்சிறிய அழகிய ஏந்திரக்கல் ஒன்றும் அகப்பட்டன. மண்மோதிரக் கிணறு ஒன்று ஆற்றோரமாகவுள்ள மேட்டில் கண்டறியப்பட்டது. அதனுள் சூளையிடப்பெற்ற ஓடுகள் கிடைத்தன. மேட்டின் உயரத்தில் ஓர் இடம் தோண்டப் பட்டபோது சுவர் ஒன்று காணப்பட்டது. முதலில் களிமண் பூசப்பட்ட சுவரின் பகுதி பிறகு சுண்ணும்பு பூசப்பட்டதாகச் சில இடங்களில் காணப்படுகிறது. அச்சுண்ணும்பின் மேற் பகுதி வேலைப்பாடு கொண்டதாகக் காணப்படுவது வியத்தற் குரியது.

நாங்கள் கண்டவை:

நாங்கள் டாக்டர் ஐயப்பன் தோண்டிய கிணற்றைக் கண்டோம். அதன் நீர் சுவையுடையது. அக்கிணறு போல வேறு ஒரு கிணறு பாதி தோண்டப்பட்டுவிடப்பட்டுள்ளது நாங்கள் ஆற்றோரமாக வேறொரு கிணற்றைக் கண்டுபிடித் தோம். ஆனால் அது தோண்டப்படவில்லை. நாங்கள் மதிற் சுவர் ஒன்றன் பகுதியைக் கண்டோம். அதில் இருந்த பெரிய செங்கல்லை அளந்து பார்த்தபோது, டாக்டர் ஐயப்பன் கூறியது சரியாக இருக்கக் கண்டோம். ஓரிடத்தில் சிப்பிகளே நிறைந்திருக்கக் கண்டோம். பிறிதோர் இடத்தில் பலவகை மணிகள் புதையுண்டு கிடக்கக்கண்டோம்.

மட்பாண்டச் சிதைவுகள் :

நாங்கள் கண்ட மட்பாண்டச் சிதைவுகள் பல. அவை செந்நிறமும், கறுப்பு நிறமும், மேற்புறம் செம்மை, உட்புறம் கருமை என்று இவ்வாறு மூவகைப்பட்டவை ஆகும். அவற்றின் உறுதிப்பாடு வியப்பதற்குரியது. நிறங்கள் பழுதுறவில்லை.

கறுப்புப்பானை ஓடுகள்மீது புள்ளிகளும் சிறு கோடுகளும் இடப்பட்டுள்ளன. குமிழ்கொண்ட மட்பாண்ட ஓடு ஒன்றும் கிடைத்தது. ஏந்தலாக உள்ள செந்நிற மண் தட்டின் உடைந்த பகுதி ஒன்று கிடைத்தது. சிறிது குழிந்த மட்பாண்டத்தின் உடைந்த பகுதி ஒன்றும் கிடைத்தது. ஒரு மட்பாண்டத்தின் உடைந்த கைப்பிடி ஒன்று கண்டெடுக்கப்பட்டது. மேற்புறம் செந்நிறமும், உட்புறம் கறுநிறமுமாகப் பூச்சு வேலை செய்யப்பெற்ற மட்பாண்டச் சிதைவுகள் கண்ணைக் கவர்வனவாகும். அந்நிறம் தோயச் செய்தவர் மதிநுட்பம் வியந்து பாராட்டற்குரியது.

பலவகைக் கற்கள் :

வெண்மை, பசுமை, ஆரஞ்சு, நீலம் முதலிய நிறங்களைக் கொண்ட கற்கள் சில கிடைத்தன. இவற்றைக் காக்கையன் தோப்பிலுள்ள சிறுர் கொடுத்தனர். அக்கற்கள் பலவகை மணிகளைச் செய்யப்பயன்பட்ட முதற்கருவிகள் என்பது தெரிந்தது. சில கற்கள் அரைகுறையான வேலைப்பாடு கொண்டவையாகக் காணப்படுகின்றன. சில கற்கள் வேலை தொடங்கப் பெருத நிலையில் உள்ளன. நீலம் முதலிய பலவகை நிறங்களைக் கொண்ட பொருள்கள் கட்டிகளாகக் காணப்படுகின்றன.

அவை இன்ன பொருள்களால் ஆனவை என்று துணிந்து கூறற்கில்லை. ஆயினும் அவற்றுள் பெரும்பாலன மிக உயர்ந்த களிமண் கலவைகளால் செய்யப் பெற்றவை எனக் கூறலாம்.

பிற பொருள்கள் :

சிப்பியால் மணிகள் முதலியன செய்யப்பட்டன. சில சிப்பிகள் அரைகுறை வேலைப்பாட்டுடன் கிடைத்தன. எலும்புத் துண்டங்கள் இரண்டு கிடைத்தன. துருப்பிடித்த இரும்பு ஒன்று கிடைத்தது. ஓவியம் தீட்டற்குரிய சிலவகைக் கற்றுண்டுகள் கிடைத்தன.

பலவகை மணிகள் :

சிவப்பு, பச்சை, கறுப்பு, நீலமணிகளே சிறப்புடையன. அவை இரண்டங்குல நீளம் முதல் மிகநுட்பமான சிறிய

அளவுவரை உள்ளன. அகலம் 3 அங்குலம் முதல் மிக நுணுக்கமான அளவுவரை உடையன. பல மணிகள் துளையிடப்பட்டுள்ளன. சில மணிகளே துளையிடப்படாதன. துளையிடப்பட்ட மணிகள் அற்புத வேலைப்பாடு கொண்டவையாகக் காண்கின்றன. கண்ணுக்குத் தெரியாத பல சிறிய மணிகள் எவ்வளவு மதிநுட்பத்துடன் துளையிடப் பெற்றுள்ளன என்பதைக் கவனிக்கும் பொழுது அரிக்கமேட்டுத் தொழிலாளர் தம் தொழிற்றிறமை வியத்தற்குரியதாகும். இவற்றைத் துளையிடப் பயன்பட்ட நுண்ணிய கருவி எத்தகையதாக இருந்திருத்தல் வேண்டும்! இவ்வளவு அரிய வேலைப்பாடுடைய மக்கள் தம் நாகரிகம் எத்தகையதாக இருந்திருத்தல் வேண்டும்!

அண்மையில் நடந்த ஆராய்ச்சி:

1941-லிருந்து ஆராய்ச்சி மெதுவாக நடைபெற்று வந்தது. அதன் பயனாகச் சில உண்மைகள் வெளிப்பட்டன. 1944-ஜூன் மாதம் நான் அங்குச் சென்றேன். ஓர் இடத்தில் இரண்டு தெருக்கள் சந்திக்கும் இடம் அகப்பட்டது. பிறிதோர் இடத்தில் ஆற்றோரமாக வீடுகள் அல்லது தொழிற்சாலையின் பகுதிகள் காண்கின்றன. அவ்விடத்தில் பத்தடிக்கும் மேற்பட்ட உயரமுள்ள கிணற்று அமைப்புடைய வட்டத் தொட்டிகள் மிகப் பலவாகக் காணப்படுகின்றன. கழிநீர்ப் பாதைகள் போன்றவை இருக்கின்றன.

அவை சில இடங்களில் ஒன்றன்மேல் ஒன்றாக (இரண்டும், மூன்றுமாக) அமைந்துள்ளன. சுவர்கள் ஒரடிக்கு மேற்பட்ட அகலம் உடையவை. செங்கல் மிகப் பெரியது. சுவரின் பகுதிகள் பலமுறை உயர்த்தப்பட்டுக் காண்கின்றன. அங்குக் கிடைத்துள்ள எழுத்துக்கள் 'பிராமி' எழுத்துக்கள் என்கின்றனர். மண்பாண்டச் சிதைவுகள் அழகு மிக்கவை; பலவகை வேலைப்பாடுகள் கொண்டவை.

'பொதுசா' ஆகலாம்:

கி. பி. முதல் இரண்டு நூற்றாண்டுகளில் தென் இந்தியத் துறைமுகங்களைப் பார்வையிட்ட தாலமி, பிளினி, பெரிப்புளூஸ் ஆசிரியர் வரைந்துள்ள குறிப்புகளில் சேரபட்டினம், பொதுசா

என்பன கீழ்க்கரைத் துறைமுக நகரங்கள் என்பது காணப் படுகிறது. சேரபட்டினம் மரக்காணம் என்பது ஆராய்ச்சி யாளர் முடிபு.

"பொதுசா இன்னது என்பது தெரியவில்லை" என்பது அன்னார் கூற்று. அப்பொதுசா கடற்கரை ஓரமுள்ள அரிக்க மேட்டினுள் புதையுண்டு கிடக்கும் நகரமாக இருத்தல் கூடும்.

முடிவு :

மெய்யாகவே அரிக்கமேடு தென்னிந்திய நாகரிகத்தைத் தெளிவுற விளக்கும் பண்டை இடமாகும். மாந்தோப்பின் அடியில் மாண்புடைய நகரம் ஒன்று புதையுண்டு கிடக்கிறது. புதையுண்ட நகரத்தில் சில மாடி வீடுகளும் இருத்தல் கூடு மென்று நினைத்தற்கு இடமுண்டு. மொஹெஞ்சோ-தரோவை ஒழுங்காகத் தோண்டி எடுத்தாற்போலச் சாத்திரீய முறையில் ஆராய்ச்சி நடைபெறுமாயின், முழு வீடுகள் கண்டறியப் படலாம். பலவகைப் பொருள்களைக் காணலாம். மேட்டுக் கருகில் ஓடும் செஞ்சியாற்றையும் தோண்டிப் பார்த்தல் வேண்டும். ஆற்றின் அடியில் பல பொருள்கள் இருப்பதாக வலைஞர் கூறுகின்றனர். அவர் கூற்று உண்மையே ஆகும். அரிக்கமேட்டின் காலம் கி. மு. 550-விருந்து கி. பி. 500 என உத்தேசமாகக் கூறலாம். அதனில் கிடைத்துள்ள மட்பாண்டச் சிதைவுகள் பல மொஹெஞ்சோ-தரோவில் கிடைத்தவற்றை ஒத்துள்ளன. மேலும் மேட்டினுள இரண்டு அடுக்குகள் இருத்தல் கூடுமென்று டாக்டர் ஐயப்பன் கூறுகின்றார்.

அவ்வரிய மேட்டை தமிழர் தம் பழைய நாகரிகத்தைப் பாதுகாத்து வைத்துள்ள அப்பெரிய சுரங்கத்தைத் தோண்டிப் பார்த்தல் அரசியலார் கடமையாகும். தமிழ்ப் பெருமக்கள் ஊக்கங்கொண்டு அரசியலாரைத் தூண்டித் தாமும் பொரு ளுதவி செய்வாராயின் அரிக்கமேட்டின் அற்புதங்கள் பல வெளிக்கொணர ஆராய்ச்சி வேலை செவ்வனே நடைபெறும். இம்முயற்சிக்குத் தமிழ்த்தாயின் திருவருளை வேண்டுதும். அரிக்கமேடு வாழ்க!

5. தமிழன் கண்ட மலேயா

[புலவர். அ. மு. பரமசிவானந்தம் அவர்கள்,
B. O. L., M. Litt.]

கோலாலம்பூர்,
3—6—49

அன்புடை அரசி!

மலாக்காவில் கடைசி நாள்

முந்திய கடிதங்களெல்லாம் முறையாகப் பெற்றிருக்கக் கூடுமே! அனைத்தையும் படித்து மலேயாவைப் பற்றிய பல செய்திகளை நீ அறிந்திருக்கக் கூடும். 1-6-48-ல் நான் முன் குறித்தபடி மலாக்காவில் 'தமிழ்க் கலை' என்னும் பொருள் பற்றி சொற்பொழிவாற்ற வேண்டியிருந்தது. அன்று காலை யில் எழுந்து நெடுந்தொலைவு நடந்தேன். நான் சென்னையை விட்டு வந்த பிறகு காலையில் நடக்கும் முறையினை அன்றுதான் மேற்கொண்டேன் தொடர்ந்து நேற்றும் இன்றும் நடக்கின் றேன். இன்று வெளியே அதிகமாக எங்கும் செல்லவில்லை. கடைத் தெருக்கள் எப்படி இருக்கின்றன என்பதை மட்டும் காணச் சென்றேன். அங்கு மலாக்காவில் தமிழ் அச்சிடும் பணியினைப் பெருவாரியாகச் செய்யும் சீனர்கட்கு உரித்தான ஓர் அச்சகத்தைக் கண்டேன். அதில்தான் தமிழ்க் கொடியும் பிற நாட்டு கூட்ட நிகழ்ச்சிகளும் அச்சாகின்றன என அறிந் தேன். அந்த அச்சகம் சீனருக்குச் சொந்தமானதென்றும், இதைப் போன்றே சிங்கப்பூரிலும் இன்னும் பல இடங்களிலும் அச்சுத் தொழிற்சாலை அமைத்திருக்கிறார்கள் என்றும் அறிந் தேன். இப்படி ஒருவரே பல இடங்களில் அச்சுத் தொழிற் சாலை சிறப்புற நடத்துவது நம் நாட்டில் அதிகமாகக் காணப் படாததொன்றல்லவா. அந்த அச்சகம் சீனருக்குச் சொந்த மானதாயினும் அதை நடத்துபவர் ஒரு யாழ்ப்பாணத் தமிழர் ஆவர். யாழ்ப்பாணத்தவரும் தமிழர்தான் என்பதும், இலங்கை யில் அவர்கள் வாழ்ந்தாலும் அவர்கள் தமிழ்ப் பற்றும், தமிழ் நாட்டுப் பற்றுமுடையவர் என்பதும் உனக்குத் தெரியுமே! சிறந்த தமிழ்ப் பற்றுடைய இவ்வச்சக மேற்பார்வையாளர் முன்னமே ஒரு நாள் வீட்டிற்கு வந்து என்னைக் கண்டு

சென்றார். நான் சென்றதும் வருக என்று வரவேற்று அச்சகப் பகுதிகள் யாவற்றையும் காட்டினார். அவ்வச்சகத்தோடு சேர்ந்த ஒரு கடையும் முன் அமைந்திருந்தது. அதில் பல விளையாட்டுப் பொருள்களும் இருந்தன. சில வேடிக்கையாக இருந்தன. இரண்டொன்றை நான் வரும்பொழுது வாங்கி வருகிறேன்.

மாமிச உணவு :

அச்சகத்தின் பல பகுதிகளையும் பார்த்துவிட்டுச் சிறிது நேரம் அங்குத் தங்கி அவர் அளித்த உபசாரத்தை ஏற்று பிறகு நானும் உடன் வந்த மற்றொருவரும் பல கடைகளையும் பார்க்கப் புறப்பட்டோம். கடைகள் வரிசையாக அமைந்திருந்தன. பெரும்பாலும் சீன மக்களே கடைகளை வைத்து நடத்தி வருகிறார்கள். ஒரு நல்ல சிற்றுண்டிச் சாலை நமக்கு ஏற்ற முறையில் இங்குக் கிடையாது. சீனர் தம் சிற்றுண்டிச்சாலைகள் பல. அவற்றில் மீனும், கறியும் மிகுதியாக அமைந்து கிடந்தன. குழந்தாய்! மாமிசப் பொருள்களை நம் நாட்டில் மறைவாக விற்கின்றார்கள். அந்த முறை இங்குக் கையாளப்படவில்லை. அந்த வகையில் இந்நாட்டு மக்களது நாகரிகமும், நலமும் மிகக்குறைவு என்றுதான் நினைக்கின்றேன். கண்ட கண்ட இடங்களில் மாமிசக் கண்டங்களைச் சுட்டதும், பச்சையுமாக வைத்துக்கொண்டு விலை கூறித் திரிகிறார்கள். சீனர்கள் பாம்பு முதற்கொண்டு எல்லா வகையான மாமிசங்களையும் தின்பார்களாம். எனக்கு ஒன்றிரண்டிடங்களில் வாயிலெடுக்கவும்கூடத் தோன்றிற்று. சென்னை நகரங்களில் மாலை வேளைகளில் பலகாரங்களையோ 'ஐஸ்' முதலியவற்றை வண்டிகளில் வைத்து விலை கூறி வரும் வகைகளனைத்தும் உனக்குத் தெரியுமே! அந்த முறையில் பல வகை மாமிசங்களைப் பக்குவப் படுத்தி சந்திகளில் பலர் வைத்துக்கொண்டு நிற்கும் காட்சி என்னை மயங்க வைத்தது. சந்திகளில் மட்டும் அல்லாது பெரும் உணவு விடுதிகளிலும் இக்கதியே. மற்றும் உலர்ந்த மாமிசப் பண்டங்கள் பலசரக்குக் கடைகளில் நிரம்ப மாட்டப்பட்டிருக்கும். நீண்ட மீன்களது உடல்கள் கயிறுகளில் கட்டித் தொங்க வைத்திருப்பதைக் கண்டேன். சிறு சிறு மீன்களைப் பிரித்துக் கூடைகளில் பருப்பு வகைகளைப் போல நிரப்பி வைத்திருந்தார்கள். அவற்

ளுேடு கூடத்தான் பிற பருப்பு, வெங்காயம் போன்ற நம் தேவைக்கு வேண்டியனவற்றையும் வைத்திருந்தார்கள். நமக்கு வேண்டியவற்றையும் அவைகளுக்கிடையில் சென்று தான் வாங்கவேண்டும். ஆனால், ஒன்று இங்கு வாழ்கின்ற தமிழர்களிலும் பெரும்பாலோர் மீனும், இறைச்சியும் உண் கிறவர்கள்தான்.

செல்வி! இத்தகைய கடைக் காட்சிகளைக் கண்டு கொண்டே சென்றோம் நானும் என் உடன் வந்தவரும். இங் குப் பெரும்பான்மையானவர்கள் மாமிச உணவில் பழகுபவர் களாதலில் இந்த நிலை இங்கு உள்ளது என்றார் அவர். நான் வாய் மூடி மௌனியாகிப் பேசாது மேலே சென்றேன். பிறகு அவர் அங்கே இருந்த ஒரு படக் காட்சிச் சாலையைப் பார்க்க அழைத்தார். அதுதிறந்திருந்தது. சென்னையில்இருக்கும் சிறந்த சாலைகளைப்போல அது அமைந்திருந்தது. இந்த நாட்டில் ஒவ் வொரு சிறு ஊரிலும் படக்காட்சிச் சாலையும், உணவுச் சாலை யும் இருக்கும் என்றார். அந்த ஊரில் இன்னும் பல காட்சிச் சாலைகளும் இருக்கின்றன என்றார். பிறகு இன்னும் பிற சிறந்த ஊர் நலங்களைக் கண்டு கொண்டே சென்றோம். அம் மலாக்கா ஊரின் இடையே ஒரு சிற்றாறு ஓடிக்கொண்டிருந் தது. அதைக் கடக்க ஆங்காங்கு பல பாலங்கள். பாலங் களின் அமைப்பு மிக எளியதாகத்தான் இருந்தது. இன்னும் பல நலங்களைக் கண்டு கொண்டே வீட்டிற்கு வந்தோம்; உணவு உண்டோம். பகல் ஓய்வு பெற்றேன். மாலை 6-30க்குச் சொற் பொழிவுத் தொடக்கம்.

பந்து விளையாட்டு :

கூட்டம் தொடங்குவதற்கு முன், காற் பந்து போட்டி ஒன்று நடைபெற்றது. நம் நாட்டில் பந்தயங்களை வேடிக்கை பார்ப்பதுபோலச்சிறந்த கூட்டம் அந்த ஆட்டத்தைப் பார்த்து அதிலேயே திளைத்திருந்தது. அன்று ஆடிய குழு மலேயா விலேயே சிறந்த குழு என்றும், எனவே பெருவாரியான மக்கள் அதைக் காணச்செல்கிறார்கள் எனவும் அறிந்தேன். இந்நாட்டில் இப்பந்து விளையாட்டில் மக்கள் விருப்புடையவர்கள். பல ஊர் களிலிருந்து பந்தாட்டம் பார்க்க வருகிறார்கள். கூட்டத்தைத் தாண்டித்தான் சொற்பொழிவிற்குச் சென்றேன். 6-30க்குக்

கூட்டம். 8-15க்குக் கூட்டம் முடிவு பெற்றது. இடையிடையே இசையாசிரியர் சேதுராமன் அவர்கள் தமிழிசை பாடினார். கூட்டம் முடிந்த பின் பல அன்பர்கள் வந்து சென்றார்கள். மறுநாள் கோலாலம்பூர் செல்வதால் பல நண்பர்கள் கண்டு பிரியா விடை பெற்றுச் சென்றனர்.

கோலாலம்பூருக்கு வழியில் :

மறுநாள் காலையிலும் நடந்தேன். மலாக்காவில் உள்ள சோலை நகரில் அரசியல் அலுவலாளர்களெல்லாம் தங்கி இருந்ததைப் பார்த்தேன். காலைக் கடன்களை முடித்துப் புறப்படத் தயாரானேன். புறப்படுமுன் பலர் வந்து கண்டு சென்றார்கள். அனைவரும் ஊருக்குத் திரும்புங்கால் மறுமுறையும் மறுமுறையும் மலாக்காவில் வந்துபோக வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்கள் சரியாக 11-மணிக்குக் காரில் புறப்பட்டோம். திரு. அருணசலம் செட்டியார் அவர்கள் குடும்பத்தோடு உடன் வந்தார்கள். வழியில் சன்ஞசி மலை என்ற இடத்திற்குச் சென்றோம். அது செட்டிமார்களுக்குச் சொந்தமான கோயிலாம். ஒரு துறவி அங்கே சமாதி அடைந்தாராம். ஒரே சமயத்தில் 5000 பேர் சாப்பிடக்கூடிய பெருமண்டபங்களும், அதற்கேற்ற அட்டிற்சாலைகளும் இருந்தன. மறைந்த அடிகளார் வழிபட்ட இலிங்க உருவமும் முருகனது உலாவிழாவுக்கான உருவமும் (உற்சவ மூர்த்தம்) இருந்தன. போர்க் காலத்தில் மலாக்காவில் உள்ள செட்டிமார் அனைவரும் இங்கே வந்துதான் தங்கி இருந்தார்களாம். அவர்களது இலட்சக் கணக்கான செல்வத்தை இங்கேதான் மூடிவைத்தார்களாம். அதற்கென அமைக்கப்பட்ட ஒரு நிலவறை இன்னும் இருக்கிறது. ஒரு செட்டியார் அவர்கள் போர்க் காலத்தை அம்மக்கள் எவ்வாறு அங்குக் கழித்தார்களென்பதை விளக்கினர். இந்த இடம் மலாக்காவிற்கு ஐந்து கல் தொலைவில் இருக்கிறது.

பிறகு நாங்கள் நேரே கோலாலம்பூருக்குப் புறப்பட்டோம். இடையில் சிரம்பான் என்னும் ஊரில் தங்கி பகல் உணவு கொண்டு, ஓய்வு பெற்ற பிறகு மாலை 4-மணிக்குப் புறப்பட ஏற்பாடாயிருந்தது. கார் மிக விரைவாகச் சிரம்பான் நோக்கிச் சென்றது. அதன் வேகத்திற்கு ஈடாக எனது உணர்ச்சி அலையும் மிக வேகமாகப் பறந்து கொண்டு இருந்தது.

6. பணமும் பஞ்சமும்

[டாக்டர். சர். R. K. சண்முகம் செட்டியார் அவர்கள் B. A. B. L.]

ஆறுமுகம் செட்டியாருடைய பங்களாவில் ஒரு விசாலமான அறை. இந்த அறை மிகவும் அழகாக அமைந்திருக்கிறது. அறையின் நான்கு பக்கத்துச் சுவரிலும் புத்தகங்கள் நிறைந்த அலமாரிகள். அலமாரிகளெல்லாம் சுவரோடு சேர்ந்து வெகு அழகாக அமைக்கப்பட்டிருக்கிறது. சுமார் மூவாயிரம் புத்தகங்களிருக்கலாம். அறையின் ஒரு புறத்தில் பெரிய மேசை. அன்றலர்ந்த ரோஜாமலர் மேசையை அலங்கரிக்கிறது. வெகு நேர்த்தியான பச்சைத் தோலினுல் மூடிய நாற்காலிகள் இங்கு மங்கும் இருக்கின்றன. எங்கே பார்த்தாலும் சுத்தமாகவும், மனத்திற்கு ரம்மியத்தைக் கொடுப்பதாகவுமே இருக்கின்றது. செட்டியார் ஒரு நாற்காலியிலமர்ந்து ஏதோ ஒரு புத்தகத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிருர். நேரம் காலை பத்து மணி.

வேலுசாமி நாயுடு வெகு அவசரமாக அறைக்குள் வருகிருர். காகிதத்தில் சுருட்டிய ஏதோ ஒரு சின்ன சாமான் நாயுடு கையில் இருக்கிறது. அதை மேசையின் மேல் வைத்துவிட்டு அவரும் ஒரு நாற்காலியில் உட்காருகிருர்.

ஆறுமுகம் செட்டியார்: என்ன வேலுசாமி நாயுடு உலகத்தையே வெறுத்துவிட்டவர் போலிருக்கிறதே உங்கள் முகத்தைப் பார்த்தால். என்ன சமாச்சாரம் ?

வேலுசாமி நாயுடு: சரிதான் சார். இப்படியே போய்க் கொண்டிருந்தால் ஜனங்கள் எப்படிப் பிழைப்பதோ தெரியவில்லை. பல்பொடி ஒரு டப்பி வாங்க கடைக்குப் போயிருந்தேன். இதோ மேசைமேல் வைத்தேனே அதுதான். முன்பு ஒரு ரூபாய் விலைக்கு விற்ற ஒரு டப்பி இப்பொழுது நான்கு ரூபாய்.

ஆ. செ: அடாடா! இதற்குத்தான இவ்வளவு சலிப்பு. சண்டை சமயத்தில் சாமான்கள் கிடைப்பதென்ருல் கஷ்டம் தான்.

வே. சா. நா: வெளி நாடுகளிலிருந்து சாமானகள் வருவது குறைந்து விட்டபடியால் அவைகளுக்கு விலையேறுவது நியாய மென்று ஒப்புக்கொள்கிறேன். உள் நாட்டுச் சாமான்களுக்கும் கூட ஏன் இப்படி விலை அதிகமாக வேண்டும்!

ஆ. செ: சண்டை சமயத்தில் பொதுவாக விலைவாசிகள் அதிகமாவதற்கு இரண்டு முக்கிய காரணங்களுண்டு.

(1) பட்டாளங்களின் தேவைக்கும், நம்முடைய பக்கம் சண்டை செய்யும் நேச நாடுகளுக்கு அனுப்புவதற்கும் நம் முடைய சர்க்காரே கோடிக் கணக்காக சாமான்கள் வாங்குகி றார்கள். அதனால் பொது ஜனங்களுக்கு வேண்டிய அளவு சாமான் கிடைப்பதில்லை.

(2) ஜனங்களிடத்தில் பணம் அதிகமாய்விட்டது. கையில் பணம் ஏராளமாயிருக்கும் போது ஒன்றுக்கு இரண்டாக விலை கொடுத்து வாங்க போட்டி ஏற்படுகிறது. கிடைக்கும் சாமான் களோ கொஞ்சம்தான். அவைகளை வாங்குவதற்குப் போட்டி அதிகம். முடிவில் விலை ஏறிவிடுகிறது.

வே. சா. நா: சர்க்கார் அவ்வளவு சாமான் வாங்குகிறார் களா என்ன?

ஆ. செ: சண்டை ஆரம்பத்திலிருந்து 1939-ஆம் வருஷம் செப்டம்பர் மாதத்திலிருந்து 1942-ஆம் வருஷம் டிசம்பர் மாதம் வரையில் சர்க்கார் சப்ளை இலாக்கா மூலமாக 455 கோடி ரூபாய்க்குச் சாமான்கள் நம் நாட்டில் வாங்கியிருக் கிறார்கள். இப்போதும் மாதம் ஒன்றுக்குச் சுமார் 20 கோடி ரூபாய்க்குச் சாமான்கள் வாங்கிக் கொண்டேயிருக்கிறார்கள்.

வே. சா. நா: அப்படியா, சர்க்காரே மாதம் 20 கோடி ரூபாய்க்குச் சாமான் வாங்கினால் ஜனங்கள் பாடு திண்டாட்டம் தான். அதிருக்கட்டும் சார். விலைகளேறி விட்டதற்கு இன் னொரு காரணம் இருக்கிறதென்று பத்திரிகைகளில் எழுது கிறார்களே அதாவது சர்க்கார் கரன்ஸி நோட்டுகளை ஏராள மாய் அச்சுபோட்டு வெளியிட்டு விட்டார்களென்று சொல்லு கிறார்களே, அந்த விவரம் என்ன?

ஆ. செ: அதுவும் உண்மைதான். 1939-ஆம் வருஷம் ஜனவரி மாதக் கணக்கைப் பார்த்தால் அப்போது 203 கோடி

ரூபாய்நோட்டுகள்தான் ஜனங்கள் கையில் இருந்தன. இப்போது 734 கோடி ரூபாய் நோட்டுகள் உபயோகத்திலிருக்கிறது.

வே. சா. நா: ரொம்பப் பேஷ்! நமக்குப் பணம் தேவையானால் கஷ்டப்பட்டுச் சம்பாதிக்க வேண்டும். சர்க்காருக்குப் பணம் வேண்டுமானால் நோட்டுப் போட்டுக் கொண்டால் போதும் போலிருக்கிறதே!

ஆ. செ: அப்படியில்லை நாயுடுகாரு. சர்க்கார் இஷ்டப்பட்ட போதெல்லாம் நோட்டுகளை அச்சடித்து எடுத்துக் கொள்ள முடியாது. சர்க்கார் அச்சு போடும் ஒவ்வொரு நோட்டுக்கும் கஜானாவில் ஆதாரமிருக்க வேண்டும்.

வே. சா. நா: அதென்ன ஆதாரம் சார்.

ஆ. செ: சொல்லுகிறேன் கேளுங்கள். எவ்வளவு நோட்டுகள் சர்க்கார் வெளியிடுகிறார்களோ அவ்வளவுக்கும் தங்கம், வெள்ளி நாணயங்கள் கவர்ன்மெண்ட் பாண்டு — இப்படிபட்ட ஆதாரம் வேண்டும். இவ்விதமான ஆதாரங்களில்லாமல் ஒரு நோட்டு கூட வெளியிட சர்க்காருக்கு அதிகாரமில்லை. இதைப்பற்றி ஒரு சட்டம் ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்தை மீறி நடக்க முடியாது. இப்போது 734 கோடி ரூபாய் நோட்டுகள் வெளியிலிருக்கிறது என்று சொன்னேனல்லவா. இதற்கு ஆதாரமாக இந்தத் தேதியில் சர்க்கார் கஜானாவில் 45 கோடி ரூபாய்த் தங்கம் 15 கோடி ரூபாய் வெள்ளி நாணயங்கள் 120 கோடி ரூபாய் பெறுமான இந்திய கவர்ன்மெண்ட் பாண்டுகள் 554 கோடி ரூபாய் பெறுமான பிரிட்டிஷ் கவர்ன்மெண்ட் பாண்டுகள் இவைகளெல்லாம் ஆதாரமாயிருக்கின்றன.

வே. சா. நா: அப்படியா சாமாச்சாரம். இப்போது 734 கோடி ரூபாய் நோட்டுகள் வெளியிலிருக்கிறதென்று சொன்னீர்களே எதற்காக இவ்வளவு நோட்டுகளைச் சர்க்கார் வெளியிட்டார்கள்?

ஆ. செ: பிரிட்டிஷ் கவர்ன்மெண்டின் சார்பாக நமது இந்திய கவர்ன்மெண்ட் கோடிக் கணக்காகச் சாமான்கள் வாங்க வேண்டியிருக்கின்றது. இந்தச் சாமான்களுக்கெல்லாம் கிரயம் கொடுக்கப் பணம் வேண்டுமல்லவா? பிரிட்டிஷ் கவர்ன்

மெண்டாரல்லவா கிரயப் பணம் கொடுக்க வேண்டும். பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரிடத்தில் அவர்கள் தேசத்து நாணயந்தானே இருக்கிறது. நம்முடைய நாணயத்திற்கு ரூபாய் என்று பெயர். ஒரு ஸ்டர்லிங் என்ருல் சுமார் 13-4-0 ரூபாய். பிரிட்டிஷ் கவர்ன்மெண்டுக்காக நம்முடைய சர்க்கார் 13250 ரூபாய்க்குப் பஞ்சு வாங்குகிருர்களென்று வைத்துக் கொள்வோம். பிரிட்டிஷ் கவர்ன்மெண்ட் இந்தப் பஞ்சுக்காக 1000 ஸ்டர்லிங்கை லண்டனில் இந்தியா மந்திரியிடம் கொடுத்து விடுகிருர்கள். இந்த 1000 ஸ்டர்லிங்கை ஆதாரமாக வைத்துக் கொண்டு 13250 ரூபாய்க்கு நோட்டுகள் அச்சடித்துப் பஞ்சின் கிரயத்தை நம்ம வியாபாரிகளுக்குக் கொடுத்து விடுகிருர்கள். நம்முடைய நோட்டுகளுக்கு இப்போது 554 கோடி ரூபாய் பெறுமான பிரிட்டிஷ் கவர்ன்மெண்ட் பாண்டுகள் ஆதாரமாயிருக்கிற தென்று சற்று முன்னே சொன்னேனல்லவா. இந்த விதமாய்த்தான் இந்தப் பாண்டுகள் ஆதாரமாக வந்து சேர்ந்தன.

வே. சா. நா: அப்படியானுல் சண்டை முடிவாகும் வரையில் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் நம்ம நாட்டில் இன்னும் சாமான்கள் வாங்கிக் கொண்டே இருப்பார்கள். அவர்கள் சாமான்கள் வாங்க வாங்க நோட்டுகளும் அதிகமாய்க் கொண்டே போகும் போலிருக்கிறதே!

ஆ. செ: நீங்கள் சொல்வதுஉண்மைதான். 1942 ஆம் வருஷம் ஜூன் மாதத்திலிருந்து 1943 ஆம் வருஷம்ஜூன் மாதம் வரையில் ஒரு வருஷத்தில் 255 கோடி ரூபாய் நோட்டுகள் அதிகமாய் விட்டன. இப்போது மாதம் ஒன்றுக்கு 12 கோடி முதல் 15 கோடி வரையில் அதிகமாய்க்கொண்டே போகிறதே.

வே. சா. நா: இப்படியே போய்க் கொண்டிருந்தால் இன்னும் விலைவாசி அதிகமாகும். சர்க்கார்தான் என்ன செய்கிருர்கள்?

ஆ. செ: சர்க்கார் ஏதோ சில முயற்சிகள் செய்து கொண்டுதான் இருக்கிருர்கள். இந்த முயற்சிகளின் முக்கிய நோக்கம் ஜனங்களிடம் இருக்கும் பணம் சர்க்கார் கையில் போய்ச் சேரும்படி செய்வதுதான். (1) வரிகளை அதிகப்

படுத்தி இருக்கிறார்கள். (2) வரிகளைத் தாமதம் இல்லாமல் வசூல் செய்ய வேண்டிய ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். (3) மில்கள் போன்ற பெரிய கைத்தொழில் கம்பெனிகள் பங்கு தாரர்களுக்கு அதிகமாக லாபத்தைப் பிரித்துக் கொடுக்காமலிருக்கும்படி வந்த லாபத்தில் வரி போக 100 க்கு 13 வீதம் சர்க்காரிடம் டிபாஸிட் செய்ய வேண்டும் என்று கட்டாயச் சட்டம் செய்திருக்கிறார்கள். (4) கவர்ன்மெண்ட் பாண்டுகளில் பணத்தைப் போடும்படி ஜனங்களைப் பல விதத்தில் தூண்டுதல் செய்கிறார்கள். (5) துணி, நூல், அரிசி முதலிய பண்டங்களை இன்ன விலைக்கு மேல் விற்பனை செய்யக் கூடாதென்று உத்தரவுகள் போட்டிருக்கிறார்கள். சர்க்கார் உத்தரவுகள் ஒருபுறமிருக்கட்டும். உங்களைப் போன்றவர்கள் அவசியமில்லாத சாமான்களை வாங்காமலும் இருக்க வேண்டும். 4 ரூபாய் கொடுத்து ஒரு டப்பி பல்பொடி நீங்கள் ஏன் வாங்க வேண்டும்? பல் குச்சியினால் பல்லைச் சுத்தம் செய்யக்கூடாதோ?

வே. சா நா: நல்ல வேலை சார். என்னுடைய பல் எல்லாம் கோணை என்று இப்போதே நண்பர்கள் கேலி செய்கிறார்கள். பல் குச்சியைப் போட்டு இன்னும் என்னுடைய பற்கள் போய் விட்டால் உங்களுக்குத் திருப்தியாய் இருக்கும் போலிருக்கிறது. அதிருக்கட்டும் நீங்கள் இதுவரையில் சொல்லி வந்த விஷயங்கள் ரொம்பவும் முக்கியமானவை. இது விஷயமாய் இன்னும் சில கேள்விகள் கேட்கலாமோ?

அ. செ: மற்ற கேள்விகளை நாளைக்கு வைத்துக் கொள்வோம். இப்போது சாப்பிடும் நேரமாய் விட்டது. எழுந்திருங்கள் போய் சாப்பிடலாம்.

[இருவரும் எழுந்து உள்ளே போகிறார்கள்]

7. கம்பர் காட்டும் பெண்கள்.

[வித்வான். பண்டித. கா. பொ. இரத்தினம் அவர்கள்]

[பி. ஏ. (ஆனர்ஸ்) லண்டன், எம், ஏ., பி. ஓ. எல். சென்னை., தலைமைத் தமிழ் விரிவுரையாளர், அரசினர் ஆசிரியர் கலாசாலை, கொழும்பு]

இராமாயணக் கதை தமிழ் மக்கள் யாவருக்கும் நன்கு தெரிந்த ஒரு கதை. இந்தக் கதையின் நிகழ்ச்சிகளுக்குப் பெரும்பாலும் பெண்களின் சூழ்ச்சிகளே காரணங்களாக விருக்கின்றன. கூனியின் சூழ்ச்சியால் இராமர் காட்டுக்குப் போனார்; சூர்ப்பணகையின் சூழ்ச்சியால் இராவணன் சீதையைச் சிறை வைத்தான். துர்க்குணங்கள் நிறைந்த பெண்களுடைய சூழ்ச்சிகளால் அவர்களைச் சேர்ந்தோர்க்கும் நாட்டு மக்களுக்கும் பல தீமைகள் உண்டாகும் என்பதை இராமாயணம் சிறப்பாகக் காட்டுகிறது. தமிழ் இராமாயணத்தின் ஆசிரியராகிய கம்பர் பெண்களுடைய இயல்புகளை யெல்லாம் பலவகையான நிகழ்ச்சிகளோடு தொடர்பு படுத்திக் காட்டியிருக்கிறார்.

சீதை, கோசலை முதலியோரையும் தாடகை; சூர்ப்பணகை, கூனி என்போரையும் தமிழ் மக்கள் நன்கறிவர். சிறந்த பெண்களைச் சீதை என்று போற்றுவதும் துர்க்குணமுள்ள பெண்களைத் தாடகை, சூர்ப்பணகை, கூனி என்று பழிப்பதும் தமிழ் நாட்டுக் கிராமங்களில் இன்றும் நிகழ்ந்து வருகின்றன.

கம்பன் அழகுறத் தீட்டிய பெண் பாத்திரங்களுள் சீதை, கைகேசி, கோசலை, கூனி, தாடகை, சூர்ப்பணகை, மண்டோதரி, திரிசடை, தாரை முதலியோரை விசேடமாகக் குறிப்பிடலாம். இவர்களின் இயல்பைச் சுருக்கமாக அறிவோம்.

முதலிற் சீதையைப் பார்ப்போம். இராமாயணத்தின் கதாநாயகி சீதா பிராட்டியாரேயாவார். இராமாயணம், சிறையிருந்த செல்வியின் ஏற்றத்தைக் கூறுகிறதென்று அறிஞர் உரைப்பர். இலங்கையில் அசோக வனத்திற் சீதா பிராட்டியார் சிறையிருந்து பெருந்தவம் செய்தார். அதனால் தர்மம் தண்டித்தது; அதர்மம் அழிந்தது. இன்பம் பெருகியது. துன்பம் தொலைந்தது. அன்றியும், நாட்டு மக்களின் நல்வாழ்வுக்குப்

பெண்களின் நல்லொழுக்கமும் தியாகமுமே இன்றியமையாதன என்பதும் நிலைநாட்டப்பட்டது. பெண்களிடத்து அமைய வேண்டிய பெருங்குணங்களை யெல்லாம் கம்பர் சீதா பிராட்டியாரிடம் வைத்து அவற்றை ஓர் இலட்சியப் பெண்ணுகச் சிருட்டித்துள்ளார். சுருங்கக் கூறின், கற்பினுக்கு அரசாகவும், அழகினுக்கு அழகாகவும், புகழின் எல்லையாகவும், நாணம், மடம் முதலிய பெண்மைக் குணங்களுக்கு இருப்பிடமாகவும் பிராட்டியார் விளங்குகிருர் எனலாம்.

அழகிலே சீதா பிராட்டியாருக்கு நிகரானவர்கள் இந்த உலகில் இல்லை. அகத்தழகும் நல்லுணர்வும் இல்லாத சூர்ப்பணகைகூடச் சீதா பிராட்டியாரின் அழகைக் கண்டுவிட்டாள். தண்ட காரணியத்திலே சீதையைக் கண்ட சூர்ப்பணகை தன் கண்களை அப்புறப்படுத்தாமல் அவருடைய அழகினை நெடு நேரம் பருகினுள்; அழகினுக்கு எல்லையில்லை என்றுணர்ந்தாள். ஆண்களை அன்றிப் பெண்களையும் மயக்கும் பேரழகுடைய பிராட்டியார், நற்குணங்கள் யாவும் உடையவர் எனினும் அவரிடத்தும் பெண்பாலார்க்குத் தனிமையாகவுள்ள சில குறைகள் இல்லாமல் இல்லை. இக்குறைகளே அவரை நமது அனுதாபத்திற்குரிய பாத்திரமாக ஆக்குகின்றன என்பதையும் நாம் உணர்தல்வேண்டும். இராமர் பதினன்கு வருடம் காட்டுக்குப் போகவேண்டி வந்தபோது, 'காட்டுக்கு நானும் வருவேன் என்று அவர் இராமரோடு வாதாடினர்; பிடிவாதம் செய்தார்; பெண்களின் இயல்பைக் காட்டினர். காட்டில் இராவணனல் அனுப்பப்பட்ட மாரீசனகிய மாய பெண்மானைக் கண்டவுடன் பிடித்துத் தரும்படி கேட்டதும், வீட்டிலே அழகிய கிளிகளை அவர் வளர்த்ததும், அவருக்கு அழகான பொருள்களில் இருந்த ஆசையைக் காட்டுகின்றன. மாரீசனகிய மாய மானின் பின் சென்ற இராமர் திரும்பி வராமையால் இலக்குவனைப் போய்ப் பார்க்கும்படி கேட்டார். இலக்குவன் உடனே போக விரும்பாதது கண்டு அவனைத் திட்டிய கோபாவேசம் 'ஆத்திரக்காரனுக்குப் புத்திமட்டு' என்பதை மாத்திரமின்றிப் பெண்களுக்கு இயல்பாகவுள்ள சபல குணத்தையுங் காட்டுகிறது. இலக்குவனை அச்சமயத்துக் கடிந்து பேசிய பிராட்டியார் தாம் அப்படிச் செய்தமையாற்றுன் இலக்குவன் பிரிந்து செல்ல,

இராவணன் தம்மை தூக்கிச் சென்ருன் என்பதைப் பின்னர் உணர்ந்தார்; தம் மதியீனத்தை நினைந்து நினைந்து வருந்திஞர்; அசோக வனத்தில் அனுமானைக் கண்டபோது தாம் இலக்குவனைக் கடிந்து பேசியதற்குக் காரணம் தமது "பெரிய பேதமைச் சின்மதிப் பெண்மையே" என்று வெளிப்படையாகவும் கூறினர்.

இராமர் எப்போது வருவார் என்று இலங்கையில் இருக்கும் போது ஏங்கித் தவித்தார்; கடைசியில் உயிர்விடவும் தீர்மானித்தார். இப்படி விரைவில் மனம் அழிந்த பிராட்டியார் இராவணனைத் திட்டும் பொழுதும், அவனை நாய் என்று பழிக்கும் பொழுதும் தமது கற்பின் திண்மையைக் காட்டி, வீரப் பெண்ணுகவும் விளங்கினர். எவ்வித இடர் வந்துற்றபோதும் இராமரையே நினைந்து நிறைந்து உறுதியுடன் தம் கற்பினைக் காத்து நின்ற அவர், கற்புடைய பெண்களுக்கு ஒரு பேரொளியாவார். அசோக வனத்திலே பிராட்டியாரைக் கண்டு வந்த இராமதூதன் "இற்பிறப் பென்ப தொன்றும் இரும் பொறை என்பதொன்றும் கற்பெனும் பெயரதொன்றும் களிநடம் புரியக் கண்டேன்" என்று அவருடைய அரும் பெருங் குணங்களை அழகாக எடுத்துக் கூறியுள்ளார்.

இனி கோசலையின் இயல்புகள் ஆராயத்தக்கன. கோசலை இராமனைப் பெற்ற தாய்; பொறுமை, கற்பு, தாய்மை முதலிய பண்புகளுக்கு இருப்பிடமாக விளங்குகிருள். தன் மகனுகிய இராமன் முடிசூடப்போகிருனென்று பெருமிதமோ, தன் சக்களத்தியாகிய கைகேசியின் மகன் அரசுரிமையைத் தாயின் சூழ்ச்சியாற் பெற்றுவிட்டானென்று பொருமையோ கொள்ளாத நல்லாளாகவும் அவள் மிளிர்கிருள். தாராளமான மனம் படைத்தவளாகிய கோசலை இராமனிடம் கொண்ட அன்பினுலே தானும் காட்டுக்குப் போக விரும்பியது அவளுடைய புத்திர வாஞ்சையைக் காட்டுகிறது. இராமன், 'தங்கள் கடன் தங்கள் கணவனை ஓம்புதலே' என்று கூறியதும், உண்மையை உணர்ந்து, நாட்டிலிருந்து நாயகனைத் தேற்றியது அவளது கடமை உணர்ச்சியைப் புலனுக்குகின்றது. கங்கை வேடனுகிய குகன் தாழ்ந்த சாதியினனுயினும் அவன் காட்டிய பேரன்பு காரணமாக அவனைத் தன் மக்களுள் ஒருவனுகக் கொண்டு

பாராட்டிய பெருஞ்செயல் தாழ்ந்த சாதியினரையுஞ் சமமாக மதிக்கும் அவளுடைய பெருந்தன்மைக்குச் சான்று பகர்கின்றது.

கைகேசி தசரதச் சக்கரவர்த்தியின் இளைய மனைவி; பரதனைப் பெற்ற தாய்; அரச குடும்பத்திற் பிறந்து சக்கரவர்த்தியின் காதல் நாயகியாக இருக்கிறேன் என்னும் பெருமிதம் உடையவள்; ஆடம்பர வாழ்விலும், பிறருக்குக் கொஞ்சமும் குறையாத நிலைமையிலும் ஆசை கொண்டவள்; பட்டம், பதவி, மண், பொன் முதலியவற்றில் மோகங் கொண்டவள்; தன் பெருமைக்கு செல்வாக்குக்கு—ஏதம் வருமாயின் அதனை நீக்க எதனையும் செய்யத் துணிபவள். இராமனைத் தன் மகன் போலவே மதித்து அளவிலாத அன்பு கொண்டிருந்த அவளுக்கு "இராமன் முடி சூடுதலால் கோசலை சக்கரவர்த்தியின் தாயாக, நீ முடியிழந்த ஒரு மன்னனின் மனைவியாகத்தானே வாழ்வாய்" என்று கூனி உபதேசித்தாள். உடனே கோசலையைவிடத் தான் மதிப்படைய எண்ணி இராமன் காடாளவும் தன் மகன் பரதன் நாடாளவும் சூழ்ச்சி செய்தாள் இக்கொடியாள். இராமன்பாற் கொண்ட அன்பை மாத்திரமா துறந்தாள்; காதலுடன் கைப்பிடித்த கணவன், தன் சூழ்ச்சியால் இறப்பான் என்பதையும் இவள் பொருட்படுத்தவில்லை. "இராமனைக் காட்டுக்கு அனுப்பாதே; அனுப்பினல் நான் மாள்வேன்; எனக்கு உயிர்ப்பிச்சைத் தா" என்று தன் நாயகன் இரக்கவும், இரங்காத கூற்றம் ஆனள் அவள். தோற்றத்தில் நல்லவர்களாக இருக்கும் பெண்கள் தம் நலங்கருகி தீவிகளாக மாறும் இயல்பைத்தான், கைகேசி கடைசியிற் காட்டினுள்.

இந்தக் கைகேசிகூட நல்லவளாக இருந்திருப்பாள், கூனி எனும் கொடியவள் அவளின் மனத்தை மாற்றுவிட்டால். கூனி கைகேசியின் தோழி; காரணமின்றியும் பிறர்மேல் அழுக்காறு கொள்ளும் இயல்புடையவள். பாரதத்தில், துன்மதிக்கும் சூழ்ச்சிக்கும் இருப்பிடமாக எவ்வாறு சகுனி மாமா விளங்குகிருரோ, அவ்வாறே இராமாயணத்திற் கூனி விளங்குகிருள். பெண் இனத்துக்கே வசையீட்டி விளங்கும் இக்கூனியைக் கம்பர் மிக நுட்பமாகப் படைத்திருக்கிருர். அடுத்துக் கெடுக்கும் குணமும், பிறர் நன்ருக வாழப் பொருத தன்மையும் அவ

வின் இயல்புகள். கைகேசி போன்ற, அன்பும், அறிவும் நிரம்பிய பெண்களையும் மனம் மாறச் செய்யும் சூழ்ச்சித்திற னும், சொல்வன்மையும் அவளிடம் காணப்பட்டன. நடிப்பும் பழிக்கு அஞ்சாமையும், எடுத்த காரியத்தை முடிக்கும் திண்மையும் கூனியின் தனிப் பெருமைகள். நாம் வெறுக்கும் பாத்திரங்களுள் கூனியைப் போன்ற தொன்றினைக் காணல் முடியாது. சின்னஞ் சிறு கூனி தன் சூழ்ச்சியால் நாடு முழு வதையும் கலக்கி வைத்துவிடுகிறாளென்பதை உணரும் பொழுது கூனியைத் திட்டவே யாவரும் எண்ணுவர்.

இனி, இலங்கையில் வாழ்ந்த அரக்கர் குடியிலுள்ள பெண்களிற் சிலரைப் பார்ப்போம். இராமன் குடியை முடித்த கூனிபோல, இராவணனுடைய குடிக்கு அழிவு தேடினவள் சூர்ப்பணகையே. இராவணன் தங்கையாகிய இவள் இராம னைக் காட்டிலே கண்டவுடன் காதல் கொண்டாள். "அஞ் சொல் இள மஞ்ஞையென அன்னமென" அசைந்து காதல் மொழிகளைப் பிதற்றினாள். ஆனால், அருகிலே சீதையைக் கண்டவுடனே அவளுக்குப் பொருமையும் கோபமும் உண்டாகின. சீதையைச் சக்களத்தியாக அவள் எண்ணி னாள். இராமனிடம் கொண்ட விருப்பும், அதற்கிடையூருக விருக்கும் சீதையின் மேற்கொண்ட வெறுப்பும் சீதையைத் தொலைத்து விடும்படி அவளைத் தூண்டின. சீதையின் அழ கைப் பழித்து, அவளைத் தூற்றினாள்; எடுத்துச் செல்ல முயன் றாள். கடைசியில் இலக்குவனால் மூக்கரியுண்டு தமையனை அடைந்து புலம்பினாள். தான் செய்த கொடுஞ் செயல்களை அவனுக்குச் சொல்லாமல், அவன் பொருட்டுச் சீதையைக் கொண்டுவர முயன்றதாலேயே தனக்கு மானபங்கம் ஏற்பட்ட தென்று பொய் சொல்லிப் பாசாங்கு செய்தாள்; சீதையின் அழகை வருணித்து அவனை அவளிடம் காதல் கொள்ளுமாறு செய்தாள்; அரக்கர்குலம் அழிவதற்கே அடி கோலினாள். இரா வணன் முதலியோர் அழிந்ததற்குச் சூர்ப்பணகை இராமன்மேற் கொண்ட காமமே காரணமாயிற்று. பெண்கள் தகாத ஆசை கொண்டால் அவ்வாசை குடி குலம் முழுவதையுமே அழித்து விடும் என்பதை அவளின் காம விளையாட்டு நன்கு காட்டு கிறது.

சூர்ப்பணகையின் பாட்டியாகிய தாடகையைப் பற்றி இரண்டொரு வார்த்தை. தாடகையிடம் பெண்மைக் குணமே யில்லை. உருவம் மாத்திரம்தான் பெண். அந்த உருவத்தில் ஆண்மையும் கொடுமையுமே குடியிருந்தன. பெண்ணுருவத்தில் ஆண்மைக்குணம் கொண்டவர்களை நாம் "ஆண் மாறிகள்" என்கிறோம். இந்த ஆண் மாறிகளுக்குள் ஆண் மாறி தாடகை.

இராவணனுடைய குடும்பத்தில் சூர்ப்பணகை, தாடகை போன்ற கொடிய பெண்கள் இருந்தாலும் விபீடனன் மகளாகிய திரிசடையும், இராவணன் மனைவியாகிய மண்டோதரியும் போன்ற குணச் செல்விகளும் இருந்திருக்கிறார்கள். இளம் அரக்கிகளுள் திரிசடை, ஒரு ஞான சூரியன் போலத் திகழ்ந்தாள்; அன்பும் அறிவும் தியாக குணமும் படைத்தவள் அவள். சீதையின் காவலாளர்களுள் ஒருத்தியாக அசோக வனத்திலிருந்த திரிசடை சீதையிடம் மெய்யன்பும் உண்மை நட்பும் கொண்டு, புலிகளுக்கிடையில் வசிக்கும் மான் போல இலங்கையில் அரக்கியருக்கிடையில் விளங்கினாள்.

இராவணன் மனைவி மண்டோதரியின் மாண்பு இணையற்றது. இராவணன் உயிர் நீத்தவுடன் தானும் உயிர் நீத்த தலைக்கற்புடைய நங்கையவள். எவ்வளவு கெட்டவனாக இருப்பினும் அவனைத் தூற்றாது போற்றி, உயிர் என மதித்து வாழ்ந்த அவள் பெண்ணினத்துக்கு ஓர் அணி. இப்பெருந் திண்மை நிலையினாலே கற்பினாலே—மூவுலகப் பெண்டிரும் அவளைப் போற்றினர்; மணிவாசகரும் அவளுடைய புகழைப் பாடினார். சிறந்த கற்புடைய பெண்டிரை உயர்ந்தோர் போற்றுவர் என்று இளங்கோவடிகள் இயம்பினார். இராமாயணத்திலே சீதையும் மண்டோதரியும் யாவருடைய போற்றுதலுக்கும் உரிமையுடைய கற்பரசிகளாக என்றும் விளங்குவர்.

8. இந்தியச் சிற்பங்கள்

[திருமதி. R. S. உருக்குமணி, அவர்கள், M.A.,]

(சிற்பக்கலையின் தோற்றம் :)

உலகில் தோன்றிய முதல் மனிதனுக்கு இவ்வுலகமும் இதன் கண்ணுள்ள பல பொருள்களும் வியப்பை விளைத்தன. நீலவானமும் அதனூடு இயங்குகின்ற ஞாயிறுந் திங்களும், நாளுங் கோளும், ஒளிமீனும், ஒலிகடலும், சிறுகுன்றும், பெருமலையும், கறங்கருவியும், ஆறும், காடும் வன விலங்கும், நீள் தருவும் யாவும் முடிவற்ற விந்தைப் பொருள்களாகவே தோன்றின. அவ்விந்தைப் பொருள்களால் ஆரா வியப்பினை விளைக்கின்ற இயற்கை உலகின்கண் வாழத் தொடங்கிய முதல் மனிதருள் எவனோ ஒருவன் மற்றவரிலும் அதிகமாக இயற்கைப் பொருள்களை ஆராய்ந்திருக்கலாம். கதிரவனது வெங்கதிர் பட்டு இறுகிய களிமண் இவ்வாராய்ச்சியாளன் கண்ணுக்கு இலக்காகியிருக்கலாம். அவன் அக்களிமண்ணில் நீர் வார்த்துக் கையாற் பிசைந்து பன்முறை காலால் உழக்கி அடித்துப் பதனுக்கிச் சிறிதும், பெரிதுமான கலன்களை ஆக்கிப் பொழுது போக்கியிருக்கலாம். அவன் செய்த அக்கலங்கள் தாம் வெயிலில் உலர்ந்து இறுகி வன்மை பெற்றமையை மறுநாள் கண்ணுற்ற பொழுது களிமண்ணால் மட்கலன்கள் செய்யலாம் என்னும் கருத்து அவனுள்ளத்தில் எழுந்திருக்கலாம். அக்காலத்தில் வாழ்ந்த பிற மனிதர்கள் இங்ஙனம் முதன்முதலில் மட்கலங்களை ஆக்கியவனைப் பேரறிவாளன் எனக் கருதினரோ? அன்றிப் பிறருக்கு ஆக்கத் தெரியாத பொருளை ஆக்கிய குற்றத்தின் பொருட்டு இவனைக் கல்லால் எறிந்தும், கழுந்தாற் புடைத்தும் கொன்றனரோ? அதனை யார் துணிந்துரைக்க வல்லார்?

இஃது எங்ஙனமாயினும் ஆகுக. நாளடைவிலே மனிதர் மட்கலன்கள் செய்து, அவற்றை எரியாற் சுட்டுக் கலன்கள் செய்யக்கற்றனர். இங்ஙனம் இருக்கையில் ஒருவன் தான் ஆக்கிய சட்டி பானைகளின்மீது விரல் நகத்தால் சில கோடுகள் வரைந்திருக்கலாம். அச்சட்டி பானைகள் நெருப்பில் இட்டுச்

சுட்டபொழுது, அவன் வரைந்த கோடுகள் சிதையாமல் அவ் வண்ணமே இருப்பதையும் அவன் கண்டிருக்கலாம்.

மனிதன் என்றைக்கு விரல் நகத்தால் பானை சட்டிகளின் மீது சித்திரம் வரையத் தொடங்கினனே அன்றைக்கே நற் கலையின் அங்கங்களாக விளங்கும் சிற்பமும், ஓவியமும் தொடங்கிவிட்டன எனலாம். அன்றே மனிதன் உள்ளத்தில் எழுந்த கருத்துக்களைப் பொருளுருவில் அமைக்கத் தொடங்கி னன். மனிதனின் கற்பனவன்மை செயல் நெறியிலிறங்கிப் பொருளுருவாகத் தொடங்கியது எனலாம். அந்நாள் தொட்டு இந்நாள்காறும் சித்திரங்களால் அழகுற்ற சட்டி பானைகள் செய்கின்ற கலைத்திறன் நாட்டில் வளரலாயிற்று.

வடிவம், உருவம், ஒற்றுமை, பொருத்தம், மடக்கு, ஒத்தமைப்பு இசை, பண்பு முதலியனவும், எடுத்தல், படுத்தல், தெளிவு, மறைவு முதலியனவும் நற்கலைக்கு இன்றியமையாத உறுப்புக்கள். இவற்றை விளைப்பது யாது? மனத்தின் கண் எழுகின்ற அழகுணர்ச்சியே. "பயன் படுத்தல்" என்பதைத் தொடர்ந்தே அழகுணர்ச்சி வெளிப்படும். நற்கலையின் அங்கங்களை அழகுணர்ச்சிகளால் வெளிப்போந்த வரங்க ளெனல் பொருந்தாது. ஒரு கலன் பயன்பட வேண்டுமாயின், பொருந்திய வடிவமும் ஒத்தளமும் அதன்கண் அமைய வேண்டும். மனிதனது தேவைக்கு ஏற்றவாறு பொருளை ஆக்கும் திறன் இதன்கண் வெளிப்படுகின்றது. அவன் தன் தேவைக்குப் பயன்படுவதைச் செய்கிறன். முதலில் தோன்று வது தேவைக்கு ஏற்ற பயன்படு பொருளாம். பயனுள்ள பொருளை ஆக்குவதில் தேர்ந்த பின்னரே, ஆக்கியதை அழகு செய்தல் எங்ஙனம் என்ற கருத்து அவர்க்கு எழும். தேவையே மனிதனின் ஆக்கும் உணர்ச்சிக்குத் தாய் போல் விளங்குவது. ஆக்கும் உணர்ச்சிக்குச் சேயாகவிருப்பது தான் அழகுணர்ச்சி. தேவை தூண்டுவதால் ஒன்றை ஆக்கும் முயற்சியும் ஆக்கும் முயற்சியால் ஒரு பொருளும், பொருளின் பயன்படுதலுக்கு ஏற்றவாறு அதன் சிறப்பும், சிறப்புப்பெற்ற பொருளின் மீது அழகுணர்ச்சியும், அழகுணர்ச்சியால் அலங் காரமும் ஒன்றையொன்று தொடர்ந்து வருவதனல் தான் மானிட நாகரிகம் வளர்ச்சியடைகின்றது.

இவ்வண்ணமே மானிட வாழ்விலும் சிற்ப ஓவியக் கலைகள் தோன்றலாயின. ஆதியில் ஓவியங்கள், வரைந்த கோடுகளினுல் ஆயவை. அழகு தோன்றுமாறு கோடுகள் வரைய மனிதன் நெடுங்காலமாகப் பழகினுன். அழகு வெளிப் படும் பொருட்டு, அதனைக் கெடுக்கும் கோடுகளை அகற்றவும், அழகு செய்யும் புதுக் கோடுகளை அமைக்கவும் கற்றுக் கொண்டான். மனிதனது உள்ளத்தில் எழுகின்ற அழகுணர்ச்சிகள் யாவும் இயற்கைப் பொருள்களைக் கண்டு கண்டு உன்னியுன்னி ஆய்ந்தமையால் தோன்றியவைகளேயாம். கடலைக் கண்ணுற்ற பொழுது அலைகளில் தோன்றும் வளைவுக் கோடுகளின் அழகுணர்ச்சி அவனுள்ளத்தில் பதியலாயிற்று. மரங்களின் கிளைகளை ஆய்ந்தபொழுது நேர்க் கோடுகளின் அழகுணர்ச்சி தோன்றலாயிற்று. விலங்குகளும், புள்ளினங்களும் பாம்பு முதலான ஊர்வனவும் மரஞ்செடி கொடிகளும் மலர்களும், கனிகளும், கடலும், மலையும், ஆறும் மனிதனது சிற்ப ஓவியக் கலைக்குத் தேவையான நேர்க்கோடு, வளைவுக்கோடுகளின் அழகுணர்ச்சியை அறிவதற்குப் பெருந்துணையாய் நின்றன. இயற்கைப் பொருள்களின் கண் நேர்க்கோடுகளும், வளைவுக் கோடுகளும் திரும்பத் திரும்ப வரும். இயல்பினை மனிதன் ஆய்ந்து அறிந்தான்.

பழங்காலத்தில் மனிதன் ஆக்கிய மட்கலன்களிலும் கல்தூண்களிலும் காண்கின்ற அலங்காரங்கள் யாவும், அவன் இயற்கையை ஆய்ந்து கற்ற வரிவடிவ அலங்காரங்களேயாம். இவ்வரிவடிவங்கள் உண்மையளவிலே அமையாவிடினும், உண்மையில் சாயலைக் காட்டுகின்ற அளவிலே தோன்றுவனவாகக் காணலாம். இயற்கைப் பொருள்களின் மாண்புமிக்க அழகுகளே மனிதனது உள்ளத்தைத் தொட்டு அசைத்தன; சட்டிபானைகளின்மீது நேர்க்கோடு வளைவுக் கோடுகளால் தம் அழகுகளை வகுத்துக் காட்டும் முயற்சிக்கு அவனுடைய உள்ளத்தை ஊக்கி விட்டன. இயற்கையின் கண் விளங்கும் மாண்புமிக்க அவ்வழகுகளே அன்று முதல் இன்றளவும் அவனுள்ளத்தில் அழகுணர்ச்சியை வளர்த்து வருகின்றன; சிற்ப ஓவியக் கலையில் முனைந்திறங்க அவனுள்ளத்தைத் தூண்டிவிடுகின்றன. சொல்ல வொண்ணுத இயற்கை

அழகுகளை தம்மை வெளியிட முயன்ற ஆதிகாலத்து மனிதனின் அற்ப முயற்சிகளுக்கும் இந்நாள் மனிதனின் வியத்தகு முயற்சிகளுக்கும் தூண்டுகோல்களாக விளங்குகின்றன. அன்று ஒருவன் சட்டிப் பானைகளை நேர்க்கோடு வளைவுக் கோடுகளால் ஒப்பனை செய்தான்.

இன்று ஒருவன் சிற்ப ஓவியக் கல்லூரியில் தேர்ந்தவனே ஆயினும், சுவரில் ஒட்டுகின்ற காகிதம் செய்வதற்காக அளவில் நீண்டு குறுகிய பல நேர்க்கோடு வளைவுக் கோடுகளைத் தெரிந்து கொண்டு அவற்றை ஒருமுறை அமைத்த வண்ணமே திரும்பத் திரும்ப மடங்கி வருமாறு ஒரு காகிதத்தில் படம் எழுதுகிறான். நாகரிகப் படிகட்டின் அடியிலே நிற்கின்ற அம்முதற் சிற்பக் கலைஞனையும், உச்சிப் படியில் நிற்கின்ற நவீன சிற்பக் கலைஞனையும் பிரிப்பது பல்லாயிரம் ஆண்டுகளால் ஆன நீண்டதொரு காலப்பகுதியே யாம். இவ்விருவர் தம் நாகரிக நிலைகளுக்கும் இடையிலே பதினயிரம் ஆண்டுகளால் ஆன நீண்டகாலப் பகுதி இருந்தாலென்ன? காலம் கடந்த இறைவர்க்கு இஃது இமைப் பொழுதும் ஆகாதே! அன்று நாகரிகத்தின் மிகவும் தாழ்ந்த நிலையிலேயே நின்ற சிற்பியின் உள்ளம் இயற்கை வாழ்க்கையிற்கண்ட அழகுணர்ச்சியையும், நெஞ்சத்துடிப்பையும் இதயப் படபடப்பையும் அநாகரிக ஏணியின் உச்சிப் படியில் நிற்கின்ற சிற்பக்கலையினது உள்ளமனுபவிக்கிறது. அவன் வரைந்த அதே நேர்க்கோடுகளை இவனும் வரைகின்றான். அதே வளைவுக் கோடுகளை இவனும் எழுதுகின்றான்; எனினும் அமைப்பு முறைகள் இவனுடைய ஓவியங்களிற் காண்கின்றன.

அழகுணர்ச்சிகளை வெளியிட்ட பழங்கால சிற்பியும் நேர்க்கோடு வளைவுக்கோடுகளையே கையாண்டனர். அவன் கையாண்ட கோடுகளையே நவீன சிற்ப கலைஞனும் கையாளுகின்றான். அதே கோடுகள் அன்று முதல் இன்றளவும் திரும்பத் திரும்ப வருகின்றன. சிற்பக்கலைகள் எல்லாம் கோடுகளின் மடக்கால் அழகை வகுக்கின்றன. ஓவியக் கலைகள் யாவும் கோடுகளின் மடக்கால் அழகிய படங்களாக அமைகின்றன. ஏழு இசைகளின் மடக்கால் இனிய பண்களோடு இசைக்கலை அமைகின்றது. நேரசை, நிரையசைகள்

மடங்கி மடங்கி வருவதால் கவிவாணர் உள்ளத்தினின்று இன்னிசைப் பாக்கள் எழுகின்றன. இயற்கையின் நேரழகும், நிரையழகுமே மடக்காகி, முடிவிலா அழகைக் காட்டி சிற்பக் கலைஞரையும், ஓவியக் கலைஞரையும் தொட்டசைத்து, கல்லி லும் சாந்திலும், கிழியிலும், தாளிலும் உள்ளக்கிடக்கைகளை வெளியிடவும், ஓசை ஒளியாகியபிரணவத்தின் அழகைப் பருகிய இசைக் கலைஞரது உள்ளத்தினின்று இன்னிசை அமுத வெள் ளம் பெருகிப் பாயவும் செய்து விடுகின்றன. அழகே இறைவன்! இறைவனின் அழகே இயற்கை! இயற்கையின் அழகே ஆன்மா! ஆன்மாவின் அழகே சிற்பம், ஓவியம், இன்கவி, இன்னிசை முதலிய நற்கலைகளின் வாயிலாக வெளிப்படுகின்றது. நற்கலை களின் அழகைக் காண்கிறவன் தன் ஆன்மாவின் அழகைக் காண்கின்றான். அழகில் மகிழ்கின்ற ஆன்மா இயற்கை வனப் பில் கலக்கின்றது. இயற்கை வனப்பில் கலக்கின்ற ஆன்மா வோடு இறைவனும் இரண்டறக் கலந்து நிற்கின்றான். இந்த ரகசியமே சிற்ப ஓவியங்களில் மகிழ்கின்ற மனத்தின் அழகு ணர்ச்சிக்கு மறைவிலே மறைந்து நிற்கின்றது.

மனமும் நற்கலையும்

நடனமும், இசையும் உடன் பிறப்புக் கலைகளாக விளங்கு கின்றன. அவ்வாறே ஓவியமும் சிற்பமும் ஒரு வயிற்றுக் கலை களாக இயங்குகின்றன. இவ்விருகலைகளையும் பழைய கற் கால நாகரிகத்திலே இருந்த மனிதனும் போற்றி வந்தான். பழைய கற்கால நாகரிகம் இருபதினாயிரம் ஆண்டுகள் நீடித்த தெனச் சரித்திரப் பேராசிரியர் கூறுவார்; பிராணி உலகத்தி னின்று மனிதனை ஏற்றம் உடையவனாகக் காட்டுகின்ற அறி குறிகளில் ஒன்று பயனற்றவை போல் காண்கின்ற செயல் களில் மனிதன் செலவிடுகின்ற பொழுதேயாம். பிராணி உல கத்திற்கு இன்றியமையாத தேவைகளை நாடுகின்ற முயற்சிகள் நீங்கலாகப் பிற முயற்சிகள் அனைத்தும் பயனற்றவை எனக் கருதப் பெறும். இவை போலியாக இருப்பினும், உண்மையாக இருப்பினும் பயனற்றவைதாம். பயனற்ற முயற்சிகள் எனக் கருதுகின்றவைகளுள் ஒன்றெனத் தகுவது விளையாட்டு. இவ் விளையாட்டு பிராணி உலகத்தில் பெரும்பான்மையான உயிர் களுக்கும் இயல்பானது. இது பிராணி உலகத்திற்கே பொது

முயற்சியாதலின் மனிதனும் இதிற்பொழுதுபோக்குகின்றான். இதனை நீக்கி விட்டு மனிதனின் முயற்சிகளை நோக்குவோமாயின் பயனற்றவைகளாகத் தோன்றுவன கற்கலைகளே. மனிதனின் வாழ்க்கையில் நற்கலை நாட்டம் சிறந்து விளங்குவதைக் காண்கிறோம். மூன்று வயது முதல் மனிதன் படம் வரைவதில் பேரவா உடையவனாக இருக்கிறான். ஆகையால் ஓவியக் கலையும், சிற்பக்கலையும் மனிதனுடைய ஆழ்ந்த உள்ளத்தினின்று எழுகின்ற ஏதோ ஒருவகை உணர்ச்சியின் ஏவலால் தோன்றுவன எனத் துணிதல் வேண்டும். இவ்விரு கலைகளையும் மனிதன் நாடியிராவிட்டால் அவன் இன்று அடைந்திருக்கின்ற நாகரிகத்தின் உயர்நிலையைக் கண்ணுற் கண்டிருக்க மாட்டான். ஆதலால் சிற்பக் கலைஞரும், ஓவியக் கலைஞரும், மக்கட்டொகுதியின் கண் தேன் கூட்டினின்று புறக்கணித்துத் தள்ளப்படும் ஆண் தேனீக்களைப் போன்றவர்கள் அல்லர். இவர்கள் மானிட வாழ்க்கையில் இன்பம் விளைக்கின்ற உயிர் நாடிகள் என்றே கூற வேண்டும்.

வாழ்க்கையில் நிகழ்கின்ற முயற்சிகள் அனைத்தையும் எம்மட்டும் பயன்படுபவை, எத்துணை சீரிய நன்னெறிப் பான்மை உடையவை என்று சீர் தூக்கிப் பார்க்கின்றவர்களுக்கு நற்கலைகளெல்லாம் காலச் சிக்கனத்திற்கு ஒவ்வாத கழிவாகவே தோன்றலாம். விளையாட்டோ வெனில் கழிந்த ஆற்றலை மீண்டும் பெறுதற்குப் பயன் படுபவை என்றே கூறலாம். ஆயினும் மானிட வாழ்கைக்கு விஞ்ஞானம் தரும் நலங்களை நோக்கி அஃது இன்றியமையாத தேவையென மதிப்பிடுவர். ஆதலால் அதனை நற்கலைகளோடு ஒப்பிட்டு மதிப்பிடார்.

உண்மை, அழகு, நன்மை, என்னும் மூன்றும் வாழ்கையில் மதிக்கத் தகுந்தவைகளாகக் கருதப்படுகின்றன. உண்மையை யறிதல் பகுத்தறிவுக்கும், நியாயத் தெளிவுக்கும், தத்துவ ஞானத்திற்கும், விஞ்ஞானத்திற்கும் காரணமாக இருக்கிறது அழகுணர்ச்சி, உள்ளத்தினின்று எழுகின்ற உணர்ச்சிகள் அனைத்திற்கும் காரணமாகி நற்கலையின் உயிரெனத் திகழுகின்றது. நன்மையாய்தல், நன்னெறி தீநெறிகளை ஆய்கின்ற அறிவைப் பெருக்கி அறநெறிக் கண்ணே ஒழுகும் முயற்சிக்கு மனிதனது உள்ளத்தை ஏவிவிடுகிறது; உண்மையறிதல், பகுத்

தறிவுக்கும், அழகுணர்ச்சி நற்கலைதிறனுக்கும் நன்மையாய்தல் அறநெறி ஒழுக்கத்திற்கும் காரணங்களாக அமைந்து ஒருவனது தன்மயம் முழுவதையும் ஆக்கி அமைக்கின்ற தத்துவங்களாக இருக்கின்றன என்று உளநூல் வல்லார் கூறுகின்றனர். உயரிய வாழ்கையில் இம்மூன்றும் ஒத்தவளர்ச்சி யடைந்திருப்பின் அதுவே குறிக்கோள் வாழ்க்கை எனப்படும். இம்மூன்று தத்துவங்களுள் ஒன்றனையே போற்றி வளர்த்தால் மற்றவை வலி குன்றும். அப்போது தன்மயத்தின் நடுநிலைப்பாழாகி அழகும் சிதையும்.

பொருளை ஆக்கும் அவா, ஒன்றனைக் கண்டு அது போலவே செய்யும் அவா, உள்ளத்தில் மிதமிஞ்சி குவிகின்ற மனோவிகாரங்களை மட்டுப்படுத்துவதற்கான வெளிப்பாடுகள், இயற்கையின் மாய ஆற்றலை அடக்கி வசப்படுத்துவதற்கான அவா, வாழ்க்கைப் போக்கு முழுவதையும் விருப்பு வெறுப்புகளாக வகுத்துக் காட்டுகின்ற அவா, அழகில் ஆர்வம் கொள்கின்ற உள்ளத்தின் அவா ஆகியவனைத்தும் எண்ணிறந்த செயல்களுக்கு மனிதனின் உள்ளத்தை ஏவி விடுகின்ற ஊக்குதல்களாக அமைந்துள்ளன என உளநூல் கூறுகின்றது. இவை அனைத்துமே காலந்தோறும், இடந்தோறும் ஓவியங்களையும், சிற்பங்களையும் அமைப்பதற்குக் காரணமாக இருந்திருக்க வேண்டும்.

9. எது நாகரிகம்?

[திரு. வித்துவான். கோ. இளைய பெருமாள் அவர்கள்,
நகர உயர்நிலைப்பள்ளி, ஆரணி.]

நாளைக்கு ஓர் உடை உடுப்பதை நாகரிகம் என்பர் சிலர். வேளைக்கு ஓர் உணவு உண்பதை நாகரிகம் என்பர் வேறு சிலர். மேனாட்டாரைப் போல் உடுப்பதும் உண்பதும் நாகரிகமென மேற்கொள்வர் சிலர். உருவத்தில் நாகரிகமுண்டென உரைப்பர் சிலர். அணியில் நாகரிக முண்டென அறைவர் சிலர். படக்காட்சி பார்ப்பதை நாகரிகமெனப் பகர்வர் சிலர். நடிப்பதை நாகரிகமென நவில்வர் சிலர். குடிப்பதை நாகரிகமெனக் கூறுவர் சிலர். புகை பிடிப்பதை நாகரிகம் எனப்

புகல்வர் சிலர். சூதாடுதலை நாகரிகமெனச் சொல்வர் சிலர். வீட்டை அழகுபடுத்தலை நாகரிகமென விளம்புவர் சிலர். நாட்டைச் சுற்றிப் பார்ப்பதை நாகரிகமென நவில்வர் சிலர். நகரில் வாழ்வதை நாகரிகமென்பர் சிலர். சிகையலங்கரித்தலை நாகரிகமெனச் செப்புவர் சிலர். கற்பதை நாகரிகமெனக் கழறுவர் சிலர். புதுமையென வருவனவற்றையெல்லாம் நாகரிகமெனப் போற்றுவர் சிலர். இங்ஙனம் நாகரிகம் என்னுஞ் சொல்லுக்கு இக்காலத்தில் பலர் பலவாறு பொருள் கொண்டு வாழ்க்கையில் மாறுதலை அடைந்து வருகின்றனர். அவற்றையெல்லாம் அறிவுடையோர் நாகரிகமெனக் கொள்ளார். பின்னர் அவர்கள் கூறும் நாகரிகம் எது?

உலக மக்கள் அனைவரும் ஒப்புக்கொள்ளும் உயரிய உண்மைகளை உரைத்தருளியவர் திருவள்ளுவர். அவர் தம் பொய்யாமொழியாக விளங்கும் பொது மறையில் இல்லாத பொருள்கள் இல்லை. எல்லாப் பொருள்களையும் எடுத்துக் கூறிய வள்ளுவனுர், நாகரிகத்தையும் தெள்ளிதின் எடுத்துக் கூறியிருக்கின்றுர். அவர் கூறிய நாகரிகத்தை ஆராய்வதே இக்கட்டுரையாகும். திருவள்ளுவர் நாகரிகம் என்பதற்குக் கண்ணேட்டம் எனப் பொருள் கொண்டுள்ளார். அத்தலைப்பிலேயே அவர் ஓர் அதிகாரம் வகுத்து அதன் கண் தம் கருத்து முழுதும் விரித்துக் கூறியுள்ளார். கண்ணேட்டம் என்று வள்ளுவர் கொண்ட நாகரிகத்தை அனைவரும் உணர்தல் வேண்டும். அதன் கருத்து யாது?

கண்ணேட்டம் என்பது கண்ணினது ஓட்டம். கண் எங்கே ஓடும்? கண் ஓடுவதில்லை. கண்ணின் பார்வையே ஓடும். தம்முடன் பலநாள் பயின்றவரிடத்தில் தம் பார்வையைச் செலுத்தி அவர்கள் கூறிய சொல்லை மறுக்காமல் அவர்கட்குற்ற குறையை முடித்தல் வேண்டும். இதுவே வள்ளுவர் கூறிய நாகரிகம். இது கண்ணின் தொழிலையே குறிக்கின்றது. கண்ணைப்பெற்ற மக்கள் அனைவரும் நாகரிக மக்களாக விரும்பின் கண்ணேட்டம் உடையராக வேண்டும்.

உலகில் அனைவரும் தம்முடன் பயின்றவரிடம் அன்பு காட்டவேண்டும். அவர் செய்த பிழைகளைப் பொறுத்தல் வேண்டும். அப்போதே உலகம் நடைபெறும். ஒருவர்க்

கொருவர் கண்ணோட்டமின்றி வாழ்வரேல் உலகம் ஏது? கண்ணைப் பெற்றும் அதை நல்வழியில் பயன்படுத்திலரேல் அவர்க்கும் பயனில்லை; பிறர்க்கும் பயனில்லை. தமக்கும் பிறர்க்கும் பயன்படாத ஒருவர் உலகில் வாழ்வது நிலத்திற்கே சுமையாகும்.

கண்ணோட்டமே கண்ணுக்கு அணிகலம் ஆகும். கண்ணோட்டமில்லாத கண்கள் கண்களாகா. நோய் முதலியவற்றால் துன்புறும் புண்களாகும். காட்சிக்கு மட்டும் அவை கண்களாகத் தோன்றும். அக்கண்களைப் பெற்றவர் கண்ணோட்டத்தைப் பொருமையின் கண்ணில்லாதவரே யாவர். "கண்ணிற் கணிகலம் கண்ணோட்டம் அஃதின்றேல்; புண்ணென் றுணரப் படும்." (கண்ணோட்டம் 5) என்னும் திருக்குறள் இதனை இனிது விளக்குவதாகும்.

இக்காலத்தில் இவ்வருமைத் திருக்குறளை அறியாமையால் பின்வருமாறு மாற்றியமைத்துள்ளனர். கண்ணுக் கணிகலம் கண்ணாடி அஃதின்றேல்; புண்ணென் றுணரப் படும்.

இது குறளன்று கிறள் என்று வழங்குவது. இதனைப் பின்பற்றி இக்கால இளைஞர்களெல்லாம் கண்ணாடியைக் அணிகலமாக விரும்பியணிக்கின்றனர். அதுவே நாகரிகமென்றும் கருதுகின்றனர். அந்தோ! அதனால் இளமையிலேயே தம்பார்வை கெடுவதை அவர்கள் அறிகிலர்.

கண்ணைப் பெற்றவர் கண்ணோட்டமுடையராதல் கடினமன்று. கண்ணின் தொழிலாகிய கண்ணோட்டத்தைப்பெறுதல் எளிதே. ஆனால் ஓடுதற்குரிய கண்ணைப் பெற்றவர் உற்றவிடத்தில் ஓடாதொழிகின்றனர். கண்ணோட்டம் இல்லாத கண்கள் மரத்தின் கண்களை (கணு) ஒத்தனவாகும். மரத்திற்கும் கண்கள் உண்டு. ஆயினும் அவை பெயரளவில் கண்களாய்ப் பயனின்றி நிற்கும்.

தம்முடன் பயின்றவர் தமக்குத் துன்பம்செய்த போதிலும் திரும்பி அவர்க்குத் தீமை செய்தலாகாது. அவர்களிடத்தில் கண்ணோட்ட முடையவராய் அத்துன்பத்தை பொறுத்துக் கொள்ளவேண்டும். அம்மட்டோ? உரிமையினால் அவர்கள்

நஞ்சையே உணவாகக் கொடுத்த போதிலும் சிறிதும் தயக்க மின்றி உட்கொள்ளுதல் வேண்டும். அத்தகைய மக்களே யாவரும் விரும்பத்தக்க நாகரிகத்தைப் பெற்றவராவர். பெயக் கண்டும் நஞ்சுண்டமைவர் நயத்தக்க நாகரிகம் வேண்டு பவர்.'' (கண்ணோட்டம் 10) என்னும் வள்ளுவர் வாய்மொழி இதனை வலியுறுத்தும். இதனை, ''முந்தையிருந்து நட்டோர் கொடுப் பின் நஞ்சும் உண்பர் நனி நாகரிகர்'' என நற்றிணையும் நன்கு விளக்கியுள்ளது.

இளமையில் கற்குங்காலத்தில் நெருங்கிப் பழகுவோர் எண்ணிலர். ஆனால் அவர்கள் உயர் பதவிக்கு வந்த பின்னர் தம் முன்னைய நிலையை அடியோடு மறந்துவிடுகின்றனர். பன்னாட்கள் உடனிருந்து பழகியவர்களெல்லாம் சின்னாட் களுக்குப்பின் காண நேரின் அறியாதவர் போல் கண்டும் காணாதவராகின்றனர். தம்மை உயர்ந்தவராகக் கருதி அவர்கள் சற்றுக் கடுமையாகவும் பேசுவர். அத்தகைய கண் ணோட்டமில்லாத மாக்களிடம் அறிந்தவ ரெனக்கருதிச் சென்று எங்ஙனம் ஓர் குறையை முடித்துவர இயலும்? கடுத்தமுகமும் கடுஞ்சொல்லும் கண்டவிடங்களில் காட்டுதல் பெருமையென் பது அவர்கள் கருத்தாகும். இன்சொல்லும் இன்முகமும் நாகரிகத்தின் அடிப்படை என்பதை அறிகிலார். அந்தோ! அதனால் அவர்கள் பிறரிடம் வெறுப்பையும் அவமதிப் பையுமே பெறுவர். அத்தகையவர் நாகரிகமில்லாதவர் என்று கூறுவதில் ஐயமுண்டோ ?

இதுகாறும் கூறியவற்றால் நாம் அறியும் உண்மை யாது ? போலி நாகரிகங்களை நாகரிகமெனப் போற்றுதல் தவறான கொள்கை யாகும். பயின்றவரிடத்துக் கண்ணோட்ட முடைய வராக வாழ்தலே நாகரிகமாகும். அதனினும் சிறந்தது அறிந் தவர் அறியாதவர்மாட்டும் செலுத்தும் அருள். ஆதலின் அன்பு அருள் முதலிய அருங்குணங்களைப் பெற்று எல்லோரும் எவ் வுயிர்க்கும் நன்மை செய்து வாழ்வதே இன்ப வாழ்க்கையாகும். அத்தகைய சீரிய நாகரிகத்தில் சிறந்து விளங்குதலே நாட்டின் முன்னேற்றத்திற்கு நலம் பயப்பதாகும்.

10. நான் கண்ட ரஷ்யா

[யோகி சுத்தானந்த பாரதி அவர்கள்.]

"பிரெஸ்டு லடோவ்ஸ்க் நகரில்"

இயற்கை பச்சை பசேலென்றிருக்கிறது. அந்தப் பசுவளத் திருமேனியில் நவரத்னங்கள் போல மலரழகு சொக்குகிறது. கவியரசன் கோதே வாழ்ந்த ப்ராங் போர்டு தோட்டத்திலிருந்து மாதாம் கூரி வாழ்ந்த போலாந்திற்கு வந்து விட்டோம். நதிக்கரையில் அழகான வர்ஸரா நகரம் துலங்குகிறது. போரில் இடிந்து சிதைந்த கட்டிடங்கள் வழி நெடுகக் காண்கின்றன. மனிதனிடமுள்ள அரக்கன் இடித்துத் தள்ளிய கட்டிடங்களை மனிதசக்தி மறுபடியும் புதுக்கி விட்டது. புதிய வார்ஸரா நம் முன் எழுந்து பொலிகிறது. தொழிற்சாலைப் புகை, பழைய வேகத்துடன் சுருண்டெழுந்து காற்றுடன் விளையாடுகிறது. வாழ்க்கை மறுபடியும் வசந்த மங்களம் கொண்டாடுகிறது. வழிக் காட்சிகள் பயிரும் பச்சையும் பழமும் மலரும் குலுங்க எம்மை ரஷியாவிற்கு வரவேற்கின்றன.

வந்து விட்டது ரஷியா! இதோ பிரெஸ்டுலடோவ்ஸ்க் நகரம். எங்கள் வண்டி வந்து நின்றதும் அணியணியாக வசந்தப் புன்னகையுடன் மலர்க் கொத்துகள் தந்து ரஷிய மணிகள் எங்களை வரவேற்றார்கள். "மீருமீர்" என்ற சாந்த கீதம் பாடினார்கள். பிறகு அழகான மோட்டாரில் நாங்கள் ஏறினோம்; பட்டினப் பிரவேசம் நடந்தது. இசைச் சாலை, நடனசாலை, நாடக மேடை, ஆபரா கல்லூரி, காரியாலயங்கள் வானோங்கிய மாளிகைகள் எல்லாம் பார்த்துப் பிறகு ஒரு பூஞ்சோலையிற் புகுந்தோம். அதுதான் மே பார்க்! (வசந்த பூங்கா) அதைச் சுற்றிப் பார்க்கவே இரண்டு நாளாகும். அவ்வளவு கலையழகு நிரம்பியது மே பார்க்! பத்தி பத்தியாகப் பசுமரங்கள்; வரிசை வரிசையாகச் சலவைச் சிலைகள். வீரர் உருக்கள், கலைஞர் வடிவங்கள், நட்ட நடுவே லெனின் ஸ்டாலின் மூர்த்திகள். சுற்றிலும் வான வில்லடுக்குப்போல் பல நிறப் பூப்பொதும்பர். பூங்காவில், இங்குமங்கும் நடன மேடைகள், நாடகமேடைகள் சிற்றுண்டிச் சாலைகள். சிறுவர் விளையாடுமிடங்கள். அவர்

களுக்கென்று இராட்டினங்கள். சுழல்குடைகள் எல்லாம் அமைந்துள்ளன. வருவோர் இருக்க, (உலாவ) கூடிப் பேச, களிகூத்தாட வசதியான இடங்களுண்டு. நீந்த, நீர்விளேயாட ரம்யமான நீர்த் தடாகங்கள் உண்டு. பூங்காவை ஒருதரம் சுற்றி வந்தாலே நல்ல தேகப்பயிற்சி கிடைக்கும்.

இந்தப் பிரஸ்டு நகரிலேதான் ஜெர்மனிக்கும் ரஷ்யாவிற்கு சமாதான ஒப்பந்தம் நடந்தது. இதே பிரஸ்டு நகரிலேதான் ஹிட்லர் சமாதானத்தின் மேல் ஆகாசக் குண்டு போட்டான். பிளாக்கடல் முதல் பால்டிக் கடல் வரையில் 1600 மைல் தூரம் சேனேகளே நிறுவி ஒரு நாள் ஹிட்லர் ரஷியாவிற்குள் புகுந்தான். இந்த பிரெஸ்டு நகரில் கடும்போர் நடந்தது. நகரம் பாழ் நரகமாய்விட்டது. ரஷியர்கள் அதை இன்னும் பாழ் படுத்திக் கொளுத்தியெறிந்து பின் சென்றனர்.

உக்ரேன் கோதுமைக்காக ஹிட்லர் முன் சென்ருன்; மலடோவ் ரொட்டியை (ரஷிய குண்டு) விசிக்கொண்டே சோவியத் படை பின் சென்றது. போரின் பயங்கரக் காட்சிகளே எங்களுக்குக் காட்டினர். திகைத்துப் போனேம்.

எங்கள் ரஷியா

எனக்கு சில கனடியர், பிரெஞ்சுச்காரர், ஜெர்மானியர், ருமேனியர், ரஷியர் வியன்னுக்காரர் பரம சிநேகிதரானுர்கள். எங்கள் பேச்செல்லாம் கலேயும், கவிதையும், கலே விமர்சனமுமாய் இருந்தன. நாங்கள் சுற்றிப் பார்த்து, லெனின் ஸ்டாலின் சிலேகள் முன் அமர்ந்தோம். லெனினும் ஸ்டாலினும் பேசுவதுபோலவே அந்தச் சிலே அமைந்திருந்தது. அதன் எதிரே ஒரு மேடையில் அமர்ந்து நாங்களும் பேசினேம். சோவியத் அன்பர் எங்களுக்கு விடை அளித்து வந்தார்.

நான் :—இங்கே லெனினும் ஸ்டாலினும் என்ன பேசுகிருர்கள் ?

ரஷியர் :—சோவியத் குடியரசின் தத்துவத்தைப்பற்றி எங்கள் பிதா லெனின் உபதேசிக்கிருன்; ஸ்டாலின் கேட்கிருன்.

நான் :—இதோ லெனின் நம்மைப் பார்க்கிருன். அவனறியச் சொல்லும். சோவியத் குடியரசு தத்துவம் என்ன ?

ரஷியர் :—சோவியத் என்ருல் ஜன சபை: சோவியத் குடியரசு ஜன சக்தியால் நடக்கிறது. எங்கள் நாடு ஜார் கொடுங்கோலின் இடம்பக் கொடுமையால் நரகமானது. டூமா என்பது பழைய பார்லிமெண்டு; அதில் பொது ஜனங்களின் மனமே பதியவில்லை. நிகோலாய் காலத்தில் மூன்று டூமாக்கள் கூடிக் கலைந்தன. பழைய ரோமானேவ் வம்சக் கொடுங்கோல், அப்படியே இருந்தது. ராஸ்புடின் போன்ற வஞ்சப் பதர்கள் ஜாரின் கொடுமைக்குத் தூபம் போட்டனர். மிராசுதார்களின் நிலங்களை வளைத்துக்கொண்டு ஏழை உழவர் வயிற்றிலடித்தனர் மில் முதலாளிகள்.

நான் : அந்தக் கதை எங்களுக்குத் தெரியும். 1905-7ல் ரஷியா ஜப்பானிடம் தோற்றது. நிகலாயின் அசட்டு டம்பத்தால் நாட்டில் வறுமை குடிகொண்டது. 22-1-1950 பெட்ரோகிராடு மாரி-மாளிகை முன் (ஞாயிற்றுக்கிழமை) பல்லாயிரக் கணக்கான ஏழைகள் பசி பசி என்று அலறினர். அவர்கள் வயிற்றில் பீரங்கிக் குண்டு போட்டு ஏழைகளைப் படுகொலை செய்தான் ஜார். 1915-ம் ஆண்டில் எழுந்த போரில் ஜார் படுமோசமாக நடந்து நாட்டின் இரத்தக் கண்ணீரை வடித்தான். இந்தக் கண்ணீர் அருவியில் எழுந்த மின்சாரமே ஜனசக்தி. அந்த மின்சார இயந்திரத்தை முடுக்கி விட்டவனே லெனின். லெனின் உங்களுக்குப் புதுவாழ்வு தந்தான்.

ரஷியர் :—ஆம். புது வாழ்வு தான்.

எங்கள் சோவியத் ரஷியா ரஷிய மக்களுக்கே உரித்தானது. எங்கள் பயிர் நிலங்களெல்லாம் உழவருக்கே உரியன. அவர்கள் கூட்டுப் பண்ணை வைத்து நாட்டின் வளத்தை வளர்க்கிருர்கள். தொழிலாளர் பெரிய ஆலைகளை நடத்தி நாட்டின் தேவைக்கு வேண்டிய பொருள்களைத் தருகின்றனர். யந்திர சக்தியை வளர்க்கின்றனர். கலைவாணர் பீலியாலும் உளியாலும் எங்கள் சரித்திரக் காட்சிகளால் நாட்டை அழகு செய்கிருர்கள். ஆற்றல்பெற்ற வீரர் படை சேர்ந்து நாட்டைக் காக்கின்றனர்; அனுபவம் பழுத்த

அறிவாளர் பொதுவுடைமை அரசியலை நடத்துகின்றனர். எல்லோரும் ஒரு குலம். எல்லோரும் ஓரினம்; எல்லோரும் சோவியத் மக்கள்—வர்க்கப் போராட்டம் கிடையாது. ஜனங்களே அரசாங்கம்; ஜனசக்தியின் வடிவே தேசம்.

நான் :—நாங்கள் உங்கள் வாழ்வை நேரே காணத் தான் வந்தோம். உங்கள் நாடு பதினறு குடியரசுகளின் தொகுப்பாயிற்றே. பல திற மக்களும், மொழிகளும், கலைப் பண்புகளும் உண்டே. எல்லாரும் எப்படி ஒன்ருக வாழ்கிறீர்கள் ?

ரஷியர் :—பசிபிக் சமுத்திரத்தில் பேரிங் முனை முதல் அட்லாண்டிக் சமுத்திரத்தில் உள்ள பால்டிக் கடல் வரையில் எங்கள் ரஷியா 85,000,00 சதுரமைல் பரவியுள்ளது. இது உலகில் ஆறில் ஒருபாகம் உள்ளது. இது ஐக்கிய அமெரிக்க மாகாணம் போன்று மூன்று மடங்கு, மேற்கு ஐரோப்பா போன்று நான்கு மடங்குள்ளது. ஆசியாவின் முதல் நாடு சோவியத் ரஷியாவிலுள்ள சைபீரியா, அதன்கீழ் சைன, அதன் கீழ் இந்தியா உள்ளது. இந்தியா, சீனம், ரஷியா மூன்றும் இணைபிரியாத நாடுகள். மூன்றின் சேர்க்கையே உலக சமாதானத்திற்குவழி; மூன்றும் பிரிந்தால் அமைதி கெடும். எங்கள் ரஷியாவில் இருபதுகோடி ஜனங்கள் இருக்கிறேம்; சைனவில் ஐம்பது; இந்தியாவில் முப்பைத்தைந்து கோடி—ஆக மொத்தம் 105 கோடி ஜனங்களும் ஒன்று சேர்ந்தால் உலகில் அமைதியை நிலை நாட்டலாம்; சண்டைப் பிசாசுகளை ஒழிக்கலாம்!

ரஷியாவில் 16 குடியரசுகள் உள்ளன : (1) ருஷ்யன் பெடரேஷன், (2) பைலோ ரஷ்யா, (3) உக்ரேன், (4) உஸ்பெக், (5) கஜாக்ஸ்தான், (6) அஜர்பைஜான், (7) ஜார்ஜியா, (8) லித்வேனியா, (9) மோல்டாவியா, (10) கிர்கிஸ்தான், (11) தாஜிக்ஸ்தான், (12) துர்கோமேனியா, (13) எஸ்தோனியா, (14) ஆர்மீனியா, (15) கரேலியா—பின்லாந்து, (16) லத்வியா.

இந்தக் குடியரசுகளெல்லாம் கட்டுக்கோப்பாயிருக்கின்றன. எல்லோரும் தாய்மொழியும் பொதுமொழியான ரஷ்யமும் அறிவார். ஒவ்வொரு குடியரசும் கலைப் பண்பையும், மொழிப் பண்பையும் போற்றும். இயற்கை எங்களுக்கு

எல்லா வளமும் தருகிறது. தங்கம், வெள்ளி, செம்பு, இரும்பு, எண்ணெய், நிலக்கரி, சலவைக் கற்கள், ரசாயனப் பொருள்கள்—எல்லாம் எங்களுக்கு நிரம்ப உண்டு; எங்கள் கூட்டுப் பண்ணை ஏராளமான உணவுப் பொருள்களைத் தரும். நாங்கள் எல்லோரும் தொழிலாளர்—எல்லாரும் யந்திர நுட்பம் அறிந்தவர்கள்—எல்லாரும் படித்தவர்கள். எல்லாரும் எல்லாருக்கும் வாழ்கிறோம். யாரும் எவரையும் சுரண்டிப் பிழைப்பதில்லை. எல்லாம் பொதுவுடைமை; தனியுடைமை யாருக்கும் இல்லை. ஒவ்வொருவனும் தன் சக்திக்கேற்ற வேலை செய்து வேலைக்கேற்ற கூலி பெற்று, கூலிக்கேற்றபடி குடிசெய்து வாழ்கிறான். இப்படி எல்லாரும் உழைத்துப் பிழைத்து, ஒன்று கூடி வாழ்வதுதான் எங்கள் கம்யூனிஸம் அல்லது சமதருமம்.

உக்ரேன் நடனம்

நாங்கள் இப்படிப் பேசிக்கொண்டிருந்த போது விருந்து மணியடித்தது. விருந்து சாலையில் மேஜை விரித்து எங்களை அமர்த்தினர். அவரவர் விரும்பம் போல விருந்து அளிக்கப்பட்டது. பாட்டுத்தான் எல்லாருக்கும் பொது. ரஷியக் கனி வகைகள், ரொட்டி வகைகள், பிஸ்கோத்து, பெப்பர்மிண்ட், சாக்லேட், மிட்டாய் தினுசுகள், மது மாமிச வகைகள் எல்லாம் மேஜைமேல் நிரம்பிக்கிடந்தன. நான் கனிகளும், பாலும் உண்டு மறுபடியும் நண்பருடன் அளவளாவினேன்.

மோட்டார் வந்தது. "ஏறுங்கள். வாருங்கள்"

உத்தரவுப்படி இனி நடக்க வேண்டும். ஏறினோம் வந்தோம். அழகான நடனசாலை. நாடகமேடை. உள்ளே எங்களுக்காகக் கலை விருந்து தயாரித்திருந்தனர்.

"விருந்தாளிகளுக்கு நாங்கள் முதலில் தருவது நாவிருந்து; பிறகு பாவிருந்து; கலை விருந்து. இப்போது உக்ரேன் பாட்டும், நாடகக் காட்சிகளும், நடனங்களும் காண்பீர்கள்" என்று திரை தூக்கினர். இளம் பெண்களும் ஆண்களும் பொருத்தமான வேடங்கள் புனைந்து உக்ரேன் வாழ்வையே நடித்துக் காட்டினர். என்ன பாட்டு! என்ன நடனம்! என்ன நடிப்பு. என்ன நவரச சொக்கு!

மூன்று மணி நேரம் போனதே தெரியவில்லை. உழவர் நடனம், அறுவடை நடனம், பாட்டாளர் பாட்டு, குடிவெறி குப்புறக் கவிழ்ந்தது என்ற ஆபரா எல்லாம் உணர்ச்சி ததும்பின. ஒவ்வொன்றும் ஜனசக்தியைத் தூண்டி மனித வாழ்விற்குப் புது வீறும் வெற்றியும் தந்தது!

இந்தக் கலை விருந்து முடிந்ததும் போரில் நாட்டைக் காத்து உயிர் கொடுத்த வீரர் சிலைகளைக் கண்டு மலர் சூட்டினோம். "ரஷியாதான் இரண்டாம் போர் வெற்றிக்கு வீறு தந்தது. ரஷிய ரத்தம் தனது தேசப் பாதுகாப்புக்கு மட்டுமன்று; உலகப் பாதுகாப்பிற்கே சிந்தப்பட்டது. ரஷியாவின் வீரம் உலகையே அசுர நாசியிடமிருந்து காத்தது" என்று புகழ்மாலை சூட்டினோம்.

உக்ரேனைத் தாண்டுகிறோம். கனியும் கிழங்கும் தானியங்களும் கணக்கின்றித் தரும் பச்சை வளத்தினூடு கண்குளிரச் செல்கிறோம். வண்டி நிற்குமிடங்களி லெல்லாம் மலர் கனி தந்து சாந்தி கீதம் பாடி எங்களை வரவேற்கின்றனர். இதோ மாஸ்கோ வந்துவிட்டோம்.

மாஸ்கோ வரவேற்பு

மாஸ்கோ ஸ்டேஷன் மேடையில் அணியணியாக வந்து அன்பர் நிற்கின்றனர். இரண்டு பெண்மணிகள் எங்களுடன் இறங்கினர். அவர்கள் என்னுடனே தான் அளவளாவிக் கொண்டு எத்தனையோ கேள்விகளைக் கேட்டுக் கொண்டே வந்தனர். "இனி நீங்களெல்லாம் எங்கள் பின்னாலே வரவேண்டும்" என்று உத்தரவிட்ட பிறகுதான் இன்னார் என்றறிந்தோம்! "சரி அம்மணிகளா! சித்தம்போல் நடக்கிறோம்" என்று பிளாட்பாரத்தில் குதித்தோம்.

நேரே லெனின் ஸ்டாலின் சலவைச் சிலைகள் காட்சியளித்தன.

"மீருமீர்" "உலகிற்கு அமைதி உங்களுக்கு அமைதி" என்ற கோஷம் கேட்டது. சோவியத் சமாதான சங்கச் சார்பில் எங்களை அன்பர் வரவேற்றனர். மாஸ்கோ சர்வகலாசாலையில் உயிர்நூற் புலவர் எங்களுக்கு நல்வரவு கூறினர்.

"ரஷியாவின் தலைநகருக்கு இந்திய சீனப் பிரதிநிதிகளான உங்களை வரவேற்கிறோம். உலக சமாதானத்திற்காக நாம் ஒன்று கூடிப் பாடுபடுவோம். ரஷியா போரை வெறுக்கிறது. அணுகுண்டை வெறுக்கிறது. மனிதரெல்லாம் சரிநிகர் சமானமாக உழைத்துப் பிழைக்க விரும்புகிறது. இங்கே நடப்பதெல்லாம் நீங்கள் கண்ணாரக் காணலாம். உங்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்ய நாங்கள் காத்திருக்கிறோம். வாருங்கள் நல்வரவு!" நாங்களும் அதே வகையில் நன்றி கூறி மாஸ்கோ நகருட் புகுந்தோம்.

11. மின்சாரம்

[திரு. ச. த. சற்குணர் அவர்கள் B.A.,]

மின்சாரத்தைப் பற்றிய விஞ்ஞான அறிவு நெடுங் காலமாக வளராவிடினும், மின்னலின் செயல் பலவற்றை மானிடர் ஆதிகாலத்திலிருந்தே தம் அனுபவத்தால் அறிந்திருந்தனர். ஆனால் ஒன்று. முற்கூறியபடி மின்னலின் செயலை இடியின் செயலாகவே அவர் அக்காலத்தில் கருதி வந்தனர். மின்னலால் பாறைகளின் மேற்புறமும் சில வேளைகளில் உருகுவதையும், தரையில் சிறியனவும் பெரியனவுமான குழிகள் தோன்றுவதையும், மணல் உருகிக் கண்ணாடிக் குழாய்கள் போன்ற குழாய்கள் உண்டாவதையும் அவர் பல விடங்களில் கண்டனர். ஒருவித கல் மின்னலால் தரையில் விழுகிறதென்று சில நாட்டினர் அக்காலத்தில் தவறாக எண்ணினர். அக்கல்லை ஆங்கில மொழியில் இடிகல் (Thunder stone) என்றனர். அவ்வாறு இறங்குவது கல் அன்று, இரும்புக் கோல், அதனையே கள்வர் எடுத்துத் தமக்குக் கன்னக் கோலாகக் கொள்வர் என்று நம் நாட்டினர் பலரும் பிழையாகக் கருதினர். மின்னலும் இடியும் இருக்குங் காலத்தில், மரங்களின் கீழ் ஒதுங்கி நின்றவரும், சுவர்கள், தூண்கள் முதலியவற்றின்மீது சாய்ந்திருந்தவரும், மேடுகள், குன்றுகள், மலைகள், மேல்மாடிகள் முதலியவற்றின்மீது சமவெளியில் நடந்தோ வண்டி முதலிய வாகனங்களில் ஏறியோ சென்றவரும் மின்னலால் அடிக்கடி ஆபத்துக்குள்ளானதை முற்கால

மானிடரும் அறிந்திருந்தனர். வீட்டு வாயில், பலகணி இவற்றிற்கு எதிரில் நிற்பவரும், மிகப் பளிச்சென்று மின்னல் வீசுவதால், சில வேளைகளில் கண்களும் நரம்புகளும் கெட்டு வருந்துவதையும் அவர் அறியாமல் இல்லை. என்றாலும், தலைப்பிள்ளைகளின் மேலேதான் இடி பெரும்பாலும் விழும் என்னும் பலரது கொள்கையும், இடி ஒருமுறை விழுந்த இடத்தில் மறுமுறை விழாது என்னும் கொள்கையும் தவறுடையன. மின்னல் எப்பிள்ளை என்றும் பார்ப்பதில்லை, எவ்விடம் என்றும் பார்ப்பதில்லை. பலவிடங்களில் சிலகாலங்களில் மின்னலோடும் இடியோடும் மழை பெய்யும் போது கல்மழை, அல்லது ஆலங்கட்டிகள் விழுந்து பயிர் பச்சைகளுக்கும், உயிர்களுக்கும் மிக்க சேதத்தை விளைவிப்பதையும் முன்னோர் அறிந்திருந்தனர். அவ்வாறு பயிர் பச்சைகளுக்கு மாத்திரம் ஒவ்வோர் ஆண்டும் நேரும் சேதத்தை ஏறக்குறைய நாலுகோடி பவுனாக இக்காலத்து அறிஞர் கணக்கிட்டிருக்கின்றனர். மின்னலும், இடியும் மிகுதியாக இருக்கும் காலங்களில் பயிர்பச்சைகள் செழித்து வளர்ந்து பெரிதும் பயன் தருகின்றன என்ற உண்மையையும், நோய்கள் பெரிதும் வராமலிருக்கின்றன என்னும் உண்மையையும், முற்காலத்திலும் சிலர் தம் அனுபவத்தால் அறிந்திருந்தனர். ஆண்டு ஒன்றில் ஏறக்குறைய பத்து கோடி டன் எடையுள்ள நைற்றிரொஜன் என்னும் வாயு மின்னலால் நிலத்திற் பதிந்து அதற்கு எருவாகின்றது என்பதும், மின்னலின் வீச்சு ஆகாயத்தையும் காற்றையும் சுத்தஞ் செய்து உடம்பிற்கு நலம் புரிகின்றது என்பதும் இக்கால விஞ்ஞான அறிவினால் விளங்குகின்றன. ஆகையால் மின்சாரத்தால் தீமையும் உண்டு. நன்மையும் உண்டு என்று மானிடர்க்கு நன்கு அறிவுறுத்தியே அதனை ஏவல் கொள்ளும் ஆற்றலை அவர்க்கு இறையனார் அளித்துள்ளார். "மிக்க தீமையும் விளைக்கத்தக்க மின்சாரம் என்னும் மிகப் பெருஞ் சக்தியை மக்காள்! நீவீர் எல்லீரும் மிக்க அமைதியுடன் நும் நன்மைக்கே பயன்படுத்திக் கொள்வீராக!" என்று இறையனார் அவ்வாறு குறிப்பாக உணர்த்தியருளிய அறிவுரை என்றும் மானிடர் மறக்கத் தக்கதன்று; இது நிற்க.

மின்சார விஞ்ஞான அறிவிற்கு அடிப்படையான உண்மை சென்ற நூற்றுண்டின் பிற்பகுதியிலேயே ஆராய்ந்து அறியப்பட்டது. நம் உலகமும் கண்ணுக்குப் புலப்படாத அணுக்களால் ஆகியுள்ளது. ஆகாயத்திலுள்ள நுண்ணிய பொருள்களும் அவ்வாறே அணுக்களால் ஆகியுள்ளன. அவ்வணுக்கள் ஒவ்வொன்றும் ஒன்றற்கொன்று மாருன மின்சாரம் அமைந்த இருவகைப் பொடிகளால் ஆயது. ஆகையால் மின்சாரம் இல்லாத இடமும் பொருளும் எங்குமே இல்லை என்பதே அவ்வுண்மையாகும். அதனுல் மின்சாரம் என்னும் சக்தியைப் பிடித்து அதாவது செய்து பல வேலைகளையும் இயற்றிக் கொள்வது எளிதாயிற்று.

இனி, மின்சாரம் செய்யும் பல முறைகளையும் சிறிது நோக்குவோம். டைனமோ என்னும் இயந்திரத்தை நீர்வீழ்ச்சியால் இயக்கி மின்சாரத்தை மிகுதியாகவும், நயமாகவும் செய்து கொள்ளலாம். கம்பிகளின் வழியாகப் பின்னர் அதனைச் செலுத்தி நாம் வேண்டும் வேலைகளைச் செய்விக்கலாம்.

மின்சாரம் வீடு பெருக்கும், சமையல் செய்யும், பசுவைப் பால் கறக்கும், பல பொருள்களை உலர்த்தியோ வறுத்தோ பொடியாக்கும். நெல்லை வேவித்துக் குத்தி அரிசியாக்கும். பயறுகளைத் தோல் போக்கிப் பருப்பாக்கும்; ரொட்டிகளை மிக விரைவில் சிறு துண்டுகளாக அறுத்து அவற்றை வாட்டும்; துணிகளை உடுப்புகளாகத் தைக்கும். அவற்றை வெளுத்துச் சலவை செய்து, கஞ்சியிட்டு இஸ்திரி போடும்; விளக்கேற்றும், குளிர் காலத்தில் காய்ந்து அனல் தரும்: வேனிற் காலத்தில் வீசி வெம்மை குறைத்துப் பகலில் வேலை செய்விக்கும்; இரவில் தூங்குவிக்கும். வந்த விருந்தினரை மணி யடித்துத் தெரிவிக்கும்; அவர்க்குத் தலைவாயிலைத் திறக்கும். விரைவில் இயங்கும் படிக்கட்டுகளால் அல்லது ஏற்றத்தால் அவரை மேல் நிலை மாடத்தில் ஏற்றித் தலைவாயிற் கதவை அடைக்கும். வான் ஒலியையோ கிராமபோன் ஒலியையோ அவரும் அந்த நண்பரும் கேட்டு மகிழச் செய்யும்; தூரத் திலுள்ள தம் நண்பரோடு அவர் சல்லாபஞ் செய்ய உதவும்; உலகில் எங்குள்ள பெரியாரையும் அரும்பெரும் காட்சிகளையும் நேரிற் கண்டதுபோல் அவர்க்குக் காட்டும். நூல்களை, பத்யும்

திரிகைகளையும் அவர்க்கு அச்சிட்டுக் கொடுக்கும். அவர் இறங்கி வெளியே போகும் போதும் கதவுகள் முன் போலத் திறந்து மூடச் செய்யும், படிக்கட்டுகளாலும் அல்லது ஏற்றத் தாலும் அவரை இறக்கிவிடும். அவர் சிற்றுண்டிச் சாலைக்குச் சென்று குறிப்பிட்ட வகைப் பொருள்களுக்குக் குறிப்பிட்ட விலையைக் குறிப்பிட்ட இடத்தில் வைத்தும் அவ்வளவு பொருள்களை அவர்க்கு அளிக்கும். அவர் உண்டபின் அவ் வெச்சிற் கலங்கள், கரண்டிகள் முதலியவற்றை எடுத்துக் கழுவித் துடைத்து அடுக்கி உலர்த்தி அமைக்கும். பல்வேறு யந்திரங்கள் தன்னால் இயங்குவதை அவர்க்குக் காட்டும். சினிமாக் காட்சியால் அவரைக் களிப்பூட்டும். அவர் வரும் நாளையும், நேரத்தையும் உறவினர்க்குத் தந்தியடிக்கும். அவரை விரைவாக ஓடும் அல்லது பறக்கும் ஊர்திகளில் ஏற்றிச் செல்லும். இன்னும் அவர்க்கு எண்ணிறந்த வேறு தொண்டுகளும் இயற்றும்.

அன்றியும் அது முலாம் பூசும்; சித்திரவேலை செதுக்கும்; காந்தஞ் செய்யும், பல பொருள்களை விரைவிற் செய்து எண்ணிப் பொதியும்; உணவுப் பொருள்களைச் செய்து காற்றில்லாத காலங்களில் அளந்து வைத்து வாயை உருக்கி மூடும். எளிதில் கெட்டுப் போகக்கூடிய முட்டைகள், பழங்கள் முதலியவற்றைச் சூடு அணுகாதபடி செய்து காக்கும். பல நோய்களை நீக்கும். கிராமங்களிலும் மின்சாரம் மிகப் பயன்படுகிறது. அது வரம்பு, வாய்க்கால் முதலியன வெட்டும், ஏர் உழும், பரம்பு அடிக்கும், நீர் பாய்ச்சும் விதைக்கும், பயிரில் பூச்சிகள் விழாதபடி செய்யும், பயிர் விரைவில் வளர்ந்து, பெருங் கதிர்களும் காய்களும் உண்டாகும்படி உதவும். அறுவடை செய்யும். சூடு அடிக்கும். விளைவை அளந்து விலைமிக்க இடங்களுக்கு ஏற்றிச் செல்லும். கரும்பு ஆட்டிக் கட்டி செய்யும். பலவித எண்ணெய்கள் ஆட்டும். புல், வைக்கோல், மரம், பலகை முதலியன அறுக்கும். உலோகங்களை உருக்கி வார்த்துப் பல பொருள்கள் செய்யும். இன்னும் எத்தனையோ வேலைகளையும் இயற்றும்.

கடைசியாக மின்சாரம் அருளோடும் கூடியுள்ளது என்று கூறலாம். விலங்குகளின் உழைப்பை அது பெரும்பாலும்

ஒழித்து விட்ட காரணத்தால் மாத்திரமின்றி, வேறு ஒரு காரணத்தாலும் அது உண்மையாகும். முற்காலத்தில் மானிடர் சிறிய குற்றங்களுக்கும் பெரிய தண்டனைகள் விதித்து வந்தனர். கொலைத் தண்டனையோ எங்கும் மிகுந்திருந்தது. கல்லெறிந்தும், கழுவேற்றியும், தீயில் இட்டும், நீரில் ஆழ்த்தியும், சிலுவையில் அடித்தும் மலையிலிருந்து உருட்டியும், ஒன்பது முடிச்சுகளும் வளைந்த கம்பிகளும் உள்ள பச்சை வாரால் செய்யப்பட்ட கசைகளால் அடித்தும், இன்னும் பலவாருகச் சிறிதும் இரக்கமின்றி அத்தண்டத்தை இயற்றி வந்தனர். ஆகையால் இரக்கம் வாய்ந்த பிரஞ்சு மருத்துவர் ஒருவர் ஏறக் குறைய நூற்றி ஐம்பது ஆண்டுகளுக்கு முன் ஒரே வெட்டில் ஒரு நொடியில் தலையை வெட்டிவிடக்கூடிய கனத்த கூரிய கோடரி உள்ள கருவியொன்றை அமைத்தனர். மின்சாரக் கருவிகள் ஏற்பட்ட பின் சில நாடுகளில் கொலைக் குற்றஞ் செய்த குற்றவாளியை ஒரு வகை நாற்காலியில் இருத்தி இறுகக் கட்டி மின்சாரத்தை அவன் உடலிற் பாய்ச்சி ஒரு நொடியிற் கொன்று வருகின்றனர். இதனுல் அதிக வேதனை இராதென்பது பலர் கொள்கை. வெறி கொண்ட நாய் முதலிய விலங்குகளையும் மின்சாரத்திலேயே கொல்வதும் உண்டு. மின்சாரம் இன்றேல் இந்நன்மைகளெல்லாம் இல்லை. வான ஊர்தி இல்லை, சினிமாக் காட்சி இல்லை. அவற்ருல் விளையும் அளவற்ற நன்மைகளும் இல்லை.

ஆயினும், அதனுல் அளவற்ற தீமைகளும் இக்காலத்தில் எங்கும் நடைபெற்று வருவது மிக வருந்தத்தக்கது. ஆகையால் நம் இறையனுர் குறிப்பாக உணர்த்தியருளியதாக நாம் முன்னர்க் கண்ட அறிவுரை மானிடர் என்றும் மறக்கத்தக்கதன்று.

“மிக்க தீமையும் விளைக்கத்தக்க மின்சாரம் என்னும் மிகப் பெருஞ் சக்தியை, மக்காள்! நீவிர் எல்லீரும் மிக்க மதியுடன் நும் நன்மைக்கே பயன்படுத்திக் கொள்வீராக!”

12. தென்றலும் தென்தமிழும்

[வித்துவான். K. T. நீலகண்டன், அவர்கள், M. A.]

வாழும் உயிரினங்கள் எல்லாம் இன்பத்தையே விழைகின்றன. சிறப்பாக மக்கள் இன்ப நுகர்ச்சியையே தம் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டுள்ளனர் என்பதை மறுத்தல் இயலாது. மலர்களில், நீலவானில், மாதரார் முகத்தில், இழுமென் ஒலியுடன் வழிந்து விழும் அருவியில், மதி நிலவில், தண்ணீரில், வீசும் தென்றலில், பூம்பொய்கையில், வீணையின் ஒலியில், மக்கள் மெய் தீண்டலில், அவர்தம் சொற் கேட்டலில் யாண்டும் யாம் பெறுவதும் காண்பதும் இன்பமே.

இயற்கையில் நிறைந்துள்ள இவ்வின்பப் பெருக்கினை விடுத்து மக்களுள் பலர் செயற்கை யின்பங்காண முயலுகின்றனர். அவர்தம் போக்கினை என்னென்பது? மக்களின் போக்கினும் இழிந்தது எனலாம். அவர்கள் உலக இயற்கைக்கே மாறுபட்ட வாழ்வினை நடத்துபவர் என்று கூறினும் பொருந்தும். எனவே அவர்தம் இயல்பினை ஆராயாது விடுத்துத் தென்றலும் தென்தமிழும் எவ்வெவ்வாறு நமக்கு இன்பூட்டுகின்றன என்பதைப் பார்ப்போம்.

வேனிற்காலத்து மக்கள் பகலெல்லாம் உழைத்தும் தமக்குரிய கடனாற்றியும் காற்றின்மையால் புழுங்கும் போதெல்லாம் தென்றலை நினையாதிரார். மாலையில் அவர்தம் மேனியில் தென்றல் தண்ணென வீசும்போது அவர்கள் அடைகின்ற இன்பம் இத்தகையது என எடுத்துரைத்தல் இயலுவதொன்றோ?

இறைவனுக்கு அன்பு செய்து அவனருள் பெற்ற அடியார்களுள் காலத்தாலும் பிறவற்றாலும் முதன்மையுற்ற திருநாவுக்கரசர் சமணர்களோடு சேர்ந்து பல நாள் அவர்தம் கொள்கைக்குத் தம் ஆற்றலால் ஏற்றங்கொடுத்துத் தருமசேனர் என்ற அவர்தம் புகழுரையும் பெற்றார் என்பது வரலாறு கூறும் உண்மை. அப்பெருந்தகையார், இறைவனால்

ஆட்கொள்ளப்பெற்றுச் சைவமதந்தழுவினர். இதனைக் கேள்வியுற்ற சமணர்கள் அவரை ஒறுக்கும் வகையால் மன்னனைத் தூண்டி நம் அன்பரை நீற்றறையில் இடுமாறும் அரசரை ஏவுகின்றனர். அரசனும் அதை நிறைவேற்றுகின்றான். இறைவன் இன்னருளைக் கைவரப்பெற்ற அப்பர் அந்நீற்றறையில் இன்பத்தையன்றித் துன்பத்தைச் சிறிதும் கண்டாரில்லை. அவ்வின்பத்தை நமக்கு நன்றாக விளக்கிக்கூற விழைந்து "மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசன் எந்தை இணையடி நீழலே" என்று தண்டமிழ்ச் சொல்லால் படிப்போரும் கேட்போரும் எளிதில் உணரும்படி கூறுகின்றார். இதனுள் தென்றலையும் விடாது வீசுதென்றலும் என்ற அழகுமிக்க பொன் மொழிகளால் கூறுகின்றார் நாவுக்கரசர் எனின், யாம் எவ்வாறு அதன் பெருமையை அளவிட்டுக் கூறமுடியும்.

சொல்லேருழவர்களாகிய நாவலரும் பாவலரும், இன்பஞ் செய்யும்தென்றலைத் தம் ஆற்றலுக் கேற்றவாறு பாக்களிலும் நூல்களிலும் வியந்தும் புகழ்ந்தும் அதன் அசைவினைத் தம் நுண்மாண் நுழைபுலத்தைச் செலுத்தித் தம் குறிப்பையும் புகுத்திக்கூறுகின்ற முறை படித்துப் படித்து மகிழ்வதற்குரிய தொன்றும்.

சேர மன்னர் குடும்பத்தில் செங்குட்டுவற்குத் துணைவராய்த்தோன்றி, "நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம்" இயற்றிய இளங்கோ அடிகள், "மலையத்தோங்கி மதுரையில் வளர்ந்து புலவர் நாவில் பொருந்திய தென்றல்" என்றும், "வளங்கெழு பொதியில் மாமுனி பயந்த இளங்கால் தூதன்" என்றும், "இளிவாய் வண்டொடு இன்னிள வேனிலொடு மலய மாருதந் திரிதருமறுகு" என்றும் புகழ்கின்றார். இனி, கவிச் சக்கரவர்த்தியாகிய கம்பர், "தண்டமிழ்த்தென்றல்" என்று புகழ்கின்றார். இவ்விரண்டையும் அவர் இன்பஞ் செய்வனவற்றுள் சிரியன என்று கருதி ஒரு சேரக்கூறினர் போலும். அன்றித் தென்றல் தமிழொடுமிக்க தொடர்புடைய தென்பதைப் புலப்படுத்த விழைந்தனர் போலும்! தென்றல் விளைக்கும் இன்பத்தினைச் சமரச சன்மார்க்கக் கொள்கை

யுடைய இராமலிங்க அடிகள் இறைவனளிக்கும் இன்பத்துடன் ஒப்பிட்டுள்ளார். கோடையில், உயர்ந்து விரிந்த மர நிழலின்கீழ் உள்ள மேடையின் பக்கத்து ஓடும் மலரோடையில், படிந்து வீசும் காற்றினை, "மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்றே", எனப்புகழ்ந்தது படிப்பார்க்கு எவ்வளவு இன்பமூட்டுகின்றது.

உறங்கிக்கிடந்த தமிழர்களுக்கு எளிய இன்தமிழ்ப் பாடல்கள் பாடி அவற்றின் மூலம் நாட்டுப் பற்றினை யூட்டி, புகழுடம்பை நிலை நிறுத்திய தேசியகவி. சுப்பிரமணிய பாரதியார் சிறப்பித்த கம்பரும் இளங்கோவும் முற்கூறியவாறு புகழ்கின்றனர் எனின் பிற்காலப் புலவர்கள் புகழ்வதைக் கூற வேண்டுமோ?

பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த சொக்கநாதப்புலவர் என்பார், "தென்றல் விடு தூது" என்ற சிறு நூல் ஒன்று இயற்றியுள்ளார். அதில் இன்பம் கருதித் தூது விடும் பொருள் இன்பம் பயப்பதாகவே இருக்கவேண்டும் என்று போலும், தூது விடுவதற்குரிய அன்னம், மயில், மேகம் குயில் கிள்ளை, நாகணவாய்ப்புள், வண்டு, பாங்கி, நெஞ்சு, தென்றல் ஆகிய பத்தினுள் தென்றலைத் தேர்ந்தெடுத்தார். அவர் தம் நூலில், 'செந்தமிழின் பின்னுதித்த தென்றலே' என்றும் திருமாலின் பத்து அவதாரங்களும் காற்றின் பத்து வகையைப்போல் சிறந்தனவல்ல என்றும் கூறுகின்றார். இன்னும் குமரகுருபரர் 'தென்னந் தமிழின் உடன் பிறந்த சிறு கால்' என்று மீனாட்சியம்மைப் பிள்ளைத் தமிழில் தாலப் பருவ முதற் செய்யுளில் புகழ்கின்றார். பிற்காலப் புலவர்களனைவரும் மக்கட்கு இன்பஞ் செய்வதில் இணையின்றி விளங்கும் தண்டமிழையும் தென்றலையும் ஒரேயிடத்தில் பொதிகை மலையில் பிறந்தனவாகக் கருதி ஒருங்கே கூறினர்.

"பழம்பாடற் கலைமாச் செல்வர்" களில் ஒருவர் தென்றல் மிகமிக மென்மையாக இளவேனிற் காலத்து மாலைப் போதில் அசைந்தசைந்து வருகின்றது என்று கூற விழைகின்றார். அதன் அசைவிற்கு உவமை கூற விரும்பிய அப்புலவர் "மங்கல மங்கையராய், மன்னவர்கன்னியராய், மைந்தர் வயிற்றினராய், திங்கள் நிறைந்தவராய் சேயிழையார் நடைபோல்

தென்றல் சைந்துவரும்'' எனக் கூறி மகிழ்கின்ருர். நம்மையும் மகிழ்விக்கின்ருர். இதனைப் படிப்பவர் நகைக்காமலிரார் அஃதன்றியும் புலவனின் புலமையையும் வியவாதிரார். இவ்வாறெல்லாம், புலவர்செந்நாவால் பாடப்படும்புகழுடையதாய் விளங்குகிறது தென்றல். இனித் தென்றமிழ் இன்பஞ் செய்யும் வகையினைக் காண்போம்:

SCANNED

இயற்கைச் சூழல்களுக்கிடையே விளங்கும் நந்தம் செந், தமிழ் நாட்டில் வாழ்ந்து இன்றமிழ் பேசி இன்புற்ற தமிழர், களாகிய நம் முன்னேர், நம் தமிழ் மொழிக்கு இனிமை என்று பொருள் தரும் ''தமிழ்'' என்னும் சொல்லையே பெயராகச் சூட்டினரெனின் அவர்தம் அறிவுத் திறனை என்னென்று புகழ்வது?

தெய்வத் தன்மை பொருந்திய மாசற்ற தமிழிளங்குழவிகள் பேசத் தொடங்கும் காலத்துக் கூறும் சொற்கள் பொருளற்றனவேனும் நமக்கு அவை இன்பம் பயக்கின்றன. அவ்வின்பத்திற்கு நிகர் உலகத்தார் கூறும் குழலோசையும் யாழோசையும் கூட ஈடாகா. அதனை விட்டுக் குழலும் யாழுமே இன்பந் தருவன என்பார் மழலைச் சொற் கேளாதார் என்று ''ஒரு குலத்திற்கு ஒரு நீதி வழங்காது'', ''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்'' என்ற கொள்கையை எடுத்துக் காட்டும் பொதுமறையாம் திருக்குறளை அமிழ்தினுமினிய தமிழினில் இயற்றி, உலகிற்கு வழங்கி, வான்புகழ் கொண்ட வள்ளுவப் பெருந்தகையார் கூறுகின்ருர். நம் தெய்வப் புலவர் :

> '' குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
> மழலைச்சொற் கேளா தவர்''

என்று இழுமென் மொழியால் விழுமிய பொருள் புகன்ருர் எனின், தண்டமிழால், நம் பொன்னிளஞ்சிருர் மழலை மொழியும்போது உண்டாம் இன்பப்பேற்றினை யாம் என்னென்போம். மழலை மொழியே இன்பம் பயப்பதெனின் தமிழிலுள்ள சொற்களனைத்தும் இன்பந்தருவன என்று தட்டின்றிக் கூறலாமன்ருே ? அன்ருடம் வாழ்க்கையில் பயன்படுத்தும் சொற்களே அதற்கு நல்ல சான்ருகும். எடுத்துக் காட்டாகச் சில காட்டுதும். வழக்கம், பழக்கம், பழம், அழகு, குழல் தோழன், ஏழை, விழி, வாழ்வு, புகழ், உழைப்பு, ஊழ்

SCANNED